2-7-49

ஸ்ரீராமாநுஜன் வெளியீடு நெ.5.

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியரால்
ஸ்ரீபதரிகாச்ரம த்விதீய யாத்ரையில்
பஞ்சவடீ க்ஷேத்ர தபோவனத்தில் எழுதப்பட்டு
ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி திருமலை திருப்பதி
சின்ன ஜீயர் ஸ்வாமி ஸன்னிதிக்கு அனுப்பப்பட்டு
அந்த ஸ்வாமி திருக்கண் சாத்தி யுகந்தருளி

# ஸ்ரீ வைஷ்ணவ மஹாநிதி

என்று பெயரிடப் பெற்றது.

1. முப்பத்திரண்டு மொழிமாலை.
2. ஸாது ஸாத்விக ஸம்வாதம்.
3. மாமுனிவன் மேற்கோள் விளக்கு.

சென்னை அட்வொகேட். K. திருவேங்கடாசார்யரால்

சென்னை ரத்னம் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

இதன் விலை 0—12—0. 16-11-73.

15-6-49.

acharya.org

ஸ்ரீ:

## மதுரை ஸத்ஸம்ப்ரதாய ஸபையின் நிரந்தர அக்ராஸனரும் “மநீஷிமான்ய” பிருதாலங்க்ருதருமான ஸ்ரீமான் உ. வே. ராவ்பஹதூர். R. நரஸிம்ஹய்யங்கார் ஸ்வாமிகளின் ஸ்ரீமுகம். (2—6—49)

ஸ்ரீ ராமாநுஜன் பத்திரிகை—நிர்வாஹ ஆசிரியர்க்குத் தெரிவித்துக்கொள்வது. ஸ்ரீ. உ. வே. ஆசார்யஸ்வாமிகள் பதரிகாச்ரமயாத்திரை யெழுந்தருளியிருப்பதால் தற்காலம் ஸ்வாமிகளின் விலாசம் எனக்குத் தெரியாததால் இதை உங்களுக்கு எழுதுகிறேன். ஸாத்யமானால் இந்த சிறுவிண்ணப்பத்தை அடுத்த ஸ்ரீராமாநுஜனில் பிரசுரம் செய்ய ஏற்பாடு செய்யவேணும். ஷோடசாத்யாயி புஸ்தகம் அடியேனுக்கு பத்திராதிபர் அனுப்பியுள்ளார். படித்தேன். நேராகவும் மறைவாகவும் அவர் வர்ஷித்திருக்கிற கடுஞ்சொற்களின் குவியலைப் படித்தேன், ஆராயப்புகுந்தேன். அவர் வெளியிட்ட பரந்தரஹஸ்யத்தை V. P. மூலமாகத்தருவித்து அதையும் படித்தேன். இரண்டு முகவுரைகளையும் 44-ம் பக்கம் குறிப்பையும் கவனித்தேன். இவைகளைப் பார்க்கவே அப்புஸ்தகம் தருவிக்ககப்பட்டது. அடியேனுக்குத் தோன்றினது சரியோ தப்போ, அந்தக்கரண சுத்தியுடன் உலகுக்கு இதை உணர்த்துகிறேன். “கி. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களால் பரிசோதிக்கப்பட்டு” என்று கண்டிருப்பதில் ஸ்ரீஸ்வாமிகளின் ஸம்பந்தத்தை அடியோடு விலக்கியது மிகவும் தப்பு. K. ஸ்ரீநிவாஸய்யங்கார் பதிப்பாசிரியர் என்ற ஸ்தானத்தில் மாத்திரமே நின்றிருக்கவேண்டும். அவர் அதிகப்படியான கியாதிகளுக்கு ஆசைப்பட்டு மிகவும் அநாவச்யகமாக பாகவதாபசாரத்தில் தலை நின்றுவிட்டார். இதைத் தெரிவிப்பதற்காக எனக்கும் வேண்டிய ஸம்பாவனைகள் செய்யவே போகிறார். அதற்காக நான் சிரமப்படமாட்டேன். உண்மையை உலகுக்குத் தெரிவிக்கவேண்டியது என்போல்வாருடைய கடமை. ஷோடசாத்யாயியுடன் ஃபுட் நோட்டீசும் வெளியிட்டிருப்பது ஓர் கூத்து என்றே சொல்லுவேன் இவருக்கு ஒரு டாமேஜூம் தெரியவில்லையே. ஸ்வாமிக்கு இவர் செய்திருக்கும் அக்ரமம் கணக்கில் அடங்காதவையே. சுவாமிகள் அவைகளில் கொஞ்சமும் கண்செலுத்தாமல் அடியேனைப்போன்ற சாதகபக்ஷிகள் எதிர்பார்க்கும் விஷயங்களுக்கு மாத்திரம் மதுரமான பதில் அமுதமொழிகளை அருளிச்செய்து ஸ்ரீ வைஷ்ணவவுலகைக் குளிரச் செய்தருளப் போகிறார்களென்று நம்பியிருக்கிறேன்.

இங்கே, உலகம் போற்றும் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் சுவாமி, தற்காலம் திருப்பதி சின்ன ஜீயர் பதவியை அலங்கரித்திருக்கின்ற மஹாவித்வான் ஸாது. ராமாநுஜாசார்ய ஸ்வாமி போன்ற பெரியார்களிடம் காலக்ஷேபம் கேட்ட மஹான்கள் பலர் உண்டு. அவர்களில் ஒருவரும் K. ஸ்ரீநிவாஸய்யங்காருடைய விஷய விசாரத்தை நம்பவில்லை. தத்வத்ரய வியாக்கியானத்திலுள்ள விசதவாக் சிகாமணிகளின் ஸ்ரீ ஸூக்தியை ஷோடசாத்யாயியில் விபரீதமாக்கி யிருப்பதற்கு வித்வான்கள் வருந்துகிறார்கள். அது ஸரிதானென்று நிரூபணம் செய்ய எந்த வித்வான் துணிந்து வெளிவருவாரோ, அதுதான் பார்க்கவேண்டும்.

அடியேன்,

**R. நரஸிம்ஹன் (வக்கீல், மதுரை.)**

acharya.org

ஸ்ரீ:

## ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி. திருமலை திருப்பதி
# சின்னஜீயர் ஸ்வாமியின் திவ்ய ஸ்ரீமுகம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



ஸ்ரீமத் வரவரமுநயே நம:.

நம்முடைய ஸத்ஸம்ப்ரதாயத்தில் ஊற்றமுள்ள மஹான்களுக்கு அடியேன் இதனால் விஜ்ஞாபிப்பது :—

ஸ்ரீகாஞ்சி. பிரதிவாதிபயங்கரம் ஸ்வாமி சிலமாதங்களுக்கு முன் வெளியிட்டருளின ஆச்சான்பிள்ளை யஷ்டாத்யாயி யென்னும் ஸ்ரீகோசத்தைப் பற்றி அடியேனுடைய அக்ருத்ரிமமான அபிப்ராயத்தை முன்னமே விஜ்ஞாபித்துக் கொண்டேன். அதன்மேல் ஏதேனும் பிரதிவாதங்கள் தோன்றினாலும் அதைப் பொருள்படுத்தி ஸ்வாமி ஒன்றுமே யெழுதக்கூடாதென்றே அடியேன் ப்ரார்த்தித்திருந்தேன். வ்ருதாவான தூஷணைகள் வெளிவருமே யொழிய விஷயமென்பது ஈஷத்தும் வெளிவராதென்கிற திடமான எண்ணத்தினால் தான் அடியேன் அப்படி ப்ரார்த்தித்தது. எண்ணினபடியே எதிர்வாத புஸ்தகம் வெளிவந்தது........ஸ்ரீகாஞ்சி ஸ்வாமி பஞ்வடீ க்ஷேத்ரத்திலிருந்து முப்பத்திரண்டு மொழிமாலை, ஸாது ஸாத்விக ஸம்வாதம் என்கிற இரண்டு விஷயங்களை யெழுதி கையெழுத்துப் பிரதியாகவே அடியேனுக்கனுப்பி, இவை யுக்தமாகத் திருவுள்ளத்தில் பட்டால் அச்சுக்கு நியமிப்பது என்று மெழுதியிருந்தார். இரண்டையும் பூர்த்தியாக வாசித்துப் பார்த்ததில் விஷயங்கள் யாவும் மிகவும் ஸம்ப்ரதிபந்நங்களாயும் ஸாத்விக போக்யங்களாயும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அவச்யஜ்ஞாதவ்யங்களாயும் தோன்றினபடியால் ஸ்ரீவைஷ்ணவ மஹாநிதி யென்று திருநாமஞ்சாத்தி, ஸ்வாமி தெரிவித்திருந்தபடி அச்சுக்கும் அனுப்பலாயிற்று. விவாத விஷயங்களில் நோக்கில்லாதவர்களும் இதினுடைய போக்யதையை அவச்யம் அனுபவிக்கவேணு மென்பது அடியேனுடைய அவா.

ஸ்ரீராமாநுஜ. சின்ன ஜீயர், திருப்பதி.

acharya.org

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
இந்தக் கிரந்தம்
தேசிக ராமாநுஜ தாசனுக்கு
சொந்தம்.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

# முப்பத்திரண்டு மொழிமாலை.

(ப்ர—அ.)

மன்னு மணவாள மாமுனிவன் மாமலர்த்தாள்
என்னுடைய நற்செல்வ மேன்றிசையும்—துன்னுபுக
ழாரியர்கள் தாளை யனவரத மேத்துதலாங்
காரியமே நந்தமக்குக் கண்.

முப்பத்திரண்டு மொழிமாலை யென்றிட்டுச்
செப்பஞ் செழிக்கச் சிறந்துரைக்கேன்—துப்புடையார்
கண்ணாரக் கண்டுகந்துங் காதாரக் கேட்டுகந்தும்
திண்ணார வோர்வார் தெரிந்து.

1. ஒன்றபேசினு மெழுதினும் அது உலகம் உகந்து ஏற்கும்படியும் நீடூழி நின்று புகழ்பெறும்படியும் அமையவேணும். மானிடர்க்குப் பரஸ்பரம் மாச்சர்யம் மீதூர்ந்து நிந்தைகளைப் பொழிந்துகொள்ளுதல் இவ்விருள்தருமா ஞானத்திற்கு மிகவு மேற்ற இயல்பாம். அப்படிப்பட்ட நிந்தை மலிவிந்தைகளைப் பத்திரிகைகளிலும் புத்தகங் களிலும் பரவவிடுவதனால் சில பாமரர்கள் களிக்கலாமத்தனை. பண்டிதர்களும் பெரியாரும் மிகவுமருவருக்கும்படியான அத்தகைய நிந்தைகளுக்கு அடியேன்பால் ஈஷத்தும் எதிரொலி தோன்றாதபடிக்கு பகவத்பாகவத க்ருபாகடாக்ஷத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

2. அடியேனை நோக்கிப் பொய்யனென்றும் வஞ்சகனென்றும் இனைய ஸத்கார ஸூக்திகளைப் பெரியார் எவ்வளவு அநுக்ரஹித்தாலும் அதில் இறையும் வெருப்போ வெகுளியோ விளையாது. ஸ்ரீராம ப்ராவண்யமே வடிவெடுத்த பரதாழ்வான் விஷயத்தில் குஹப்பெருமாளும் பரத்வாஜமுனிவரும் இளைய பெருமாளும் பேசினவை ஸ்ரீராமாயண ப்ரஸித்தம். அவற்றால் அப்பரதனுடைய புகழ்ப் பெருமைக்கு என்ன மாசு வந்திட்டது. * தாமேவ இக்ஷ்வாகு நாதஸ்ய பரதஸ்ய கதாம் குரு * என்று சக்ரவர்த்தி திருமகனார் இடைவிடாது வாய்வெருவும்படியன்றோ அமைந்தது அவன்றன் பெரும்புகழ்.

3. பரந்த ரஹஸ்ய மருளிச்செய்த ஆசிரியரின் திருநாமத்தை மணவாளமாமுனிகளின் திவ்ய ஸூக்திகளைக்கொண்டு நிஷ்கர்ஷிக்கவேண்டிய தொன்றே நல்லார்க்குற்ற நற்பணி. 1. மாமுனிகளுக்கு முற்பட்ட ஆசிரியர்களின் திருவாக்கு, 2. பிற்பட்டவர்களின் திருவாக்கு, 3. மாமுனிகளின் திருவாக்கு—என மூன்றுவகுப்பாக்கி முதலிரண்டு வகுப்புகளைத் தள்ளி மூன்றாவது வகுப்பொன்றையே நாம் முக்கியமாகக் கொண்டோம்; இதற்குக் காரணமும் விரியவுரைத்தோம் பண்டே; மீண்டும் சிறிது நினைப்பூட்டுகிறோம்; சிறிய வாச்சான்பிள்ளை தோன்றாதகாலத்தில் (பெரிய) என்னும் விசேஷணத்திற்கு விசேஷ ப்ரயோஜனமில்லாமையாலே முற்பட்டவர்கள் ஆச்சாபிள்ளையென்றே சொல்லிப் போந்தாலும் எழுதிப்போந்தாலும் அதனால் விவாதாஸ்பத விஷயத்தில் ஒரு நிர்ணயம் பெற இயலாது. பிற்பட்டவர்கள் இருள் துயக்குமயக்குகளில் நம்மோடொத்தவர்களே யாதலால் அன்னவர்களது வாக்குக்களைக்கொண்டும் நாம் ஒரு நிஷ்கர்ஷம் பெற வழியில்லை. இப்படியன்றிக்கே மணவாளமாமுனிகளின் திருவாக்கு எவ்விதமான ஸந்தேஹ விபர்யயங்களுக்கும் ஈஷத்தும் ஆஸ்பதமன்றிக்கே தெள்ளறிவை யூட்டத் தோன்றியதாதலால் ப்ரக்ருத விஷயத்தில் அஃதொன்றே நமக்குத் தஞ்சம்.

acharya.org

4. பரந்த ரஹஸ்யம் ஆச்சான்பிள்ளை யருளிச்செய்ததே யன்றிப் பெரியவாச்சான் பிள்ளையருளிச் செய்ததன்று என்பதை அடியேன் பலபல சான்றுகளால் தெரிந்துகொண்டேனாயினும் அவற்றுள் ஒன்றேயொன்றுதான் தலைமைபெற்றுளது. அதைத்தான் அஷ்டாத்யாயிக்கு ஆருயிராக அடியே னெடுத்துக் காட்டியுமிருப்பது. மற்றவற்றில் விசாரங்களை அடியோடு மறந்திட்டு இஃதொன்றில் மாத்திரம் முந்துற விசாரம் செய்வோம். இதில் அடியேன் மருள்கொண்டவனென்று மத்யஸ்தர்களான மஹநீயர்கள் கூறிவிடுவரேல், வேறு பல ப்ரமாணங்கள் அடியேனுக்கு எவ்வளவு ஸாதகங்களா யிருந்தாலும் அவற்றை யெடுத்துப் பேசுவது தவிர்ந்து கைகூப்பி நிற்பேனென்பது திண்ணம். மணவாளமாமுனிகளின் திவ்ய க்ரந்தங்களைத் திருவரங்கம் பெரியகோயில் ஸ்ரீபுல்லிபுத்தூர் வானமாமலை ஆழ்வார் திருநகரி திருவாலி திருநகரி முதலான திவ்யதேசங்களில் அந்நாள்தொடங்கி இந்நாள் வரையில் ஸத்ஸம்ப்ரதாய பரம்பரையாக ப்ரவசநம் செய்துபோரும் பெரியார் பலர் எழுந்தருளியிருக்கின்றார்களன்றோ. அவர்கள் பரந்த ரஹஸ்யத்தைப் பற்றின விசாரத்தில் சிறிதும் ப்ரவேசிக்கவேண்டா; அடியே னெடுத்துக்காட்டும் மணவாளமாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்தி யொன்றைப் பெரியார்கள் எங்ஙனே நிர்வஹித்துப் போருவது என்பதொன்றிலேயே அவர்கள் கருத்தைச் செலுத்துக.

5. தத்வத்ரயத்தில் அசித்ப்ரகரணத்தில் "ஸ்பர்சதந்மாத்ரை தொடக்கமான" இத்யாதி சூர்ணைக்கு மணவாளமாமுனிகளின் வியாக்கியானம் மிகவிரிவானது. அங்குப் பிள்ளைலோகாசர்யர் (மூலத்தில்) சிலவிஷயங்கள் அவச்யம் அருளிச்செய்யவேண்டியிருந்தும் ஸம்க்ஷேபமாக அருளிச் செய்கிற க்ரந்தமாகையாலே அருளிச்செய்யாது விட்டிட்டாரென்று மாமுனிகள் முடிக்கிறார். அங்கு அவச்யமருளிச் செய்யவேண்டிய விஷயங்கள் எவை என்பதை மாமுனிகள்தாமே விரிவாகக் காட்டியருளுகிறார். (அதையிங்குச் சிறிது விவரிக்கிறேன்.) பூதாதியென்று சொல்லப்படுகிற தாமஸாஹங்காரத்தில்நின்றும் சப்ததந்மாத்ரை பிறக்கும்; இதில்நின்றும் ஆகாசமும் ஸ்பர்சதந்மாத்ரையும் பிறக்கும்; இதில்நின்றும் வாயுவும் ரூபதந்மாத்ரையும் பிறக்கும்; இதில்நின்றும் தேஜஸ்ஸும் ரஸதந்மாத்ரையும் பிறக்கும்; இதில் நின்றும் அப்பும் கந்ததந்மாத்ரையும் பிறக்கும்; இதில் நின்றும் ப்ருதிவி பிறக்கும்—என்று முந்துற வொருவிதமாக உத்பத்திக்ரமத்தையருளிச் செய்து, உடனே "ஸபர்சதந்மாத்ரை தொடக்கமான நாலு தந்மாத்ரைகளும் ஆகாசந் தொடக்கமான நாலு பூதங்களுக்கும் கார்யமாய் வாயுதொடக்கமான நாலுபூதங்களுக்கும் காரணமாயிருக்குமென்றுஞ் சொல்லுவர்கள்" என்று பக்ஷாந்தர மொன்றையும் அருளிச்செய்துவைத்தார் (மூலத்தில்) பிள்ளைலோகாசார்யர்.

6. இங்கு முக்கியமாக ஒருவிஷயம் சொல்லப்பட வேண்டும்; அதாவது—கார்யோத்பாதகங்களான தத்வங்களானவை தம்தம் காரண வஸ்துக்களினால் ஆவரணம் பெற்றே உத்பாதநம் செய்கின்றன என்பது சொல்லப்படவேண்டும். த்வக்கு இல்லாத பீஜத்திற்கு உத்பாதநசக்தி (அங்குரசக்தி) யில்லாதாப்போலே ஸ்வஸ்வகாரணாவரணமற்ற தத்வங்கள் உத்பாதநம் செய்யமாட்டா என்பது சாஸ்த்ரங்களின் கொள்கை.

7. இதை மணவாளமாமுனிகள் ப்ரமாண விசேஷங்களைக் கொண்டு நிரூபித்தருளி, முடிவில் "இது தத்வத்ரய விவரணத்தில் ஆச்சான் பிள்ளையருளிச்செய்த க்ரமம்" என்று அருளிச் செய்து, உடனே "இங்ஙனன்றிக்கே தத்வநிரூபணத்திலே ஜீயருளிச் செய்ததொரு க்ரமமுண்டு" என்று தொடங்கி விரிவாக வொருக்ரமத்தை யெடுத்துக்காட்டியருளி, இவ்விரண்டு க்ரமங்களுக்கும் அந்யோந்ய விரோதமில்லை யென்பதையும் உபபாதித்தருளினர்.

8. பிறகு நிகமனஞ் செய்தருளுமிடத்து, ஆச்சான் பிள்ளை தத்வத்ரயவிவரணத்தில் தந்மாத்ரத்துக்கு ஆவரணம் சொன்னாப்போலே அதன்விசேஷத்துக்கும் ஆவரணம் சொல்லியிருக்கவேண்டும்; ஆனாலும் அதுவும் சொல்லப்பட்டதாகவே கொள்ளவேணும். அப்படி

acharya.org

கொள்ளப்படாவிடில் உத்பத்தியே ஸங்கதமாகாதன்றோ—ஆகையால் இரண்டுங் கொள்ள வேணும்—என்று ஒருவிஷயம் முடித்தருளினார்.

9. இதற்குமேல் வாதிகேஸரி ஜீயருடைய தத்வ நிரூபண க்ரந்தத்தில் இப்படி ஒன்றை உபலக்ஷண மர்யாதயா கொள்ளவேண்டாமல் இரண்டும் வ்யக்தமாகவே சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிவித்தருளி, ஆனாலும் அவருடைய திருவாக்கில் விசேஷத்தினுடைய உத்பத்திக்கு முன்னே தந்மாத்ரத்துக்கு ஆவரணம் கொள்ளவேணும்—என்றருளிச் செய்தார். ஆக, ஆச்சான் பிள்ளை க்ரந்தத்தையும் வாதிகேஸரி க்ரந்தத்தையுங்கொண்டு மாமுனிகள் நிகமனஞ் செய்தருளினது பூததந்மாத்ரஸ்ருஷ்டி சொல்லுகிற இந்த ஸ்தலத்தில் ஆவரணக்ரமமும் சொல்லியே யாகவேணுமென்று.

10. ஆனால் பிள்ளை லோகாசார்யர் மூலத்தில் ஆவரணக்ரம ப்ரஸ்தாவமே செய்தருளவில்லை. இது அநபேக்ஷிதமாகையாலே அருளிச் செய்யப்படவில்லை யென்று சிலர் எண்ணிவிடக்கூடுமென்று கருதிய மாமுனிகள் "இப்படி பூததந்மாத்ரஸ்ருஷ்டி சொல்லுகிறவிடத்திலே ஆவரணக்ரமம் வக்தவ்யமாயிருக்கச் செய்தேயும் அருளிச்செய்யா தொழிந்தது அபேக்ஷிதமல்லாமையன்று; ஸங்கோசேந உத்பத்திக்ரமத்தையருளிச் செய்தாரித்தனை" என்றெழுதியருளினர். சொல்லவேண்டியது அவச்யமாயிருந்தும் ஸங்க்ரஹருசியாலே சொல்லாது விட்டிட்டாரென்றபடி.

அதற்கடுத்த வாக்கியம்—

"பெரிய வாச்சான் பிள்ளையும் இப்படியிறே யருளிச்செய்தது" என்பதாம்.

ஸங்க்ரஹேண உத்பத்திக்ரமத்தைச் சொல்லுகையினாலேயே ஆவரணக்ரமத்தைச் சொல்லாது விட்ட பிள்ளைலோகாசாரியர்போலவே பெரிய வாச்சான் பிள்ளையும் அதைச் சொல்லாது விட்டிருக்கின்றார் என்பதே இதற்குப் பொருள். வேறுவகையான பொருள் ஸர்வாத்மநா அஸம்பாவிதம்.

11. இங்குப் பிறர் சொல்லும் பொருள் யாதெனில், கீழே ஆச்சான் பிள்ளை யென்கிற சொல்லினால் குறிக்கொள்ளப்பட்ட ஆசிரியரேதான் முடிவில் பெரியவாச்சான் பிள்ளை யென்ற சொல்லால் விளக்கப்பட்டாரென்று. இது ஒரு விதத்திலும் பொருந்தக் கூடியதன்று. ஆவரணக்ரமத்தைச் சொல்லியிருப்பவ்ராக நன்கு நிரூபிக்கப்பட்ட ஆச்சான் பிள்ளை யானவர் தத்ப்ரஸ்தாவமும் செய்தருளாத பிள்ளை லோகாசார்யரோடு எப்படி ஸாம்யம் பெற முடியும்? இந்த ஸாம்யம் நெஞ்சிலும் நினைக்கமுடியாததன்றோ.

12. ஆச்சான் பிள்ளை ஆவரணக்ரமத்தின் ஒரு பாகத்தைச் சொன்னாரேயொழிய மற்றொருபாகத்தைச் சொல்லவில்லை யென்பது தெளிவாக விளங்குகிறது என்று இதை உபஷ்டம்பகமாகக் கொண்டு பிறர் எழுதுவது சாஸ்த்ராஜ்ஞ ஸரணிக்குச் சேராது. சாஸ்த்ர வாஸனை யில்லாதவர்கள் இதை அவகாஹித்துக் கொள்வதுமரிது. முன்னே மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்தி எங்ஙனே யுள்ளதென்று பார்க்கவேணும்; "(ஆச்சான் பிள்ளை) தந்மாத்ரத்துக்கு ஆவரணம் சொன்னதுபோலே தத்விசேஷத்துக்கு ஆவரணம் சொல்லிற்றில்லையே யாகிலும் அது உபலக்ஷணமாமித்தனை;.........இரண்டுங் கொள்ள வேணும்" என்று மாமுனிகள் அருளிச் செய்துள்ளார். "உபலக்ஷணமாமித்தனை" என்றதன் தேறுதலை சாஸ்த்ரஜ்ஞர்களே யன்றோ அறியமுடியும்.

13. 'ஆச்சான் பிள்ளை மற்றொரு பாகத்தையும் சொல்லாது விட்டவரல்லர்; சொல்லியே யுள்ளார்' என்பதன்றோ மாமுனிகளின் முடிவு. இவ்விதமான முடிவு பிள்ளை லோகாசார்யருடைய மூல ஸ்ரீஸூக்தி விஷயத்தில் கிடையாதே. சொல்லவேண்டிய ஆவரணக்ரமத்தை அடியோடு ப்ரஸ்தாவியாத லோகாசார்யருக்கும் அதைப் பூர்த்தியாகச் சொன்னவராகவே நிகமிக்கப் பெற்ற ஆச்சான் பிள்ளைக்கும் ஸாம்யம் ஒரு படியாலும்

acharya.org

பொருந்தாது. "பிள்ளை லோகாசார்யர் ஸங்கோசேந உத்பத்தி க்ரமத்தையருளிச் செய்தாரித்தனை" என்றிவ்விதமாகப் பங்க்தியை மாமுனிகள் அருளாமல் "உபலக்ஷணமர்யாதயா இங்கு ஆவரணமும் சொல்லிற்றாகக் கொள்ளக்கடவது" என்று இங்ஙனே பங்க்தியருளிச் செய்திருந்தாராகில் ஆச்சான் பிள்ளைக்கும் லோகாசார்யர்க்கும் இவ்விஷயத்தில் ஒருவாறு ஸாம்யம் நெஞ்சிலாவது நினைக்கமுடியும். அப்போதும் "பெரியவாச்சான் பிள்ளையு மிப்படியிறே அருளிச் செய்தது" என்கிற வாக்யத்திற்கு ஸமந்வய லேசமுங் கிடையாது பிறர் கூறும் பொருளில். கீழ்ச்சொன்ன ஆச்சான் பிள்ளையைப் பற்றியே இது சொல்வதானால் அவருடைய நிரூபண விஸ்தாரத்தைக் கீழே விவரித்திருக்கவே வேண்டா.

14. தவிரவும், பெரியவாச்சான் பிள்ளையையே ஆச்சான் பிள்ளையென்று மாமுனிகள் திருவுள்ளம்பற்றி ஸ்ரீஸூக்திஸாதிப்பவராகில், பெரியவாச்சான் பிள்ளை என்கிற ஸவிசேஷநிர்தேசத்தை முந்துறமுன்னும் செய்துவிட்டு ஆச்சான்பிள்ளையென்கிற நிர்விசேஷ நிர்தேசத்தைப் பின்னை பின்னை செய்தருளியிருப்பர். இதுதான் க்ராந்திகஸரணி. அதே ப்ரகரணத்தில் நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டருடைய ஸ்ரீஸூக்திகளைப்பலகால் உதாஹரித்தருளாநின்ற மாமுனிகள் முதன்முதலான நிர்தேசத்தில் 'நடுவில் திருவீதிப்பிள்ளைபட்டர்' என்று ஸவிசேஷமாக எழுதியருளி, பின்னை பின்னை 'பட்டர்' என்று மாத்திரம் நிர்விசேஷமாக எழுதியுள்ளபடியைப் பல்காலுங்காணுநின்றோம்.

15. க்ராந்திகஸரணியென்று கொண்டு தெரிவிக்கப்படும் இவ்விஷயம் நிற்க. அர்த்தஸ்திதியை நோக்கிச் சொல்லுமிடத்தும் "பெரியவாச்சான் பிள்ளையுமிப்படியிறே யருளிச் செய்தது" என்கிற பங்க்திக்குப் பிறர் ஏறிடும் பொருள் சிறிதும் ஏறமாட்டாததன்றோ. ஏறும், ஏறாது என்பதை நிர்ணயிக்கவேண்டிய பொறுப்பு வாதிப்ரதிவாதிகளுடையதன்று, மத்யஸ்தமஹநீயர்களுடையதேயாகும். உபய வேதாந்தக்ரந்த காலக்ஷேபப்ரவணர்களான ப்ரவீணர்களுக்கே இந்தப்பொறுப்பை நாம்விட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட மஹநீயர்கள் ஒருமிடறாகத் தம் தம் திருவுள்ளத்தை வெளியிட்டாயிற்று. இனி, "மாமுனிகளின் திருவுள்ளம் இப்படியன்று, நீ கொண்டது பிசகு" என்று நிரூபிக்கவல்ல பெரியாருளரேல் நன்கு நிரூபித்தருளி அடியேனைத்தெளிவிக்கலாம். இந்தப் பொறுப்பு மத்யஸ்தமஹநீயர்களுக்கே விடப்பட்டிருக்கின்றதென்பதை புந: புநரபி விஞ்ஜாபயே.

16. இதற்குமேல், பெரியவாச்சான் பிள்ளை அப்படி ஸம்க்ஷேபேண அருளிச் செய்தது இன்னவிடத்தில் என்பதை மாமுனிகள் காட்டியருளாதது குறையன்றோ என்கிற வாதம் தோன்றியுள்ளது. கேண்மின்; அவ்விடத்திலேயே (103) "ஸ்பர்சதந்மாத்ரை தொடக்கமான" என்று தொடங்கியுள்ள சூர்ணையின் வியாக்கியானத்தில் "...ஸ்ரீபராசர பகவானுக்கு விவக்ஷிதமென்று நினைத்து வ்யாக்க்யாதாக்கள் வ்யாக்க்யானம் பண்ணி வைக்கையாலே" என்று மாமுனிகளின் ஸூக்தி காண்கிறோம். எந்த வ்யாக்க்யாதா என்பதை தெளிவிக்கவில்லையே யென்று குறைகூறலாகுமே? தெரிந்தவர்களுக்கு எளிதாகத் தெரியக்கூடியதேயென்கிற திருவுள்ளத்தினால் மாமுனிகளும் விசதப்படுத்தியருளாமல் விட்டிடுமிடங்களுமுண்டே.

17. முமுக்ஷுப்படியில் "அத்ர பகவத்ஸேநாபதிமிச்ரர் வாக்யம்" என்ற விடத்து வியாக்கியானத்தில், அந்த ஸேநாபதிஜீயர் யார்? எக்காலத்திலிருந்தவர்? யார் திருவடிகளில் ஆச்ரயித்தவர்? அந்த வாக்கியம் யாரை நோக்கி எப்போது அவர் ஸாதித்தது? என்று இவற்றை விசதீகரித்தருளவில்லையே யென்று குறைநினைக்கவொண்ணுமோ? தத்வத்ரயத்திலேயே (70) "*ஆச்ரயாதந்யதோ வ்ருத்தே: ஆச்ரயேண ஸமந்வயாத், த்ரவ்யத்வஞ்ச குணத்வஞ்ச ஜ்ஞாநஸ்யைவோபபத்யதே* என்றிறே ஆளவந்தார் அருளிச்செய்தது" என்றருளியுள்ளார் மாமுனிகள். இன்ன க்ரந்தத்திலென்பதைக் காட்டியருளவில்லையே யென்று குறை கூறவொண்ணுமோ?

acharya.org

அன்றியும், "கட்டிப்பொன்போலே சேஷத்வம், பணிப்பொன் போலே பாரதந்த்ர்யம் என்னக்கடவதிறே!" என்றும், "ஆனந்தம் அவன் ப்ரீதியைத் துளிரெழுப்ப என்கிறபடியே" என்றும் இப்படி சில ஸ்ரீஸூக்திகளும் மாமுனிகளின் வியாக்கியானங்களில் காண்கின்றன; இந்த மேற்கோள்கள் எவ்விடத்திலுள்ளன வென்பது விசதவாக் சிகாமணிகளால் விசதீகரிக்கப்பட வில்லையேயென்று குறை கூறவொண்ணுமோ? அக்காலத்திலிருந்த ப்ரஸித்தி விசேஷங்களைப்பற்ற விசதீகரணம் வேண்டாவென்று விடுத்தருள்வதுண்டு என்பதுதான் நன்கு தெளிவாகிறது.

19. மிகமுக்கியமாக வொன்று தெரிவிப்போமிங்கு; மாமுனிகள் பட்டருடைய ஸ்ரீஸூக்திகளையெடுத்தருளிச் செய்யுமிடங்களிலெல்லாம் "என்று பட்ரருளிச் செய்தார்" "என்று பட்டராலுமருளிச் செய்யப்பட்டது" என்று அருள்வதே இயல்பு. ஓரிடத்தில் மாத்திரம் "பெரியபட்டர் அருளிச்செய்தார்" என்கிறார். எங்கே யென்னில், ஸ்ரீவசநபூஷணத்தில் ஐந்தாவது சூர்ணையின் வியாக்கியானத்தில்—"பெரியபட்டரும் ஸ்ரீஸஹஸ்ரநாமபாஷ்யோபோத்காதத்திலே * ஸ்ரீராமாயணவத் மஹாபாரதம் சரணம் * என்றருளிச் செய்தாரிறே" என்றுள்ளது காணலாம்; மற்றவிடங்களிலெல்லாம் **பட்டர் பட்ட** ரென்றே அருளிச் செய்து போந்தவர் இவ்வோரிடத்தில் மாத்திரம் **பெரியபட்டர்** என்றருளிச் செய்வானேன்? என்று சங்கை தோன்றினால், அங்கேயே முன் பங்க்தியை ஸேவித்தால் செவ்வனே தெளிவு பிறக்கும். "இதுவும் நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டர்தாமே யருளிச் செய்தார்" என்பது அந்த முன்னே யுள்ள ஸ்ரீஸூக்தி; உடனே ஸ்ரீபராசர பட்டருடைய ஸ்ரீஸூக்தியையும் எடுத்துக்காட்ட நேர்ந்தது; முன்னே காட்டிய பட்டரைக் காட்டிலும் வேறுபாடு தோன்றுவதற்காகவே "**பெரிய பட்டரும்**" என்று அருளிச் செயலாயிற்று. இது தவிர வேறு காரணம் கிடையாது.

20. மணவாள மாமுனிகளருளிச் செய்த நான்கு ரஹஸ்யங்களின் வியாக்கியானங்களுக்குள் **பெரியவாச்சான் பிள்ளை** யென்று ப்ரயோகம் செய்தருளியுள்ள விடம் ஒன்றே யொன்றுதான். அதுதான் கீழே நிரூபித்தவிடம். அங்கு, ஆச்சான் பிள்ளை ஆச்சான் பிள்ளை யென்றே முன்னே அருளிச் செய்து வந்தபடியாலே அந்த ஆசிரியரைக் காட்டிலும் வேறுபாடு தெரிவிப்பதற்காகவே உடனே **பெரிய** வாச்சான் பிள்ளை யென்று பணித்தது. இவ்வளவு ஆராய்ச்சியின்றிக்கே, 'முன்னே ஆச்சான் பிள்ளை யென்று நிர்தேசித்தவரையேதான் பின்னே பெரிய வாச்சான் பிள்ளை யென்று நிர்தேசித்தது' என்று கூறுவது ஸதாசார்ய ஸேவாரஸிகர்களுக்கு ஏற்குமோ வென்பதை விவேகிகள் விமர்சிப்பது.

21. இந்த சர்ச்சையிலீடுபட்டபோது, மணவாளமாமுனிகளின் வியாக்கியானக்ரந்தங்களில் ஆளவந்தார் முதலான நம் பூர்வாசார்யர்களின் ப்ரஸ்தாவமும் அவர்களது பொன்னே போன்ற மொழிகளின் உதாஹரணமுமுள்ள விடங்களை யாவரும் கண்ணாடிபோல் காண்பதற்கு ஓர் உபாயம் செய்யவேணு மென்று தோன்றியதனால் மாமுனிவன் மேற்கோள் விளக்கு என்கிற சிறுநூலைச் சேகரித்து வெளியிட்டுள்ளேன். அதனையுற்றுநோக்குவார்க்குப் பல விஷயங்கள் தெரியவரும். இப்படியே மற்றும்சில ஆசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளிலிருந்தும் மேற்கோள் விளக்கு அடைவே வெளியிடப்பெறும்.

22. அதுநிற்க. இப்போது வெளியிடப்பட்டுள்ள மாமுனிவன் மேற்கோள் விளக்கில் மநுஷ்யஸஹஜமான ப்ரமாதவசத்தினால் ஒன்றிரண்டு மேற்கோள் விடுபட்டிருக்கவுங் கூடும். கூடுமானவரை விடுபடாதபடி சேகரித்திருப்பதாகவே எண்ணம். பெரியார்கள் மாமுனிகளின் வியாக்கியான .க்ரந்தங்களிலேயே நேராக அவகாஹித்துப் பரிசீலித்து, மாமுனிகள் ஆச்சான் பிள்ளையையும் பெரியவாச்சான் பிள்ளையையும் ஒரேவ்யக்தியாகத் திருவுள்ளம் பற்றியிருக்கிறாரா? தனிப்பட்ட வ்யக்தித்வமாகத் திருவுள்ளம்பற்றி யிருக்கிறாரா? என்பதை விவேகித்து வெளியிடுவது உலகுக்கு மஹோபகாரமாகும்.

acharya.org

23. பரந்தரஹஸ்யம் ஆச்சான் பிள்ளை யருளியதேயல்லது பெரியவாச்சான் பிள்ளை யருளியதன்று என்கிற ஸ்தாபனத்திற்கு உயிராகக் கொண்ட விஷயத்தை அடியேன் விசதமாக நிரூபித்தாயிற்று. இஃதொன்றையே பரமப்ரமாணமாகக் கொண்டிருக்கின்றேன். மற்றுள்ள ப்ரமாணங்களைப்பற்றி விசாரமேவேண்டா. இஃதொன்றில் பெரியார்களின் திருவுள்ளம் வேறாயிருந்தால் வெளிவரட்டும்.

24. பெரியவாச்சான் பிள்ளை யென்கிற சொல்லைச் சிலர் பேரியவாய்ச் சாண்பிள்ளை என்று கூறி, 'சாண்பிள்ளையாயிருந்தாலும் வாய்பெரியர்' என்று அர்த்தமுரைப் பதுண்டு; ஆனால் அது பண்டித கோஷ்டிகளில் பரிசுபெறாது; சிலபாமரர்க்கு ரஸ்யமாயிருக்கும். அப்பொருளையே நெஞ்சிற்கொண்ட பிறர், தத்வத்ரய வியாக்கியானத்தில் மாமுனிகள் ஆச்சான் பிள்ளையென்றே முன்னம் சொல்லிவந்து முடிவில் பெரியவாச்சான் பிள்ளையென்றது—'விரிவாகச் சொல்லுகிற அவரே சுருங்கச் சொன்னபோது லோகாசார்யர் சுருங்கச் சொன்னது அதிசயமன்று என்று காட்டுவதையே உள்ளுறையாகக் கொண்டது, இது மஹாமேதாவிகளுக்கே ஸூக்ஷ்மமாக அறியக் கூடிய விசேஷார்த்தம்' என்று கூறுவதன் பொருத்தத்தை ப்ராஜ்ஞர்களே பார்க்கவேணும். பேரிய என்கிறசொல் எதில் விசேஷணமாக அந்வயிக்கிறது? என்று கேட்டால் ஸமஞ்ஜஸமாக விடை கூறவேணுமே. அந்த விசேஷணமானது, திருமலை பெரியஜீயர்' என்பதுபோன்ற வ்யவஹாரங்களிற்போல் வ்யக்தியின் வேறுபாட்டை மாத்திரமே காட்டவந்ததேயல்லது வேறு எந்தவிசேஷத்தையும் காட்டவந்ததன்று. பட்டர் காலத்திலே நஞ்சீயர் பெரியஜீயரென்று வழங்கப்பட்டுவந்தாரென்று தேசிகனுடைய ரஹஸ்யத்ரயஸாரத்தினாலறிகிறோம். மணவாளமாமுனிகள் பெரியஜீயரென்று வழங்கப்பட்டுவந்தாரென்பது ஸர்வஸம்ப்ரதிபந்நம். இந்த வ்யபதேசங்களில் பேரிய என்பது சிறியவொரு ஜீயரை வ்யாவர்த்திக்கு மத்தனையேயல்லது வேறோர் பொருட்டன்று. ஆகவே இங்குப் பிறருடைய விசேஷார்த்த கல்பநம் ஆகாசதாண்டவமென்று முடிந்தது.

25. அஷ்டாத்யாயியில் (பாரா 8-ல்) "உபதேசரத்தினமாலையில் திருநாமப்ரஸித்தி தெரிவதற்காக மூன்றுபாசுரங்களில் பெரிய வாச்சான்பிள்ளை யென்று பெயரையிட்டுக் கூறினாராயினும் மற்றவிடங்களில்......" என்று அடியேனெழுதியிருப்பதனைக் கண்ட பிறர்—"உபதேசரத்தினமாலையில் திருநாமப்ரஸித்தி தெரிவதற்காக ஓரிடத்தில் பெயரைச் சொல்லிக் குறித்தால் போதுமே; மற்ற இரண்டிடங்களிலும் பூர்வர்களென்றே மாமுனிகள் ஏன் குறிக்கவில்லை யென்று கேட்டால் என்னபதில் சொல்லமுடியும்?" என்கிறார்கள். இது உபதேசரத்தினமாலையைக் கனவிலுங் காணாதாருடைய அட்டஹாஸமன்றோ அங்குள்ள மூன்று பாசுரங்களிலும் பெரியவாச்சான் பிள்ளையென்றே பெயரிட்டுச் சொல்லியாகவேண்டிய நிர்ப்பந்தமிருப்பதை நிரூபிக்கக் கேண்மின்; * பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான்பிள்ளை தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை, மணவாளயோகி திருவாய்மொழியைக் காத்த குணவாளரென்று நெஞ்சேகூறு." என்பது முதலிடம். திருவாய்மொழிக்கு வியாக்கியானஞ் செய்தருளின ஆசிரியர்களை யெல்லாம் பெயரிட்டுக்காட்டுகிற பாசுரமிதுவாகையால் இதில் பெரியவாச்சான்பிள்ளை யென்றே சொல்லியாகவேண்டிற்று.

26 பிறகு, * நம்பிள்ளை தம்முடைய நல்லருளாலேவியிடப், பின் பெரியவாச்சான் பிள்ளையதனால்.......இருபத்திநாலாயிரம் * என்றது இரண்டாவதிடம். இன்ன பெயருள்ள வியாக்கியானத்தை இயற்றினாரென்று விவரித்துவருகிற ப்ரகரணமாகையாலே இங்கும் பெரியவாச்சான்பிள்ளை யென்றே சொல்லியாகவேண்டிற்று. இங்கு 'பூர்வர்கள் இட்டது இருபத்திநாலாயிரம்' என்றால் அந்வயிக்குமோ?

27. பிறகு * பெரியவாச்சான்பிள்ளை பின்புள்ளவைக்குந் தெரிய வியாக்கியைகள் செய்வால் * என்பது மூன்றாவதான இடம். திருவாய்மொழி தவிர்ந்த மற்ற மூவாயிரத்திற்கும் பெரியவாச்சான்பிள்ளை தாம் வியாக்கியானம் செய்தருளினாரென்று சொல்லுகிற விடமிதுவாதலால் இங்கும் பெரியவாச்சான்பிள்ளையென்றே சொல்லியாகவேண்டிற்று.

acharya.org

இங்கு 'பின்புள்ளவைக்கும் பூர்வர்கள் வியாக்கியான மிட்டார்' என்றால் அங்வயிக்குமோ? ஆகவே மூவிடங்களிலும் பெரியவாச்சான்பிள்ளை யென்று பெயரையிட்டுச் சொல்லியே யாகவேண்டிய அவசியத்தை நிரூபித்தோமாமேனும்.

28. 'பரந்த ரஹஸ்யம் பெரியவாச்சான் பிள்ளையின் க்ருதியன்று' என்று நாம் ஸித்தாந்தம் செய்வதுபோல, 'பெரியாழ்வார் திருமொழி ஸ்வாபதேச வியாக்கியானம் திருவாய்மொழிப்பிள்ளை பணித்ததன்று' என்று ஸித்தாந்தம் செய்திருக்கவில்லை. நெஞ்சிலே தோன்றிய ஆராய்ச்சியை உபபத்திகளுடன் வெளியிட்டவத்தனை. "இப்படித்தானென்று ஸ்தாபிக்கவேணுமென்று நமக்கோரு ஆக்ரஹமில்லை" என்றே எழுதியிருக்கிறேன். * மாற்றுத்தாய் சென்று * (3—9—4.) என்ற பெரியாழ்வார் திருமொழிப்பாசுரத்தின் மாமுனிகளது வியாக்கியானத்தில் "பிள்ளை யிட்டருளின வியாக்கியான ப்ரக்ரியை" என்றுள்ள பங்க்தியை நாம் மறைத்துவிட்டதாகப் பிறர் கூறுகின்றனர். "P. B. A. ஸ்வாமி..... பங்க்திகளைக் காணுக் கண்ணிட்டிருப்பதன் மருமத்தை விவேகிகள் உணர்ந்து கொள்வார்கள்" என்றும், "மாமுனிகளுக்கு முன்னால் திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியான மருளவில்லை யென்பதை ஸ்தாபிப்பதற்காக உள்ளபங்க்திகளை மறைத்திருப்பதற்கும் காரணமென்ன........." என்றும் எழுதியுள்ள பிறர்க்கு ப்ராமாணிகத்வம் எவ்வளவுள்ளது என்பதை யாவரும் உணரலாம்.

29. * பச்யதி பரேஷு தோஷாந் அஸதோபி, ஸதோபி நைவ குணாந், விபரீதமிதம் ஸ்வஸ்மிந் மஹிமா மோஹாஞ்ஜநஸ்யைஷ: * என்ற ஸுபாஷிதம் இங்கு ஸ்மரிக்கத்தகுதியுண்டு. திருவாய்மொழிப் பிள்ளை வியாக்கியான விஷயமாக நாம் பன்னிரு திங்களநுபவ நூலில் 124, 125 பக்கங்களில் விரிவாக எழுதியிருந்ததைச் சுருக்கி அஷ்டாத்யாயியில் மூன்றாமத்யாயத்தில் எழுதினோம். "பிள்ளை யிட்டருளின வியாக்கியான ப்ரக்ரியை" என்கிற மாமுனிகளின் ஸ்ரீஸூக்தியை ஸ்பஷ்டமாக எடுத்துக்காட்டி அதனால் விளைபக்கூடிய சங்கையையும் தத்பரிஹாரத்தையும் முதனூலில் விரிவாக எழுதியே வெளியிட்டிருக்கிறோம்.

30. அது காணுமலோ, கண்டும் குறைகூற விரும்பியோ பிறர் எழுதியுள்ள அகாண்டதாண்டவ வார்த்தைகளினால், நம்முடைய நூல்களில் ஆழ அவகாஹித்து உண்மையுணர்ந்துள்ள விவேகிகள் ஒருபோதும் கலங்கார்கள்.

31. நம்பிள்ளையினுடைய திருவடிகளுள் பெரிய வாச்சான் பிள்ளைக்குத் தலைமையா? வடக்குத் திருவீதிப் பிள்ளைக்குத் தலைமையா? மணவாள மாமுனிகள் பெரியாழ்வார் திருமொழி வியாக்கியானம் அருளிச்செய்தது கண்டு அன்பர்கள் கூறின ப்ரசம்ஸோக்தியின் ஸ்வரூபம் எப்படிப்பட்டது? என்பது முதலான ப்ராஸங்கிக விஷயங்களுக்கெல்லாம் ப்ராமாணிக ஹ்ருதயங்கமமான உண்மையுரைகள் ஸம்வாத வியாஸமுகமாக வெளிவரும்.

32. பஞ்ச வடியேன்னும் பாங்காம் தவவனத்தில்
மஞ்சுலவு சோலைதனில் வாழ்ந்திருந்து,—நெஞ்சுருகும்
நல்லார்க் குணவாக நானிதனை நல்கினேன்
அல்லாதார் தீதேனினேன் ஞம்.

ஸ்ரீ காஞ்சீ அண்ணங்கராசாரியருடைய

விஜ்ஞாபனமாகிய

## முப்பத்திரண்டு மொழிமாலை முற்றிற்று.

acharya.org

ஸ்ரீ:

# ஸாது ஸாத்விக ஸம்வாதம்.

(ப்ர—அ.)

## —இரண்டு ஸத்புருஷர்களின் ஸம்பாஷணையில் பலபல அரும்பெரும் பொருள்கள் வெளிவருகின்றன—

ஸாது—ஸாத்விகஸ்வாமிந்! இன்று தேவரீரிடத்தில் பலஸந்தேஹ பரிஹாரங்கள் பெற விரும்பிவந்திருக்கின்றேன்; அவகாசமிருக்குமோ?

ஸாத்விகர்—அவகாச மில்லாமலென்ன? வேண்டிய அவகாசமுண்டு. "* போதயந்த: பரஸ்பரம் *" என்று கீதையில் சொன்ன கணக்கிலே போதுபோக்க நேர்ந்தால் பரமானந்தமன்றோ! கேள்; தெரிந்தவரையில் சொல்லுகிறேன்.

ஸாது—நம்பிள்ளை சிஷ்யர்களுக்குள் பெரியவாச்சான் பிள்ளைக்கு ப்ராதாந்யமா? வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கு ப்ராதாந்யமா? என்றொரு விசாரம் நேர்ந்திருக்கின்றது; இதில் தேவரீருடைய திருவுள்ள மெப்படி?

ஸாத்விகர்—இந்த சர்ச்சை முன்னமே என்காதில் விழுந்திருக்கிறது. இதில் பெரியோர் களின் திருவுள்ளத்தை உபபத்தியுடன் சொல்லுகேன் கேளாய். நமக்கு ஸமாச்ரயண பரம்பரை யென்றும் க்ரந்த பரம்பரையென்றும் இரண்டு பரமபரைகளுண்டு. ஸமாச்ரயண பரம்பரையில் வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கு ப்ராதாந்யமும், க்ரந்தபரம்பரையில் பெரியவாச்சான் பிள்ளைக்கு ப்ராதாந்யமும் ஸகல ஸஜ்ஜநஸம்மதம். ஓரான்வழியான ஆசார்யபரம்பரையை நாம் தினப்படி அநுஸந்திப்பது [அதாவது குருபரம்பரைத் தனியன்களைச் சொல்லிவருவது] ஸமாச்ரயண பரம்பரையை யொட்டியேயாம். க்ரந்த பரம்பரையைக்காட்டிலும் ஸமாச்ரயணபரம்பரையே முக்கியமானதென்று ஸத்ஸம்ப்ரதாயஸித்தாந்தம். ஸ்ரீவசநபூஷணத்தில் "நேரே ஆசார்யனென்பது ஸம்ஸாரநிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை யுபதேசித்தவனை" என்றருளிச் செய்திருக்கையாலே பஞ்சஸம்ஸ்காரப்ரத குருமரம்பரையே சிறந்தது. மணவாளமாமுனிகளுக்கு ஆசார்யர் திருவாய்மொழிப்பிள்ளை; அவர்க்கு ஆசார்யர் பிள்ளை லோகாசார்யர்; அவர்க்கு ஆசார்யர் வடக்குத் திருவீதிப்பிள்ளை; அவர்க்கு ஆசார்யர் நம்பிள்ளை— என்றிப்படித்தான் நித்யாநுஸந்தேய குருபரம்பரையுள்ளது. வடக்குத்திருவீதிப்பிள்ளை போலவே பெரியவாச்சான் பிள்ளையும் நம்பிள்ளை திருவடிகளிலே ஆச்ரயித்தவராயிருந்தாலும், நாலாயிர திவ்யப்ரபந்தங்களுக்கும் வியாக்கியான மருளிச் செய்தவரென்கிற பெருமையை விசேஷித்துப் பெற்றவராயிருந்தாலும் ஆசார்யபரம்பரையிலே அடுத்தவராய் விளங்குகின்ற பிள்ளைலோகாசாரியர்க்கு அவர் ஆசார்யரல்லாமையாலும், அப்பெரியவாச்சான் பிள்ளையின் சிஷ்யரான வொருவரையிட்டு மேலே குரு பரம்பரை நிகழாமையாலும் தொடர்சங்கிலியான ஆசார்யபரம்பரையிலே நம்பிள்ளைக்கும் பிள்ளைலோகாசார்யர்க்கும் இடையில் வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கு ஸ்தானம் ப்ராப்தமாயிருக்கின்றதேயன்றி பெரியவாச்சான் பிள்ளைக்கு ப்ராப்தமாகவில்லை. ஆளவந்தார் திருவடிகளிலே ஆச்ரயித்த பல மஹான்களும் உடையவர்க்கு அரியபெரிய உபதேசங்களைச் செய்தருளினவர்களாயிருந்தும், உடையவர்தாமும் பலகால் தேடியோடிவரும்படியான மிக்க பெருமையைப் பெற்றவர் திருக்கோட்டியூர் நம்பியாக இருந்தும், குரு பரம்பரைத் தொடர்சங்கிலியில் திருக்கோட்டியூர்நம்பி திருமலைநம்பி திருமாலையாண்டான் முதலானாரில் ஒருவர்க்கும் ப்ரவேசமின்றிப் பெரியநம்பி யொருவர்க்கே யாயிற்று. என்னகாரணமிதற்கு? ஸ்வாமிக்குப் பஞ்சஸம்ஸ்காரமளித்தவர் இவரேயன்றோ.

நம்பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்தவர்களுக்குள் பின்பழகிய பெருமாள் ஜீயர்க்குள்ள பெருமை வேறு ஒருவர்க்குமே கிடையாதென்பது மணவாள மாமுனிகளின் திருவுள்ளத்தினால் ஸித்தம். இது உபதேசரத்தினமாலையில் ஸ்பஷ்டமன்றோ! அப்படிப் பெருமை பெற்றவர்க்கு குருபரம்பரைத் தொடர் சங்கிலியில் ப்ரவேசம் விளையவில்லை; ஏனென்னில்; பிள்ளைலோகாசார்யர்க்கு அவர் ஆசார்யரல்லாமையினாலேயே. ஆக, குருபரம்பரையில் போற்றுதற்குரித்தாக நம்பிள்ளைக்கு ப்ரதாந சிஷ்யர் வடக்குத் திருவீதிப்பிள்ளையேயாயினர். பெரியவாச்சான் பிள்ளை நாலாயிரத்திற்கும் வியாக்கியான மருளிச் செய்திருந்தாலுங்கூட "ஸகல வித்தியாதிகவேதம் போலே இதுவும் திவ்ய ப்ரபந்தப்ரதாநம்" என்ற

acharya.org

ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தியின் படியே நாலாயிரத்திற்குள்ளும் திருவாய்மொழி யாயிரத்திற்கே ப்ராதாந்யமாகையாலும், அந்தத் திருவாய்மொழிக்கு வியாக்கியானங்கள் பல இருந்தாலும் * தெள்ளியதா நம்பிள்ளை செப்பு நெறிதன்னை, வள்ளல் வடக்குத்திருவீதிப்பிள்ளை, இந்த நாடறிய மாறன் மறைப்பொருளை நன்குரைத்தது, ஈடு முப்பத்தாறாயிரம் * என்று மாமுனிகளால் போற்றப்பட்ட ஈட்டுக்கே ஸர்வாநுபவ ஸாக்ஷிகமான ப்ராதாந்ய மாகையாலும் நம்பிள்ளை திருவடிகளுக்குள் வடக்குத் திருவீதிப் பிள்ளையே ப்ரதாநராவர்.

ஸாது—இப்படியானால் தேவரீர் முதலில் ஸாதித்தது ஸங்கதமாகவில்லை போல் தோன்றுகிறதே; ஸமாச்ரயணபரம்பரையில் வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கு ப்ராதந்ய மென்றும், க்ரந்த பரம்பரையில் பெரியவாச்சான் பிள்ளைக்கு ப்ராதாந்ய மென்றும் ஸாதித்ததே; இப்போது, க்ரந்த பரம்பரையிலுங்கூட வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கே தான் ப்ராதான்யமென்று ஸாதிப்பதாக விளங்குகிறதே.

ஸாத்விகர்—நீ க்ரஹித்தது பிசகு; அப்படி கொள்ளாதே; திருவாய்மொழிக்கு இருவரும் வியாக்கியானம் ஸாதித்தவர்களே; ஆனாலும், முற்பட வியாக்கியான மிட்டருளினவர் பெரிய வாச்சான் பிள்ளை; அநந்தரம் வியாக்கியான மிட்டருளினவர் வடக்குத் திருவீதிப் பிள்ளை. ஆகவே க்ரந்த மருளிச்செய்யும் முகத்தாலே உபகரித்தவர்களில் முற்பட்டவர் பெரிய வாச்சான் பிள்ளையாகையாலே க்ரந்த காலக்ஷேப ஸமயங்களில் அவருடைய தனியனை ஸேவித்த பிறகுதான் வடக்குத் திருவீதிப் பிள்ளை தனியனை ஸேவிப்பது ஸம்ப்ரதாயம். * "ஸ்ரீக்ருஷ்ண பாதபாதாப்ஜே" * என்பது வடக்குத் திருவீதிப் பிள்ளை தனியன்; * "ஸ்ரீமத் க்ருஷ்ண ஸமாஹ்வாய * என்பது பெரிய வாச்சான் பிள்ளை தனியன். பகவத் விஷய காலக்ஷேப ஸமயத்தில் தனியன்கள் அநுஸந்திக்கு மிடத்து * ஸ்ரீமத் க்ருஷ்ண ஸமாஹ்வாய * அநுஸந்தித்த பிறகே * ஸ்ரீக்ருஷ்ண பாத பாதாப்ஜே * அநுஸந்தித்து வருகிறோம். குருபரம்பரா நித்யாநுஸந்தாந ஸமயத்தில், நம்பிள்ளை தனியனனந்தரம் வடக்குத்திரு வீதிப்பிள்ளை தனியன், அதன் பிறகு பிள்ளை லோகாசார்யர் தனியன், அதன் பிறகு திருவாய் மொழிப்பிள்ளை தனியன்..............இங்ஙனேயாகிறது. இவ்வடைவில் பெரியவாச்சான் பிள்ளைதனியன் புகவேயில்லை. நமது ஸம்ப்ரதாயத்தில் ஸமாச்ரயண பரம்பரையே முக்கியமானதென்பதை முன்னமே மூதலித்தேனாகையால் நம்பிள்ளை திருவடிகளுள் பெரியவாச்சான் பிள்ளையைவிட வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கே ப்ராதாந்ய மென்பது தேறிநின்றது. ஆகவே ஸ்ரீ காஞ்சீபுரியில் நம்பிள்ளை ஸந்நிதியில் நம்பிள்ளையின் வலபுறத்தில் வடக்குத் திருவீதிப்பிள்ளையையும் இடபுறத்தில் பெரியவாச்சான் பிள்ளையையும் பெரியார் எழியருளப் பண்ணியிருப்பது மிகப் பொருத்தமானது.

ஸாது—தேவரீருடைய இந்த நிரூபணம் மனத்தில் மிக்க தெளிவையுண்டாக்கிற்று. பூருவர்களருளிச் செய்த ஆழ்வாராசார்யர்களின் வாழித் திருநாமம் நித்யாநுஸந்தான புத்தகங்களிலெல்லாம் அச்சிடப்பட்டுள்ளது. அதில், பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை வடக்குத்திருவீதிப்பிள்ளை பிள்ளைலோகாசார்யர் என்றிவர்களுக்கு இவ்வடைவில் வாழித் திருநாமம் காண்கின்றதே யொழிய பெரிய வாச்சான் பிள்ளைக்கு வாழித் திருநாமம் காணப்படவேயில்லை; பத்தெட்டு பதிப்புகளை யெடுத்துப் பார்த்தேன், ஒன்றிலுங் காணவில்லை; இதற்கு என்ன காரணமென்று வெகுகாலமாக விமர்ச மிருந்துவந்தது. இன்று தெளிவாயிற்று மிகமுக்கியமாகக் கொண்டாடப்படும் ஸமாச்ரயண பரம்பரையில் வடக்குத் திரு வீதிப் பிள்ளைக்கேயல்லது பெரியவாச்சான் பிள்ளைக்கு ப்ரவேச மில்லாமையாலே குருபரம்பரையில் நம்பிள்ளைக்குப் பிறகு வடக்குத் திரு வீதிப்பிள்ளைக்கே நிவேசமாயிற்றென்கிற வுண்மையை இன்று தெளியப் பெற்றேன்.

"ஸாத்விகர்"—பெரியவாச்சான் பிள்ளைக்கு வாழித்திருநாமம் அடியோடு ஏற்படாமலிருக்கவில்லை. சிலபுத்தகங்களில் அதுவும் சேர்க்கப்பட்டிருக்கிறது. உடையவர் திருவடிகளுள் கூரத்தாழ்வானுக்கு ப்ராபல்யம் ஸர்வஸம்ப்ரதிபந்நமானது; "* ஸோயம் ராமாநுஜமுநிரபி ஸ்வீயமுக்திம் கரஸ்தாம் யத்ஸம்பந்தாதமநுத கதம் வர்ண்யதே கூரநாத:" * என்னும்படியான பெருமையன்றோ ஆழ்வானுடையது. ஆனதுபற்றியே மணவாளமாமுனிகளும் "* ஸ்ரீவத்ஸசிஹ்நசரணம் யதிராஜமீடே *" என்று விம்சதியில் விசேஷித்து அருளிச்செய்யலாயிற்று. அத்தகைய பெருமை அவர்க்கிருந்தும் குரு பரம்பரைத் தொடர்சங்கிலியில் எம்பெருமானார்க்குப்பிறகு எம்பார்க்கேயன்றோ நிவேசமாயிற்று. அதற்கென்ன காரணம் தெரியுமோ? பட்டர்க்கு அவர் திருவிலச்சினையிட்ட ஆசார்யர் என்பதேயாம். பட்டர்தாமும் ஸஹஸ்ரநாமபாஷ்யோபக்ரம மங்களச்லோகத்தில் "* வந்தே கோவிந்ததாதௌ *" என்றார். இங்கு "* அல்பாச்தரம் பூர்வம்" * என்ற வியாகரண நியமப்படி 'தாதகோவிந்தௌ' என்று நிபந்திக்கவேண்டியிருந்தும் பட்டர் 'அப்யர்ஹிதம் பூர்வம்' என்றதைக்கொண்டே 'கோவிந்



acharya.org

ததாதெள' என்றருளிச் செய்தார். ஒரு ஸந்நிதியில் ஆழ்வான் எம்பார் ஆகிய இருவரோடு கூட எம்பெருமானாரை ப்ரதிஷ்டிப்பிக்க நேர்ந்தால் வலபுறத்தில் எம்பாரையும் இடபுறத்தில் ஆழ்வானையும் ப்ரதிஷ்டிப்பிக்க நேருமேயல்லது வேறுவிதமாக ப்ராப்தமாகாது. இப்படி, திருக்கோட்டியூர்நம்பி பெரியநம்பி என்கிற இருவரோடுகூட ஆளவந்தாரை ப்ரதிஷ்டிப்பிக்கநேர்ந்தால், வலபுறத்தில் பெரியநம்பியையும் இடபுறத்தில் திருக்கோட்டியூர் நம்பியையும் ப்ரதிஷ்டிப்பிக்க நேருமேயல்லது வேறுவிதமாக ப்ராப்தமாகாது, ஆசார்யஹ்ருதயத்தில் * ம்லேச்சனும் பக்தனானால் * இத்யாதி சூர்ணையில் "ஐவரில் நால்வரில மூவரில் முற்பட்டவர்கள்" என்றவிடத்து மூவரில் முற்பட்டவர் இன்னாரென்பதை அவ்விடத்து வியாக்கியானத்தில் விவரித்தருளாநின்ற மணவாளமாமுனிகள்—"பெரியநம்பி திருக்கோட்டியூர் நம்பி பெரியதிருமலை நம்பியென்று ஸப்ரஹ்மசாரிகளாய்க் கொண்டு ஆளவந்தார் திருவடிகளிலே ஸேவிக்கையாலும் உடையவர்க்கு ஆசார்யர்களாகையாலும் ப்ரஸித்தரான நம்பிகள் மூவரிலும் "ப்ரதாநரான பெரியநம்பி" என்றருளிச் செய்தார். பெரிய நம்பிக்கு எதனாலே ப்ராதாந்ய மென்னில், உடையவர்க்குத் திருவிலச்சினை ஸாதித்தாரென்பதனாலேயாம். எம்பார்க்கு ப்ராதாந்யமும் பட்டர்க்குத் திருவிலச்சினை ஸாதித்தது பற்றியேயாம். இவ்வடைவிலே வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கு ப்ராதாந்யமும் பிள்ளை லோகாசார்யர்க்குத் திருவிலச்சினை ஸாதித்தது பற்றியேயாம். பெரியநம்பிக்கும் பட்டர்க்கும் ப்ராதாந்யம் கொள்வதனால் திருக்கோட்டியூர் நம்பி முதலான பேராசிரியர்களுக்கும், ஆழ்வான் ஆண்டான முதலான பேராசிரியர்களுக்கும ஒருவிதமான தாழ்வுமில்லாதாப் போலே வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கு ப்ராதாந்யங் கொள்ளுமளவால் பெரியவாச்சான் பிள்ளை பின்பழகிய பெருமாள்ஜீயர் முதலான பேராசிரியர்கட்கு எவ்விதமான தாழ்வும் வாராதென்பது அறியத்தக்கது. வடக்குத் திருவீதிப் பிள்ளையானவர் பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளிலும் பல விசேஷார்த்தங்களைக் கேட்டிருக்கலாம்; அவர்மாத்திரமல்லர்; பிள்ளைலோகாசார்யருங்கூட பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளிலும் பல கேட்டிருக்கலாம். இதில் விப்ரதிபத்தி லேசமுமில்லையே. பெரிய வாச்சான் பிள்ளையினுடைய ஜ்ஞாநாநுஷ்டாநபூர்த்திகளில் யாரேனும் குறை நினைப்பாருளரோ? லுப்தமாய்ப் போயிருந்த நாலாயிரத்தையும் அரும் பெரும் பாடுகள் பட்டுப்புநருத்தாரம் செய்தருளின ஸ்ரீமந்நாதமுனிகளின் தனியனை திவ்யப்ரபந்த பாராயண ப்ராரம்ப ஸமாப்திகளில் நியமேந அநுஸந்திக்க வேண்டியது ஆவச்யகமா? அன்றா? என்று கேட்டால் அன்றென்று சொல்ல ஒருவர்க்காவது நா எழுமா? அத்யாவச்யகமேயென்று தான் ஒவ்வொருவரும் சொல்லக்கூடும், * "யோ நித்யமச்யுத" என்ற உடையவர்தனியனை அநுஸந்திக்க நியமித்தருளின பேராசிரியர்கள் ஸ்ரீமந்நாத முனிகளின் தனியனை ஓரிடத்திலுமநுஸந்திக்க நியமித்தருளவில்லை யென்று காண்பதனால் நாதமுனிகளுக்கு ஏதேனும் தாழ்வுவந்திடுமோ? ரஹஸ்யார்த்த ரத்னம் திருக்கோட்டியூர் நம்பிவழியாகவே ப்ராப்தமாயிருந்தும், அந்நாள் தொடங்கி இந்நாள்வரையில் ரஹஸ்யக்ரந்த காலக்ஷேபம் செய்வார்க்கு அந்த நம்பியினுடைய தனியன் இன்னதென்றோ தெரியாமலிருக்கிறது. அதனால் அவர்க் கென்ன தாழ்வு? எதற்கும் ஸம்ப்ரதாய மென்பதன்றோ தலைசிறந்து நிற்கிறது. அதையன்றோ நாம் பரிபாலனம் செய்யக் கட்டுப்படிருக்கிறோம். நம்பிள்ளைக்கும் பிள்ளை லோகாசார்யர்க்கு மிடையில் பெரியவாச்சான் பிள்ளையைத் தள்ளி வடக்குத் திருவீதிப் பிள்ளையை வைத்தது நாமோ? ஓராண்வழிப் பரம்பரை எப்படியுள்ள தென்பதை உலக மெல்லாமறியுமே.

ஸாது—ஒருவர் எழுதியிருக்கிறார்—'பெரிய வாச்சான் பிள்ளை பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ குலத்தைச் சேர்ந்தவர்; வடக்குத் திருவீதிப் பிள்ளை அபரசிக ஸ்ரீவைஷ்ணவ குலத்தைச் சேர்ந்தவர் என்னும் பக்ஷபாதத்தினாலேயே பெரிய வாச்சான் பிள்ளைக்கிருந்த ப்ராதாந்யத்தைக் குலைத்து வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கு ப்ராதாந்யம் கொடுக்கிறார்கள்; பூர்வாசார்யர்கள் காலத்தில் இப்படிப்பட்ட குறுகிய நோக்கம் கிடையாது; நவீந காலத்தில் சிலர் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவர்களை இழித்துரைக்கவும் அக்குலத்தைச் சேர்ந்த ஆசாரியர்களின்மேல் அவதூறு சொல்லவும் தலைப்பட்டிருக்கிறார்கள்' என்று. இப்படிப்பட்ட வார்த்தைகளுக்கு ப்ரக்ருதத்தில் ஏதேனும் விஷய முண்டோ? அருள் கூர்ந்து ஸாதிக்கவேணும்.

ஸாத்விகர் — மிகவும் அசடான வார்த்தைகளன்றோ இவை. பூர்வசிகை அபரசிகையென்ற விரண்டும் சாஸ்த்ர ஸித்தங்களாய் அநாதியாகவுள்ளவை. போதாயந ஸூத்ரிகள் ஆபஸ்தம்ப ஸூத்ரிகளை இழிவாக நினைப்பதும், ஆபஸ்தம்ப ஸூத்ரிகள் இதர ஸூத்ரிகளை இழிவாக நினைப்பதும் அஸம்பாவிதம். எந்த வகுப்பிலுமே அசடுகளும் தோன்றியிருப்பதுண்டாகையால் அப்படிப்பட்டவர்கள் தங்களை மிக உச்சஸ்தானத்தில் நினைத்துக்கொள்வதும், இதரர்களை மிக நீசஸ்தானத்

acharya.org

தில் நினைத்துக்கொள்வது முண்டாகையாலே அப்படிப்பட்ட அசடுகளின் நினைவுகளை ப்ராமாணிகர்களும் ப்ராஜ்ஞர்களும் பொருள் படுத்தமாட்டார்கள். ஆழ்வார்கள் கோஷ்டியிலும் ஆசார்யர்கள் கோஷ்டியிலும் பூர்வசிகிகளான பல பெரியார்கள் உத்துங்கஸ்தான நிவிஷ்டர்களாக விளங்குவது அபலபிக்க முடியாதது. இன்று வரையில் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கலிலே ஒரு விவேகியும் தாழ்வு நினைத்ததாகத் தெரியவில்லை. "அபரசிகிகள் தாம் அப்யர்ஹிதர்கள்; பூர்வசிகிகள் புரஸ்கரிக்கத் தகாதவர்கள்கள்" என்று யாரேனுமொருவர் ஒரு மூலையிலாவது எழுதியிருந்தால் எடுத்துக்காட்டலாம். அப்படியொருவர் எழுதியிருக்கிறார், அல்லது பேசிவருகிறார் என்றே வைத்துக்கொள்வோம்; அவரை கேவலம் துராக்ரஹியென்று ப்ராமாணிகர்கள் கூறுவர்களே யல்லது உசிதவாதியென்று ஒருவரும் நினையார். அஸ்து. இக்காலத்தவர்களுக்குள் ஏற்றத்தாழ்வு நினைவுகள் எப்படியிருந்தாலென்ன? பெரியாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் ஸ்ரீமதுர கவிகள் என்கிற பூர்வசிகிகளான ஆழ்வார்களிடத்திலும், திருவாய்மொழிப் பிள்ளை பெரிய வாச்சான் பிள்ளை எங்களாழ்வான் திருக்கோட்டியூர் நம்பி உய்யக்கொண்டார் போல்வாரான பல பூர்வசிகியாசார்யர்களிடத்திலும் அப்ரதிபத்தியோ விப்ரதிபத்தியோ கொள்வார் எவரேனு முளரோ? கொண்டார்களாகில் அவர்களுக்கென்று தனி நரகமன்றோ ஸ்ருஷ்டிக்கப்படவேண்டும். இப்படிப்பட்ட அஸம்பாவிதமும் அஸம்பத்தமுமான கொள்கைக்கு இதுவரையிலும் ப்ரஸக்தி லேசமுமில்லாதிருக்கவும். இதைச் சிலர் வாயால் பேசியும் எழுத்தில் எழுதியும் போருவதானது நவீனமாகவொரு கிளர்ச்சியையுண்டாக்கி அபரசிகிகளிடத்திலே பூர்வசிகிகளான மஹான்களுக்குள்ள ப்ரதிபத்திவிசேஷங்களைக் குலைக்கவேணுமென்கிற அசடான எண்ணத்தினாலேயே யாகும். தற்காலம் பூர்வசிகி ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் திருக்கோட்டியூர் தங்கமையங்கார் ஸ்வாமியும், பம்பாய் நகரத்தில் வாழும் ஸம்ப்ரதாய ப்ரவசக துரந்தர. வி. வி ஐயங்கார் ஸ்வாமியும், தென் திருப்பேரை. ஸ்ரீராம சந்த்ராசார்ய ஸ்வாமியும் ஜ்ஞாநாநுஷ்டானங்களில் மிகச் சிறந்து விளங்கும் விலக்ஷண மஹநீயர்கள். இம்மூவரும் ஆச்சான் பிள்ளையஷ்டாத்யாயியை ப்ரசம்ஸித்து பாந்தரஹஸ்யம் பெரிய வாச்சான் பிள்ளையின் க்ருதியன்று என்கிற ஸித்தாந்தத்தைச் சேமித்தவர்களாதலால் இப்படிப்பட்ட உத்தம புருஷர்களின் திருவுள்ளத்திலே ஏதேனுமொரு விப்ரதிபத்தியையுண்டாக்கிக் களிப்போம் என்கிற அசட்டெண்ணம் தவிர வேறு யாதும் நினைக்கமுடியாது. உண்மையில் மிக உதாரஹ்ருதயர்களும் யதார்த்தஜ்ஞாந நிதிகளுமான அவர்கள் இப்படிப்பட்ட அஸம்பாவித பாஷணங்களினால் ஒருபோதும் கலங்கார்கள். இதைவிட்டு வேறு விஷயத்திற் செல்வாயாக.

ஸாது—மிகவும் த்ருப்திகரமாக ஸமாதான மடைந்தேன்; அடுத்த விஷயம் விஜ்ஞாபிக்கிறேன். பெரியாழ்வார் திருமொழிக்குப் பெரியவாச்சான் பிள்ளை யருளிச்செய்திருந்த வியாக்கியானம் நானூறு பாசுரங்கள் வரை கரையானுக்கு இரையாகி லுப்தமான படியாலே அவ்வளவுக்கு மணவாள மாமுனிகள் இட்டருளின வியாக்கியானத்தை அன்பர்கள் ஸேவித்து 'அந்தோ! நாலாயிர வியாக்கியானமும் கரையானுக்கு இரையாகியிருந்தால் நலமாயிருக்குமே; இங்ஙனே தேனும் பாலும் அமுதுமன்ன வியாக்கியானத்தை மாமுனிகள் பூர்த்தியாக இட்டருளும்படியான பாக்யம் நேர்ந்திருக்குமே' என்று பரஸ்பரம் வியந்து உவந்து பேசிக்கொண்டதாகப் பெரியார்கள் சொலலக் கேட்கிறோம். இது கர்ணகடோரமான வார்த்தை யென்றும் பெரிய வாச்சான் பிள்ளைக்கு மிகவும் பழிப்பானவார்த்தை யென்றும் ஒருவர் கோஷிக்கிறாரே; இதன் தத்துவமென்ன? அருள் கூர்ந்து அருளிச்செய்யவேணும்.

ஸாத்விகர்—இப்படி கோஷிப்பதும் ஒரு அசட்டுத்தனமேயொழிய வேறென்ன? மணவாள மாமுனிகளிட்டருளின பெரியாழ்வார் திருமொழிவியாக்கியானத்தை நோக்கி அக்காலத்தில் ஒரு விதமான ப்ரசம்ஸையும் நேரவில்லை என்றே வைத்துக் கொள்வோம். பின்புள்ளார் கல்பனைசெய்து எழுதுகிறார்கள் என்றும் வைத்துக் கொள்வோம். அதில் ஔசித்யமுள்ளதா? அநௌசித்ய முள்ளதா? என்பதுதான் விவேகிகளால் விமர்சிக்கப்படவேண்டும். 'பெரியவாச்சான் பிள்ளையருளிய வியாக்கியானம் முழுவதும் கரையானுக்கு இரையாயிருந்தால் நன்றாயிருக்குமே' என்று ஒருவர் சொன்னால், இவர்க்கும் பெரியவாச்சான் பிள்ளையிடத்தில் பகையென்றாவது, அவருடைய ஸ்ரீஸூக்திகளில் மாச்சரியமென்றாவது, இதனால்பெரியவாச்சான் பிள்ளைக்குப் பழிப்பு விளைகின்றதென்றாவது ஒரு விவேகி நினைப்பனோ? மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளிலுள்ள மாதுர்ய மொன்றேயன்றோ வெளியிடப்பட்டதாகுமிதனால். இதில் உனக்கு நல்லதெளிவு பிறக்க விரிவாகவே சொல்லுகிறேன். ஸ்ரீவசந பூஷணத்தில் சரமபர்வநிஷ்டா நிரூபணத்தில்—"உண்டபோதொருவார்த்தையும் உண்ணாதபோதொரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப்பேருண்டிறே; அவர்கள் பாசுரங்கொண்டன்று இவ்வர்த்த மறுதியிடுவது; அவர்

acharya.org

களைச் சிரித்திருப்பாரொருவருண்டிறே; அவர்பாசுரங் கொண்டு இவ்வர்த்த மறுதியிடக்கடவோம்" என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. இதில் ஆழ்வார்கள் பதின்மர்க்கும் தூஷணமும் மதுரகவி யொருவர்க்கு பூஷணமும் வ்யக்தமாகவுள்ளது. உண்டபோதொருவார்த்தையும் உண்ணாதபோதொருவார்த்தையும் சொல்லுமவர்கள் பாமரர்களன்றோ; அவர்களுடைய ஸ்தானத்திலா ஆழ்வார்களைவைத்துப் பேசுவது? இது இருக்கட்டும். "அவர்களைச் சிரித்திருப்பாரொருவருண்டிறே" என்று அடுத்தபடியுள்ளது. இங்கு மாமுனிகளின் வியாக்கியானம்—"ஆழ்வார்கள் பதின்மரையும் பரிஹஸித்திருக்கும் ஸ்ரீமதுரகவியாழ்வாரொருவருண்டிறே" என்று. ஆழ்வார்களையெல்லாம் பரிஹஸிக்கவா மதுரகவிகள் தோன்றினர்? எந்த ஆழ்வாரை எங்கேபரிஹஸித்தார்? * தேவுமற்றறியேன் * என்று ஆழ்வார்திருவடிகளில் ப்ராவண்யமே வடிவெடுத்துப்படுகாடு கிடந்த மதுரகவிகளை நோக்கி 'இவர் ஆழ்வார்களைப் பரிஹஸித்தவர்' என்றால் இது ஆழ்வார்களுக்கும் தூஷணமாய் மதுரகவிகளுக்கும் அஸஹ்ய தூஷணமாய் முடியுமதன்றோ. "உன்னில் திகழ் வசன பூடணத்தின் சீர்மை ஒன்றுக்கில்லை" என்று போற்றப்பட்ட ஸ்ரீவசந பூஷண திவ்யசாஸ்த்ரத்தில் இப்படிப்பட்ட வார்த்தை இருக்கத்தகுமா? ஆழ்வார்களைக் கனவிலும் பரிஹஸித்தறியாத வொருவரை பரிஹஸித்தவராகக் கூறுதல் பச்சைப்பசும்பொய்யல்லவா? மற்றும் கேளாய்; * "கச்சதா மாதுலகுலம் பரதேந ததா அநக: * என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்தில் "அநக:" என்பதற்கு "ராமபக்தியாகிற பாபமில்லாதவர்" என்று பெரியவாச்சான் பிள்ளை அர்த்தம் செய்தருளுகிறார். ஜன்மாந்தர ஸஹஸ்ர நற்றவங்களாலே விளையக்கூடிய பகவத் பக்தியையா பாபமென்பது—இதைவிட வேறொருபாதகமு முண்டா? ராமபக்தர்களான பரத லக்ஷ்மண குஹஸுக்ரீவ ஹநுமத் விபீஷணாதிகளனைவரையும் பாபிகளென்றன்றோ பெரியவாச்சான் பிள்ளைமுடிக்கிறார். இது என்ன அநியாயம்! இப்படியெல்லாம் கர்ணகடோரமாக எழுதியுள்ள க்ரந்தங்களையா காலக்ஷேபக்ரந்த மென்று கொண்டாடுவது? என்று சிலர் தூஷிக்கப் புறப்பட்டால் இக்காலத்து மேதாவிகள் வாய்திறக்கமுடியுமா? "பெரியவாச்சான் பிள்ளை ஸாதிப்பதிலும் பிள்ளை லோகாசார்யர் ஸாதிப்பதிலுமா துராக்ஷேபம் செய்கிறாய்" என்று வாயும் கையும் வீசலாமேயொழிய ஆக்ஷேபம் செய்தவர்களை த்ருப்திகரமான பதிலுரையாலே அடக்கமுடியுமா? மேற்கூறிய ஆக்ஷேபம் செய்பவர்கள் வித்வான்களல்லர், விவேகிகளல்லர்; சாமானியர்களே. ஆனாலுமென்ன? பதில் சொல்லியாக வேண்டுமே. இவ்வாக்ஷேபங்கள் எதிரிகளின் நூல்களிலே சிலாலிகிதமாக எறியுமிருக்கின்றனவே. 'சொற்சுவை பொருட்சுவையறியாத அரஸிகர்களின் ஆக்ஷேபங்களிவை' என்று இவ்வளவு சொல்லிநிற்க முடியுமே யொழிய வேறு என்சொல்லித் தெளிவிக்கமுடியும்? இவ்வண்ணமாகவே, "பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானங்களெல்லாம் கரையானுக்கிரையாகி யிருக்கலாகாதா?" என்று கூறின யதீந்த்ர ப்ரவண ஸூக்திப்ரவணர்களின் பரம பக்தி பரீவாஹமான ஸூக்தியில் அவத்யம் நினைப்பாரை அவிவேகிகளென்றோ அஸூயுக்களென்றோ சொல்லவேணுமேயல்லது வேறொன்றும் சொல்லப்போகாது. செவியும்மூக்குமறுப்புண்டு கதறியழுதோடுகின்ற சூர்ப்பணகை அரக்கர் கோமானை நோக்கிப் புலம்பிப்பேசுகையில் "நின் செருப்படியில் பொடியொவ்வா மானிடரைச் சீறுதியோ" என்று பேசினதாக இட்டுக் கம்பர் செய்யுளியற்றி விட்டார். இதைப்பற்றி முற்காலத்திலேயே ஹாஹாகாரம் செய்தவர்களுண்டு; "தருணௌ ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ மஹாபலௌ, புண்டரீக விசாலாக்ஷௌ" என்று போற்றப்பட்ட ஸ்ரீராமலக்ஷ்மணர்களை ராக்ஷஸப் பையலினுடைய செருப்படியிற் பொடியொவ்வா மானிடரென்று கூறியதாகக் கூறுதல் அநியாயமல்லவா வென்று கோஷிப்பார் பலருளரன்றோ. சூர்ப்பணகை இப்படிச சொல்லும்போது கம்பர் கேட்டுக் கொண்டிருந்தாரா? எந்த மஹர்ஷி எந்த புராணத்தில் சொல்லியிருக்கிறார்? எதைக் கொண்டு கம்பர் கூறினர்? என்று கேட்டால் வாய் திறப்பாரில்லையே. அது எப்படியாவது கிடக்கட்டும். மதுரகவிகள் ஆழ்வார்களையெல்லாம் பரிஹஸித்தாரென்றும், ஸ்ரீராமனிடத்தில் செய்யும் பக்தி பாபமென்றும் கூறியுள்ள நம் பேராசிரியர்களின் திருவாக்கைப் பொருந்த விட்டுப் பாமரர்களை த்ருப்தி படுத்தியாக வேண்டுமே.

ஸாது—தேவரீருடைய இந்த அத்புத நிருபணங்களைக் கேட்டபிறகு அடியேனுக்கும் பல ஸ்ரீஸூக்திகள் நினைவுக்கு வருகின்றன. பெரியவாச்சான்பிள்ளை திருப்பாவைவியாக்கியானம் தொடங்கும்போது "தேஹாத்மாபிமாநிகளான ஸம்ஸாரிகளுக்கும் ஆத்மஸ்வரூபம் கைவந்திருக்கும் மஹர்ஷிகளுக்கும் பர்வதபரமாணுவோட்டைவாசி போரும்" என்றார்; இது வாஸ்தவமே. உடனே, அந்த மஹர்ஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் அத்தனைவாசிபோருமென்றார். ஆழ்வார்களிடத்தில் பாமப்ராவண்யமுடைய நாம் இதையும் வாஸ்தவமாகக் கொள்வோம். உடனே ஆழ்வார்களுக்கும் பெரியாழ்வாருக்கும் அத்தனைவாசிபோரு மென்கிறார். இதை ஸ்ரீவைஷ்ணவர்கள வாஸ்தவமென்று மதிக்க முடியுமா? பெரியாழ்வாராகிற பெருமலையின் முன்னிலையில் நம்மாழ்வார் முதலான மிகப்பெரிய ஆழ்வார்கள் சிறுபரலாகவா நிற்கிறார்கள்? இஃது உண்மையுரையாகுமா? ஆழ்வார்களையெல்லாம் இப்படி

acharya.org

கர்ணகடோரமாக தூஷிக்கவா பெரியவாச்சான் பிள்ளை அவதரித்தார்? என்று ஒருவர் கேட்டுவிட்டால் இந்த மஹாமேதாவிகளெல்லாம் வாய்திறக்க முடியுமா? ஏதோ வயிற்றெரிச்சல் பொறுக்கமாட்டாமல் அஸூயைதூண்ட எழுதுகிறவித்தனை; விஷயமறியாத சில பாமரர்களை மயக்குதற்காக எழுதுகிற வித்தனை; "* அசக்தாஸ் தத்பதம் கந்தும் ததோ நிந்தாம் ப்ரகுர்வதே *" என்கிற ஸுபாஷிதத்தை நினைப்பூட்ட எழுதுகிற வித்தனை—என்று நன்கறிந்தேன். ஸ்வாமிந்! வேறொரு விஷயம் வினவலாமோ?

ஸாத்விகர்—ஒரு விஷய மென்ன? ஒன்பதினாயிரம் விஷயங்களும் வினவலாம்.

ஸாது —ரஹஸ்யப்ரஸ்தானத்தில் முதன் முதலாக விசேஷக்ரந்த நிர்மாணம் செய்தருளின பெருமை பிள்ளை லோகாசாரியர்க்கே அஸாதாரணமென்று பெரியார்கள் கூறுகின்றார்கள்; அவர்க்கு முற்பட்ட ஆசாரியர்களும் பரந்தரஹஸ்யம் போன்ற பல க்ரந்தங்களை விரிவாக அருளிச் செய்திருப்பதாய்ச் சிலர் சொல்லுகிறார்கள். இவ்விஷயத்தில் தேவரீருடைய ஆராய்ச்சியைத் தெரிவித்தருள வேணும்.

ஸாத்விகர்—ரஹஸ்யப்ரஸ்தானத்தில் முதன் முதலாக விசேஷக்ரந்த நிர்மாணம் செய்தருளின பெருமை ஸ்ரீபிள்ளைலோகாசார்ய ரொருவர்க்கே தான் அஸாதாரணமானது. இதில் என்ன ஸந்தேஹம்? முற்பட்ட ஆசார்யர்களும் ரஹஸ்யார்த்த விசதீகரண விசக்ஷணங்களான பல க்ரந்தங்களைச் செய்தருளியிருக்கிறார்களென்பது நவீந கல்பனையே யொழிய சிறிதும் விச்வஸநீயமன்று; ஸங்கதமுமன்று. பட்டர் "அஷ்டச்லோகி" யருளிச் செய்திருப்பதுபோல அவ்வளவு ஸங்க்ரஹமாகவும் அதைவிட ஸங்க்ரஹ மாகவும் இரண்டொரு ஏடுகளில் அடங்கின தாகவும் சில ஆசார்யர்கள் (தமிழில்) ரஹஸ்யங்களருளிச் செய்திருந்தார்களென்பது யாவருமிசைந்ததே. வடக்குத் திருவீதிப் பிள்ளை "அஷ்டாக்ஷர தீபிகை" யென்றொரு க்ரந்த மருளிச் செய்திருப்பதாக அர்வாசீநர்கள் எழுதியிருப்பதுண்டு. அது மணவாள மாமுனிகளுக்கு உபலப்தமாயிருந்தால் வாதி கேஸரி முதலானவருடைய க்ரந்தங்களை அஸக்ருத் உதாஹரித்தருளுமவர் அதனையும் உதாஹரித்தருளியேயிருப்பர். உதாஹரிக்கக் கூடிய விசேஷவிஷயங்களில்லாமே அதிஸம்க்ஷிப்தமாக இருந்திருக்கும். கூரத்தாழ்வானும் ஒரு ரஹஸ்ய மருளிச் செய்திருந்ததாக தேசிகனுடைய ரஹஸ்யத்ரய ஸாரத்தினால் தெரியவருகிறது. இத்தகைய க்ரந்தங்களெல்லாம் அஷ்டச்லோகீநிர்விசேஷங்களே யல்லது ரஹஸ்யவ்யாக்யானக்ரந்தங்களென்று சிறப்பித்துச் சொல்லக்கூடிய நிலைமையில் அமைந்திருக்கவில்லை.

ஸ்வாமியெம்பெருமானார்க்கு முன்பு ஸ்ரீமந்நாதமுனிகள் ந்யாயதத்வமென்றொரு சாஸ்த்ரமருளிச் செய்திருந்தும், ஆளவந்தார் ஸித்தித்ரயம் முதலான க்ரந்தங்களையருளிச் செய்திருந்தும் நம்முடைய தர்சநத்திற்கு "நாதமுநிதர்சநமென்றாவது யாமுநாசார்யதர்சநமென்றாவது வ்யபதேசம் விளையவில்லையே; அந்த க்ரந்தங்களைப் பற்றுக் கோடாகக் கொண்டு ஸ்ரீபாஷ்யாதிகளையருளிச் செய்த ஸ்வாமியையிட்டன்றோ "எம்பெருமானார்தரிசன" மென்று வழங்கலாயிற்று. ஸ்ரீபாஷ்யாதிகள்போன்ற விபுலக்ரந்தங்கள் ஸ்வாமிக்கு முற்பட்டவர்களின் காலத்திலேயே வெளிவந்திருக்குமாயின் எம்பெருமானார்தரிசனமென்றும் ஸ்ரீ ராமாநுஜதர்சநமென்றும் வழங்குதற்கு ப்ரஸக்தியே யிராதன்றோ. பிள்ளை லோகாசார்யர்க்கு முற்பட்டவர்கள் யாரும் ரஹஸ்யார்த்தங்களை விபுலமாக ப்ரஸாதித்தருளாமையினாலும், இவர்தாமே முற்பட அங்ஙனே விபுலமாக ப்ரஸாதித்தருளினபடியாலுமே ரஹஸ்யப்ரஸ்தானத்தில் இப்பிள்ளைலோகாசார்யர்க்கே அநிதரஸாதாரணமான ப்ரக்யாதி விளைந்தது. ஆகவே பரந்த ரஹஸ்யம் இவ்வாசிரியருடைய திவ்யக்ரந்தங்களுக்குப் பின்பே அவதரித்ததென்பது சிலாசாஸனமாகத் தேறும். ஆனால், யுக்திவாதங்களில் இதுவொன்று என்றே நினைக்க நேரும். எப்போதும் யுக்திவாதம் நிலைநிற்காது. * தர்க்காப்ரதிஷ்டாநாத் * என்றார் ஸூத்ரகாரரும. மணவாள மாமுனிகளின் ஸுஸ்பஷ்ட ஸ்ரீஸூக்தியினால் பரந்த ரஹஸ்யம் பெரியவாச்சான் பிள்ளையருளிச் செய்ததன்று என்று தேறுகின்றவதுவே நமக்கு ப்ரபலப்ரமாணம்.

ஸாது—பரந்த ரஹஸ்யம் பெரிய வாச்சான் பிள்ளை ஸாதித்ததன்று என்று கண்டோக்தியாக மணவாளமாமுனிகள் ஸாதித்திருப்பதுண்டோ?

ஸாத்விகர்—அதிலென்ன ஸந்தேஹம்? ஆச்சான் பிள்ளை வேறு, பெரிய வாச்சான் பிள்ளை வேறு என்பதை தத்வத்ரய வியாக்கியானத்தில் (103-சூர்ணையில்) நிஸ்ஸந்தேஹமாகக் காட்டிவிட்டார். பரந்த ரஹஸ்யம் தத்வத்ரய விவரணம் மாணிக்கமாலை ஜிதந்தே வியாக்கியானம் இவை



acharya.org

யெல்லாம் ஆச்சான் பிள்ளை யருளியவை என்பதையும் பலமுறை காட்டி விட்டார். கண்டோக்தி யென்பது இதைவிட வேறு எவ்விதமாக இருக்கும். பெரிய வாச்சான் பிள்ளை, நாயனாராச்சான் பிள்ளை, நாலூராச்சான் பிள்ளை என்று மூன்று ஆச்சான பிள்ளைகள் உள்ளார்கள். இவர்களுள் பெரிய வாச்சான் பிள்ளையை மாத்திரம் பெரிய வாச்சான் பிள்ளை யென்றே யருளிச்செய்பவர் மாமுனிகள். வ்யக்தி ஸந்தேஹம் வ்யக்தி விபர்யாஸம் முதலிய அவத்யங்களுக்கு ஈஷத்தாவது அவகாச மளிக்குமோ மாமுனிகளின் திவ்ய ஸூக்திகள். இதில் பிஷ்ட பேஷணம் வேண்டாதபடி ப்ராமாணிக ப்ராஜ்ஞர்கள் நெஞ்சிலே நன்கு தேக்கிக்கொள்ள ஒரே விஷய முரைக்கின்றேன் கேளாய்; "மாமுனிகளின் திருவாக்குக்களில் ஆச்சான் பிள்ளை யென்று எங்கெங்கு வருகிறதோ அங்கெல்லாம் பெரிய வாச்சான் பிள்ளையென்றே அர்த்தம்; வேறு வ்யக்தி அர்த்தமல்ல" என்று ப்ரதிஜ்ஞை செய்ய ஒரு ப்ராஜ்ஞர் முன்வருவாரானால்—அந்த ப்ரதிஜ்ஞை அவ்யபிசரிதமாக நிற்குமேயானால்—"பரந்த ரஹஸ்யத்தில் ஆச்சான் பிள்ளை அருளிச் செய்தார்" "மாணிக்கமாலையில் ஆச்சான் பிள்ளை யருளிச்செய்தார்" "ஜிதந்தாவ்யாக்யானத்தில் ஆச்சான் பிள்ளை யருளிச்செய்தார்" என்னுமிடங்களிலெல்லாம் "ஆச்சான் பிள்ளை யென்றது பெரிய வாச்சான் பிள்ளையையே" என்று வித்தாந்தம் செய்யத்தடையே கிடையாது. ஆச்சான் பிள்ளை யென்பதற்கு ஓரிடத்தில் ஒரு வ்யக்தி அர்த்தம்; மற்றோரிடத்தில் மற்றொரு வ்யக்தி அர்த்தம் என்று சொல்ல வேண்டி வருமாகில், இப்படிப்பட்ட அஸமஞ்ஜஸ அஸம்பத்த வ்யவஹாரங்களுக்கு இடங்கொடுத்து எழுதுகிறவர் மணவாள மாமுனிகளல்லர் என்று திண்ணமாக எண்ணவேணும். மாமுனிகள் தவிர மற்றையோருடைய க்ரந்தங்களில் எல்லாவிதமான கந்த்ரகோளங்களும் ஏராளமாகவிருக்கும். அதில் ஸந்தேஹமே வேண்டாம. இந்நிலவுலகில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் க்ரந்த மருளிச் செய்தவர்களுள் மணவாள மாமுனிகளொருவரே ஒருவிதமான அவத்யத்திற்கும் ஆஸ்பதமல்லாதபடி ஆச்சரியமாக எழுதினவர். இதை ஆயிரந்தடவை சொன்னாலும் புநருக்தியாகாது. ஆனால் மாமுனிகளின் திவ்யஸூக்திகளை ஆழ்ந்து நோக்குவார் மிகச் சிலரேயாதலால் அந்த ஸூக்திகளின் காம்பீர்யமும் ஔதார்யமும் * "அநாக்ராதாவத்யம் பஹுகுண பரீணாஹி மநஸோ துஹாநம் ஸௌஹார்தம் *" என்றதற்கு முக்கியமான கொள்கலமாயிருக்கப் பெற்ற அதிசயமும் நுனிப்புல்மேய்வார்க்கு நிலமன்று. அப்படிப்பட்ட அருமை பெருமை பொலிந்த திவ்யஸூக்திகளில் ஆச்சான் பிள்ளை யென்கிற ஒரு வாசகமே ஓரிடத்தில் ஒரு வ்யக்தியையும் மற்றோரிடத்தில் மற்றொரு வ்யக்தியையும் தெரிவிப்பதாக விழுந்திருக்கின்றதென்று சொல்ல நேர்ந்தால் இதைவிட வேறு அவத்யமுண்டோ மாமுனிகளுக்கு? சாந்தம் பாபம் சாந்தம் பாபம்! என்று செவி புதைக்க வேண்டிய விஷயமன்றோ இது.

ஸாது—தேவரீர் ஸாதிப்பதத்தனையும் உண்மையே; மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளில் ஆச்சான் பிள்ளை யென வருமிடங்களிலெல்லாம் பெரியவாச்சான் பிள்ளை யொருவரே தாம் விவக்ஷிதர் என்று ப்ரதிஜ்ஞை செய்தால் இது அவ்யபிசரிதமாக இராதோ?

ஸாத்விகர்—ஒருகாலும் இராது; ரஹஸ்யவியாக்கியானங்களுக்குள் மணவாளமாமுனிகளின் திருவாக்கில் ஆச்சான்பிள்ளை யென்றுவந்த விடங்கள் இருபத்திரண்டு; பெரியவாச்சான் பிள்ளை யென்று வந்தவிடம் ஒன்றேயொன்று. அந்தவோரிடம் இல்லாமலிருந்தால் ஆராய்ச்சிக்கு இடமேயிராது. இதனாலேயே மாமுனிகள் பெரிய வாச்சான் பிள்ளையைக் காட்டிலும் ஆச்சான் பிள்ளை வேறுபட்டவர் என்பதைக் கையிலங்கு நெல்லிக்கனி யாகக்காட்டி விட்டார். இதைவேறு படுத்தவோ அசைக்கவோ முடியாதபடி ஒரு ஸ்ரீஸூக்தியைத் தந்தருளியுள்ளார்; அது எது வென்னில்; ஸ்ரீவசந பூஷணம் பதினோராவது சூர்ணையின் வியாக்கியானத்திலே "இவ்வுபதேச க்ரமம் இவர் தாமருளிச்செய்த பரந்தபடியிலும் ஆச்சான்பிள்ளையருளிச் செய்த பரந்த ரஹஸ்யத்திலும் விஸ்தரேண காணலாம்" என்றருளிச் செய்தார். இதனால் பிள்ளைலோகாசார்யருடைய பரந்தபடிக்குப் பிற்பட்டதே பரந்தரஹஸ்ய மென்று நிஸ்ஸந்தேஹமாக நிரூபிக்கப்பட்டு விட்டது. மாமுனிகளின் திருவுள்ளத்தினால் பரந்தரஹஸ்யம் பிள்ளைலோகாசாரியர்க்கு முற்பட்டதென்று க்ருஹீதமாயிருந்தால் "இவ்வுபதேசக்ரமம் ஆச்சான்பிள்ளையருளிச் செய்த பரந்த ரஹஸ்யத்திலும் இவர்தாமருளிச் செய்த பரந்தபடியிலும் விஸ்தரேண காணலாம்" என்றே ஸ்ரீஸூக்திவிந்யாஸம் அமைந்திருக்குமென்பதில் ஸந்தேஹமுண்டோ?

ஸாது—இப்படியன்றோ பரமத்ருப்திகரமாக பதில் கேட்கப் பெறவேணும். அஷ்டாத்யாயியில், மாமுனிகள் நடுவில் திருவீதிப் பிள்ளைபட்டரை முன்னே நிர்தேசித்துப் பிறகு ஆச்சான் பிள்ளையை நிர்தேசித்திருக்கையிலே இந்த ஆச்சான்பிள்ளை பெரிய வாச்சான் பிள்ளையாயிருக்கத் தகுதியேயில்லை யென்று சதுரமான நிரூபணத்தைச் செய்ததற்குப் பிறர் சொல்லும் பதில் அநுவதிக்கவும் தகாத

acharya.org

தாயிருக்கின்றது; 'க்ரமவிவக்ஷையின்றிக்கே மாமுனிகள் அருளிச் செய்தார்' என்று இந்த ஒரே வார்த்தையில் அடித்திருந்தால் அது வொரு வழியாயிருக்கும்; மாமுனிகள் க்ரமம் தவறாமலே யருளிச் செய்பவரே யென்பதை மறக்கமாட்டாமல் இசைந்து கொண்டு, நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டர்க்குப் பிறகு தான் பெரியவாச்சான் பிள்ளையை நிர்தேசிக்க வேண்டுமென்றும், அவர் பட்டர் ஸந்ததியில் தோன்றிய வரா கையாலே பெரியவாச்சான் பிள்ளையைக் காட்டிலும் சிறந்தவராதலால் அவர்க்கே புரஸ்காரமுரியது என்றும் வெள்காமல் எழுதிவைக்கிறார்கள். அப்படிப்பட்ட மேதாவிகள், பெரியவாச்சான் பிள்ளை தனியனுக்கு முன் வடக்குத் திருவீதிப்பிள்ளை தனியனைப் பெரியார் அநுஸந்தித்து வருவதிலும், நம்பிள்ளைக்கு தக்ஷிண பார்ச்வாக வடக்குத் திருவீதிப்பிள்ளை அமர்ந்திருப்பதிலும் கூசாமல் ஆக்ஷேபம் கூறுகிறார்கள். அஸூயா பிண்டமாய்ப் பல காலம் நம்பிள்ளையை தூஷித்துக் கொண்டு அணுகாமலிருந்த நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர்க்கும், பரிமளத்துடனே அங்குரிக்கும் திருத்துழாய போலே நப்பிள்ளை திருவடிகளில் பக்தியே வடிவெடுத்த பெரியவாச்சான் பிள்ளைக்கும் அஜகஜாந்தர முண்டென்பதை அனைவருமறிவர். ஆகவே ஒரு நிலையில் நில்லாமலும் மனம்போன போக்காகவும் பேசுகின்ற பிறரைப் பற்றி நமக்குக் கவலையில்லை. விஷய தத்துவங்களை உள்ளபடி நாம் தெரிந்துகொள்வதும் ப்ராமாணிகர்கள் உகக்கத் தெரிவிப்பதுமே நமக்கு உற்றது. அடைவு தப்பாமல் அருளிச் செய்யும் முறையில் நிகரற்ற மணவாள மாமுனிகள் நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரை நிர்தேசித்தபிறகு ஆச்சான்பிள்ளை யென்று நிர்தேசித்திருக் கையாலே அவர் பெரியவாச்சான் பிள்ளையாயிருக்கச் சிறிதும் ஔசித்யமில்லையென்று காட்டினதற்கும் மேற்பட்ட மிகச் சிறந்த ப்ரமாணமாக "பிள்ளை லோகாசார்யரை நிர்தேசித்த வனந்தரமும் ஆச்சான் பிள்ளையை நிர்தேசித்துள்ளார்" என்று எடுத்துக் காட்டினவிது ப்ராமாணிகமத்யஸ்தர்களை நன்கு தெளிவிக்கக் கூடியதன்றோ. இதை நன்றாக வற்புறுத்த அடியேனுக்கும் நினைவுக்கு வந்ததோரிடத்தை விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

ஸாத்விகர்—நீ விஜ்ஞாபிக்கப் போவதை நானறிவேன்; எத்தனைசொன்னாலும் 'மாமுனிகள் அடைவுதப்பாமல் அருளிச்செய்பவர்' என்கிற பரமார்த்தத்தைத் தானே ஸ்தாபித்து நிற்கும். பிள்ளை லோகாசார்யருங்கூட ஸ்ரீவசநபூஷணாதிகளில் ஒரேயிடத்தில் பலப்ரமாணங்களை யெடுக்கும்போது அடைவுதப்பாமல் எடுக்கலாமாயிருக்க அடைவில் நோக்கின்றியே திருவுள்ளத்தில் ஸ்புரிக்கிறபடியே எடுத்துவிடுவதுண்டு; (ஸ்ரீவசநபூ. 384.) "ஜ்ஞானவான்கள் * இன்றென்னைப் பொருளாக்கித்தன்னை யென்னுள்வைத்தான் * எந்நன்றி செய்தேனாவென்னெஞ்சில் திகழ்வதுவே * நடுவேவந்துய்யக் கொள்கின்றநாதன் * அறியாதனவறிவித்த வத்தாநீ செய்தனவடியேனறியேனே * பொருளல்லாத வென்னைப் பொருளாக்கியடிமை கொண்டாய் * என்னைத் தீமனங்கெடுத்தாய் * மருவித் தொழும்மனமேதந்தாய் * என்று ஈடுபடாநிற்பர்கள்" என்கிற சூர்ணையில் எழு பாசுரங்கள் எடுக்கப்பட்டுள்ளன; இவை ஓரடைவிலே எடுக்கப்படாமல் முன்னது பின்னதாகவும் பின்னது முன்னதாகவுமே யெடுக்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனே பலகாட்டலாம். மணவாளமாமுனிகளின் ரீதியோ ஓரிடத்திலுமிப்படிப்பட்டதன்று. சிறிதும் அடைவுதவறமாட்டார். மூலமுள்ள அடைவிலேயேதாம் வியாக்கியானம் செய்தருளவேண்டுகையாலே மேற்காட்டிய இடம்போன்ற விடங்களில் வியாக்கியானங்களில் அவர் பரதந்திரராய்ச் செல்ல நேருகின்றது. பராதீநதையின்றிக்கே தாம் ஸ்வச்சந்தமாக அருளிச்செய்யுமிடங்களில் மாமுனிகள் தழுவிப்போருகிற அடைவு மற்றொருவர்க்கும் நிலமன்று. இதற்கு ஓரிடமேகாட்டுகின்றேன்; மூமுக்ஷுப்படியில் "இத்தை வேதங்களும் ரிஷிகளும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் விரும்பினார்கள்" என்ற சூர்ணையின் வியாக்கியானத்திலே திருமந்த்ரத்தை ஆழ்வார்கள் விரும்பினபடியை நிரூபித்தருளுமிடத்து பதினாறு பாசுரங்களையெடுத்துக் காட்டியருளுகிறார் மாமுனிகள்; அங்கு எவ்விதமான அடைவைத் திருவுள்ளம் பற்றியிருக்கிறாரென்பதை நோக்குங்கால் மெய்சிலிர்க்கின்றது. பிறர் அவ்விடந்தன்னை யெடுத்துப்பார்த்தால் அவர்களுடைய புத்திக்கு அவ்வடைவின் அழகு சிறிதும் புலனாகாது. வேணுமாகில் பரீக்ஷையாகவே கேட்டுப்பார்க்கலாம். ஸதாசார்யபாத ஸேவாவைதேசிகர்களான அப்படிப்பட்டவர்களுடைய துர்வாதங்களை யெல்லாம் நீ நெஞ்சிற்கொண்டு கேட்பதும் உனக்கு நான் விடையிறுப்பதும் யுத்தமன்றே. ஆனாலும் நீ எதுகேட்டாலும் நானசொல்லுவதாக முன்னம்வாக்களித்துவிட்டபடியால் எதற்சம்பதில் சொல்லியே தீருவேன். இன்னமும் கேளாய் சீமானே!

ஸாது—சீறியருளாமல் கருணையோடு அருளிச் செய்யவேணும். இன்னுமொன்றே யொன்று கேட்டுத் தற்காலம் முடித்துக் கொள்ளுகிறேன். திருவாய்மொழியில் (2—2—4.) * தேவனெம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையுந்தகுமே * என்றவிடத்தில் ஈட்டில் "சிக்குத்தலையனுக்குப் பூத்தகாது; பிச்சையுண்ணிக்குப் பூசனைதகாது" என்கிறவார்த்தைகளை மணவாளமாமுனிகள் ஸேவிக்கையில் 'பரம

acharya.org

பவித்திரமான இந்ததிவ்யக்ரந்தத்தில் இந்தவார்த்தைகள் அவ்வளவு அவசியமோ' என்று தம்முள்தாம் பேசி, இதைச் சொல்ல நமக்கென்ன அதிகாரமென்றும் உடனேயருளிச் செய்தாரென்று பெரியார் சொல்லிவருகிறார்களே; இது தேவரீர் கேட்டதுண்டோ? இதற்கு ஏதாவது ஆதாரமுண்டோ? இது நவீநர்களால் ஸ்வகபோல கல்பிதமானதென்றும், நம்பிள்ளைக்கும் ஒரு தாழ்வை ஸ்தாபிக்குமதான அநியாயவார்த்தையென்றும் பிறர் கூறுகின்றார்களே. இதைப்பற்றி தேவரீருடைய திருவுள்ளமென்ன?

ஸாத்விகர்—அந்த ஈட்டு ஸ்ரீஸூக்தி விஷயமாக மணவாள மாமுனிகள் இப்படி குறையெண்ணினதாகச் சொல்லுகிற வார்த்தைக்கு ஆதாரமுண்டா? என்பது ஒரு விசாரம். இது நம்பிள்ளைக்குத் தாழ்வை ஸ்தாபிக்கிற அநீதியான வார்த்தைதானு வென்பது மற்றொரு விசாரம். உன்னுள்ளம் த்ருப்தியடையும்படி சொல்லுகேன் கேளாய். இந்த வார்த்தை அநீதியானதுதான் என்று தேறிவிடுமானல் இவ்வைதிஹ்யத்திற்கு எவ்வளவு ஆதாரமிருந்தும் பயனில்லை. இது அநீதியன்று, யுக்தமானதே யென்று தேறிவிடுமானல் ஒரு ஆதாரமுமில்லையானலும் ஹானியில்லை. இதற்கு ஆதாரங் காட்டவேணுமேயானல் மாமுனிகளுக்குப் பிற்பட்டவர்களின் வாக்கிலிருந்துதானே காட்ட முடியும். அன்னவர்கள் எழுதி வைத்திருப்பதை யெல்லாம் நாம் நம்புவதென்றால் பல கஷ்டங்கள் நேரும். பெரியார்களுக்கு அது உடன்பாடுமன்று. குருபரம்பராப்ரபாவாதிகளில் பின்னுளருடைய கைச்சரக்குகள் எவ்வளவோ கலந்து விட்டனவென்று தெரிகிறது. யதீந்த்ரப்ரவணப்ரபாவம் ஒன்றல்ல; ஆசார்ய புருஷர்களின் திருமாளிகை தோறும் ஒவ்வொருவிதமான ஓலைச்சுவடி காண்கிறது இது நிற்க. பெரிய வாச்சான் பிள்ளையின் நாலாயிர வியாக்கியானங்களிலும் ஈட்டிலும் ஆளவந்தார் தொடங்கிப் பல ஐதிஹ்யங்கள் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன அவையெல்லாம் கல்பனையான ஐதிஹ்யங்களே யொழிய ஒன்றுகூட வாஸ்தவமல்ல என்று இதர ஸம்ப்ரதாயஸ்தர்கள் கூசாமல் சொல்லுவதோடு நிற்கவில்லை, எழுதியும் வைத்திருக்கிறார்கள். பெரிய பரகால ஜீயரென்பவர் எழுதிவைத்த பதினெண்ணுயிரப்படியில் இது விசேஷமாகக் காணலாம். * 'புரிவதுவும் புகைபூவே * என்ற விடத்து ஈட்டில் நஞ்சீயர் பட்டரை யொன்று கேட்டதாகவும் அதற்கு பட்டர் ஒரு பதில் ஸாதித்ததாகவு முள்ளது. அதை ரஸிக ப்ராஜ்ஞ ப்ராமணிகர்களனைவரும் ஆனந்த பாஷ்பம் பெருக நின்று சொல்லியும் கேட்டும் மெய்சிலிர்த்துக் களிக்கின்றார்கள். அப்படிப்பட்டவகனை அந்த பரகாலஜீயர் அவலீலையாக தூஷித்திருக்கிறார்; அந்த ஸம்வாதமே ஸர்வாத்மநா அஸங்கதமென்று முடித்திருக்கிறார். இது ஓரிடமே யன்று. இப்படி நூறிடங்கள் காட்ட முடியும். திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையுரையில் அதெல்லாம் எடுத்து மறுக்கப்பட்டிருக்கின்றன வென்பது நிற்க. பெரிய வாச்சான் பிள்ளை போல்வார் ஸாதித்திருப்பதெல்லாம் பொய்யான ஐதிஹ்யங்கள், அஸங்கதமான ஸம்வாதங்கள் என்கிற வாதம் எதிர்த்தலையிலுள்ளதென்பது மறைக்க முடியாதது. அரசாணிபாலை வேங்கடாத்வரி *"விதுஷாமபி மோஹமாவஹதோ விததைதிஹ்ய ஸஹஸ்ரவர்ணநே * என்று ச்லோகமெழுதிப் பரவவைத்துப் போய்விட்டார். "ஆளவந்தார் இப்படி யருளிச்செய்வர்; எம்பெருமானரிப்படி யருளிச்செய்வர்" என்று அடிக்கடி வியாக்கியானங்களில் வருமிடத்து "ஆளவந்தாரும் எம்பெருமானரும் ஸாதிக்கும்போது இவர்களிருந்து கேட்டார்களோ? அக்காலத்திலிருந்தவர்களில் ஒருவரு மெழுதிவைக்காத விஷயங்களை இருநூறு முந்நூறு ஆண்டுகட்குப் பின்னே யுள்ளவர்கள் எது கொண்டு தெரிந்து கொண்டார்கள்?" என்றிப்படி சிலர் ஜ்ஞாநலவதுர்விதக்தர்களாய் இற்றைக்கும் ஆக்ஷேபஞ் செய்து நிற்கக் காணநின்றோம். *"தேநாவ லோக்ய க்ருதிந: பரிபுஞ்ஜதே தம் தத்ரைவ கேபி சபலாச் சலபீபவந்தி" * என்று பட்டருளிச் செய்த கணக்கிலே நம்பி வாழ்வாரும் எசி வீழ்வாருமாயிருக்கின்றார்கள். வேதத்தில் *"பூர்வே பூர்வேப்யோ வச ஏத தூசு:" * என்றோதியிருக்கிறபடியே பரம்பரையாக வருகிற வார்த்தைகள் பலவுண்டென்பது எந்த மதஸ்தரும் இசைய வேண்டியதாயிருக்கின்றது. பஹுச்ருதர்களென்றும் ஸதாசார்ய பரம்பரையிலே படிந்து காலக்ஷேபங் கேட்டவர்களென்றும் கொண்டாடப்படுகிற பெரியார்கள் எக்காலத்திலுமுளர்; எந்நாட்டிலுமுளர்; எம்மதத்திலு முளர். இதிஹாஸ புராணங்களிற் காணுத புராதந கதைகள் நாளைக்கும் கர்ணபரம்பரையாகவே வருவன பலபலவுண்டன்றே. அப்படியே ப்ரக்ருதவார்த்தையும் பஹுச்ருதர்களின் பரம்பரைகளிலே வருகிறதென்றால் சில கூபமண்டூகங்கள் எதையாவது சொல்லிக் கொண்டிருக்கட்டுமே; அதனுலென்ன? இதற்கு ஒரு ஆதாரம் காட்டினுலும் அதற்கும் தூஷணந்தானே உடனே யேற்படப்போகிறது. சோழனுடைய உபப்லவத்தில் உடையவர் வெள்ளை சாத்திக்கொண்டெழுந்தருளினர்; ஆழ்வான் காஷாயமணிந்து ராஜ ஸபைக்கு எழுந்தருளினரென்றால் இதை ஆக்ஷேபிப்பவர்களுக்கு உடையவர் காலத்திலேயே அவதரித்த (கருடவாஹந பண்டிதருடைய) திவ்யஸூரி சரிதத்தையும் (வடுக நம்பியினுடைய) யதிராஜ வைபவத்தையும் அசைக்க முடியாத ப்ரமாணமென்று காட்டினுலுங்கூட

acharya.org

அவற்றையும் அஸத்யமென்றே அஸங்கதமென்றே தூஷிக்கத்தானே தலைப்படுகிறார்கள். இப்படி பல்லாயிரம் காட்டுவேன். ஆகவே இந்த ஐதிஹ்யத்திற்கு ஆதாரமென்ன? என்கிற கேள்வியை விட்டிடு; பஹுச்ருதர்கள் பரம்பரையாகச் சொல்லி வருவதே ப்ரபலமான ஆதாரம். அது அவிச்சின்ன பரம்பரையாய் நீடூழி நிலவுதற்காக ஒரு பெரியார் எழுதி வைத்தால இதில் ஆக்ஷேபமும் தூஷணையும் எதற்கு?

ஸாது—அஸங்கதமான விஷயமென்று தோன்றினால் ஆக்ஷேபியாமலிருப்பார்களோ?

ஸாத்விகர்—இது வாஸ்தவம்; விஷயம் ஸங்கதமா அஸங்கதமா? என்கிற விசாரம் அவச்யம் செய்யத் தக்கதே. அது செய்தே தீருவோம். முன்ன மொன்றுரைக்கின்றேன் கேள். * சிக்குத் தலையனுக்கித்யாதி ஸ்ரீஸூக்தி விஷயமான ப்ரக்ருத ஐதிஹ்யத்தை நானே இன்று கல்பித்துச் சொல்லுகிறேனென்றே வைத்துக்கொள். இதை எதற்காகச் சொல்லுகிறேனென்பதை முன்னம் விமர்சிக்க வேண்டும். பரதாழ்வான் அபரிமிதமான ஆர்த்தியோடு எப்படியாவது பெருமாளை மீட்டு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போகவேணு மென்கிற பரமபக்தியோடே வருகிறான்; அவனை குஹப் பெருமாள் பார்த்து ஒருக்ஷணம் ஸ்வல்பம் அதிசங்கித்ததாக வால்மீகி ராமாயணத்திலுள்ளது. இவ்விஷயத்தைக் கம்பர் சண்ட ப்ரசண்டங்களான பதினைந்து செய்யுள்களினால் பெரும் புராணமாக வளர்த்திருக்கிறார். "அஞ்சன வண்ண னென்னுருயிர்நாயக னாளாமே வஞ்சனையா லரசெய்திய மைந்தரும் வந்தாரே, செஞ்சரமென்பன தீயுமிழ்கின்றன செல்லாவோ, உஞ்சிவர் போய்விடின் நாய்க்கு கனென்றெனை யோதாரோ" "ஆழ நெடுந்திரையாறு கடந்திவர் போவாரோ, வேழநெடும்படை கண்டுவிலங்கிடும் வில்லாளோ, தோழமையென்றவர் சொல்லியசொல்லொரு சொல்லன்றோ, ஏழைமைவேட னிறந்திலனென்றெனை யேசாரோ" என்றிப்படி மிகமிகக் கொடிய பேச்சுக்களைப் பெய்து கம்பர் கதையை மிக விரித்து விட்டார். ஒரு ராமாயணத்திலாவது இவ்வளவுக்கு ஆதாரமுண்டோ? பரமபாகவத சிகாமணியான பரதாழ்வான் மீது குஹன் இவ்வளவு த்ரோஹபுத்தி கொண்டானென்றால் புது நரகமன்றோ படைக்கவேணும். பரதாழ்வானுக்கும் ராம த்ரோஹியென்கிற அபக்க்யாதியைப் பரப்பி, குஹனுக்கும் பாகவதா பசாரப் படுகுழியை வளர்த்தி இப்படி எதுக்குக் கம்பர் பாட்டுக்களைப் பணித்தார்? என்று கேட்டால் வாய்திறக்க முடியுமோ பிறர்க்கு? குஹன் இராமனிடத்து வைத்திருந்த அன்பு அளவுகடந்தது என்கிற வொரு விஷயத்தை நிலை நாட்டுதற்கே கம்பர் இத்தனை கற்பனை பண்ணினார் என்று சொல்லவேண்டியது தவிர வேறில்லையே. மேலே விபீஷண பரிக்ரஹ ப்ரகாணத்தில் பெருமாள் ஸுக்ரீவ மஹாராஜரை நோக்கி ஒன்று சொன்னதாக [வான்மீகத்திலில்லாததை] கம்பர் கூறியுள்ளார்; * ஆதலாலபய மென்ற பொழுதத்தே * என்ற செய்யுளில் "என்பால் வைத்த காதலால் இனி வேறெண்ணக் கடவதென் கதிரோன் மைந்த!" என்றுள்ளது காண். ஸ்ரீராமபிரானிடத்துள்ள பக்திப்பெருங் காதலினால்தான் ஸுக்ரீவன் விபீஷணாழ்வானை அதிக்ஷேபித்தானென்று காட்டினரன்றோ. இங்ஙனே குஹனுக்கும் ஸ்ரீராம பக்தி மிகப்பெரிதென்று காட்டுதற்காகவே கம்பர் விசேஷகற்பனை செய்தார் என்று சொல்வதை இங்கு நிதர்சனமாகக் கொள்ளாய்.

ஸாது—அடியேன் மனத்தில் நன்கு பதியும்படி இன்னமுஞ்சிறிது விவரித்தருளிச் செய்ய வேணும்.

ஸாத்விகர்—'பரமபவித்திரமான ஈட்டிலே * சிக்குத்தலையனுக்கித்யாதிவார்த்தைகள் இல்லாமலிருந்தால் நன்றாயிருக்குமே' யென்று மணவாளமாமுனிகள் திருவுள்ளம்பற்றினாரென்றால், இதனால் ஈட்டுக்கு ஒரு அவத்யம் ஏற்படுகிறதென்றாவது நம்பிள்ளைக்கொரு குறை விளைகின்றதென்றாவது சொல்ல ப்ரஸக்திலேசமுங்கிடையாது. 'ஒருவருடைய மனமும் சிறிதும் புண்படாதபடி ஸ்ரீஸூக்திகள் அமைந்திருக்கவேணுமென்று நினைப்பவர் மணவாளமாமுனிகள்' என்று அவரொருவர்க்கே அஸாதாரணமாகவுள்ள பெரும்புகழ் ஒன்றேதான் இந்த கற்பனையால் தேறும். [கற்பனையென்றது தூஷகர்களின் நினைவாலே. "தர்மமென்கிறது ப்ரமித்தவர்ஜுனன் கருத்தாலே" என்றது போல.]

ஸாது—ஆனாலும் மஹாவ்யாபகரான நம்பிள்ளைஸாதித்த உயர்ந்தஸூக்தியிலே, பரமப்ராமாணிகராய் * முன்னோர்மொழிந்த முறைதப்பாமற் கேட்டுப்பின்னோர்ந்து தாமதனைப் பேசுவதையே விரதமாகக் கொண்டவரான மாமுனிகள் ஒரு குறை கூறினாரென்றால் இதனாலேற்படுகிற பெரும்புகழ் இருக்கட்டும்; இதுவே அவர்க்கொரு அவத்யமன்றோ.

acharya.org

ஸாத்விகர் — இத்தனை நாழிகை நான்சொன்னதை யெல்லாம் அரண்யருதிதமாகவும் கடலோசையாகவு மாக்கிவிட்டனையே; இது நீ உன்னபிப்ராயத்தினால் கேட்கிற கேள்வியன்று, விஷயத்தை வாங்கிக்கொள்ளாமல் சிலர் மூர்க்கத்தனமாகத் தம்வாதத்தையே செய்துகொண்டிருப்பர்களென்று நீ காட்டுகிறாய் போலும். இன்னமுஞ் சொல்லுகேன் கேளாய். ஸ்ரீவசந பூஷணம் 234 — சூர்ணையின் வியாக்யானத்திலே எம்பெருமானார் ஸ்வாசார்யரான பெரியநம்பியை எதிர்த்துப் பேசினதாக ஒரு ஐதிஹ்யம் மாமுனிகளால் அருளிச்செய்யப்பட்டுள்ளது. பெரியநம்பி மாறனேர்நம்பியை ஸம்ஸ்கரித்து எழுந்தருளினராம்; அத்தை உடையவர் கேட்டருளி பெரிய நம்பி ஸ்ரீபாதத்திலேவந்து 'ஸ்வாமிந் மர்யாதை கிடக்கக் கார்யஞ் செய்யவேண்டாவோ? தேவரீரே இதைச் செய்யவேணுமோ? யாரேனுமொருவரையிட்டுச் செய்திருக்கக் கூடாதா?' என்று ஆக்ஷேபித்ததாகவும் அதற்குத் தக்கவிடை பெரியநம்பி விடுத்ததாகவும் ஸாதிக்கப்பட்டிருக்கிறது. அவர் விடுத்த விடை கிடக்கட்டும்; எம்பெருமானார்க்குத் தெரியாத விஷயத்தை அவர் அபூர்வமாக வொன்றும் சொல்லி விடவில்லை. எம்பெருமானார் அவரிடம் சென்று ஏதோ ஆக்ஷேபித்ததாக எழுதப்பட்டிருக்கிறதே, இது ஸ்வாமியின் ப்ரக்ருதிக்குச் சேருமா? ஸ்வாசார்யர் அவிவேகியல்லரே; அவர் ஒன்று செய்தாரென்றால் அதையாக்ஷேபிக்க இவர்க்கு அதிகாரமுண்டோ! ஆக்ஷேபத்தை நெஞ்சால் நினைக்கத்தான் ப்ரஸக்தியுண்டோ? தைத்திரீ யோபநிஷத்தில் "அத யதி தே கர்மவிசிகித்ஸா வா வ்ருத்தவிசிகித்ஸா வா ஸ்யாத்" என்று தொடங்கி "யதா தே தத்ர வர்த்தேரந், ததா தத்ர வர்த்தேதா:" என்று ஓதிற்றேயொழிய அவர்கள் செய்வதை ஆக்ஷேபித்துக் கொண்டுகிட' என்று ஓதிற்றில்லையே; ஏதோ காரணார்த்தமாக ஸ்வாமி ஆக்ஷேபித்திருந்தாலும் அதை அம்பலத்தில் அவிழ்த்துவிடலாமோ? ஆசார்யஹ்ருதயத்தில் "புரோடாசமாகச் செய்த புத்ரக்ருத்யமும்" என்றது போலே முக்கியமானதைச் சொல்லிவிட்டு ஆக்ஷேபத்தை மறைத்து விடலாகாதா? பெரிய திருமொழியில் * கண்சோர வெங்குருதி ப்ரவேசத்திலும் ஸ்வாமி ஸ்வாசார்யரை ஆக்ஷேபித்ததாகவே பெரியவாச்சான் பிள்ளை ஸாதித்திருக்கிறார். இவ்வளவோடும் நிற்கவில்லை; ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே நேராகக் கேட்ட திருமாலையாண்டான் ஸாதித்த அர்த்தங்கள் பலவற்றையும் எம்பெருமானார் ஆக்ஷேபித்து, * விச்வாமித்ர ஸ்ருஷ்டியென்று அவர்தாமே வருந்திப் பேசும்படியும் காலக்ஷேபமும் நின்றுபோகும்படியும் ஸ்வாமி யெம்பெருமானார் பல பல பேசியிருப்பதாக வாசிக்கிறோம். பெரிய திருமொழியில் * அரக்கராட்டழைப்பாரில்லை நாங்களஞ்சினோம் * என்றவிடத்தில் நஞ்சீயர் ஸாதித்த வொருபொருளை நம்பிள்ளை கேட்டு "அப்படியா அர்த்தம் சொல்வது, இப்படிச் சொல்லவேண்டாமா? என்றதாகவும் "ஆமாம், நீர் சொல்லுகிறபடித்தான் சொல்லவேண்டும்" என்று நஞ்சீயர் தழுவிக்கொண்டதாகவும் பெரியவாச்சான் பிள்ளை பணித்துள்ளார். * கரியமாமுகிற் படலங்கள் கிடந்து அவை முழங்கிடக் களிறென்று பெரியமாசுணம் வரையெனப் பெயர்தரு பிரிதி * என்றவிடத்து வியாக்கியானத்தில் ஐதிஹ்யமுங் காணலாம். அவையெல்லா மொருபுறமிருக்கட்டும். ஸ்வாமி யெம்பெருமானாருடைய விஷயங்களை யெடுத்துரைத்தேனே; அவற்றைப் புறமதத்தவர்கள் கண்டுங் கேட்டும் என்ன சொல்லுகிறார்களென்பதையறிவாயோ?

ஸாது — இப்படிப்பட்ட விஷயங்களை தேவரீருடைய திருவாக்கில் கேட்கவேணுமென்றாசை கொண்டே அடியேன் வினவினேன். நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் ஒரு பக்கமிருக்க; உலகமெல்லாம் போற்றும் ஸ்ரீராமாயணத்தினுள்ளே புகுவோம். பரதாழ்வானைப் பற்றிப் பேசுகின்ற வான்மீகி முனிவர் * "விலலாப ஸபாமத்யே ஜகர்ஹே ச புரோஹிதம் * என்கிறார். ஞானனுட்டானநிதியாய்ப் பரமாசார்யரான வஸிஷ்டரை மிக்க செருஞ்சபை நடுவே பரதன் வாய்வந்தபடியெல்லாம் வைது அஸஹ்யாபசாரப் பட்டதாக வான்மீகி யெழுதுகிறார். "விலலாப ஸபாமத்யே பரதச் சோககர்சித:" என்றாற்போலே ச்லோகமிட்டிருந்தால் எவ்வளவு அழகாயிருக்கும். துச்சமாக கர்ஹிக்கும்படி வஸிஷ்டபகவான் அவ்வழக்காக என்ன பேசி விட்டான்? யுக்தமானதையேயன்றோ அவன் சொல்லியிருப்பது. அது பரதாழ்வானுக்கு மிகவும் அஸஹ்யமாயிருந்ததென்பது வாஸ்தவம். அதனால் அவன் ஆசார்ய நிந்தை பண்ணவேண்டிய அவசியமில்லையே. *"ராஜ்யஞ்சாஹஞ் ச ராமஸ்ய தர்மம் வக்துமிஹார்ஹஸி" * என்ற விநயமஸ்ருண வார்த்தையோடு நிற்பதன்றோ அழகு. * ஸபாமத்யே ஜகர்ஹேச புரோஹிதம் * என்னும்படியான அஸந்தர்ப்பவார்த்தைகள் எதுக்கு அதெரிக்கவேணும்? இப்படிப்பட்ட பலகோடி நூறாயிரம் விஷயங்களைச் சிறிதும் விமர்சியாமல், காகிதமும் பேனாவும் கைவசமுள்ளதென்று மூர்க்க ஜனங்கள் எதையேனும் எழுதிவைக்கவும் அதைக் கண்டு சில ஜடங்கள் ஹாஹா என்னவும் சேர்ந்துவிடுகிறது. பரமபவித்திரமான ஈட்டில் சிக்குத் தலையனுக்கித்யாதி வார்த்தைகள் இருக்கத் தகவே தகாதென்று மாமுனிகள் விஸ்தாரஞ் செய்து முடித்திட்டதாக ஐதிஹ்ய சரீரமில்லை; அப்படியிருந்தால்கூட ஆக்ஷேபிக்க இடமே கிடையாது. நம்பிள்ளையோ பட்டரோ

acharya.org

எம்பெருமானுரோ நாதமுனிகளோ நம்மாழ்வாரோ யாவரும் * தஸ்ய நார்ஹந்தி கலாம் கோடிதமீபபி * என்றாற்போலே மணவாளமாமுனிகளின் ப்ரக்ருதிக்கு ஏகதேசமு மொவ்வார் என்பது பொய்ம்மை யொன்றில்லாத மெய்ம்மைப் பெருவார்த்தை. அவருடைய திருவாக்காகச் சொல்லபபடும் வார்த்தை ஸம்பாவிதமா அன்றா என்பதை * என் நெஞ்சினால் நோக்கிக் காணீர் * என்றாற்போலே அவருடைய திருவுள்ளத்தாலன்றோ நோக்கிக் காணவேணும். ஈட்டு ஸ்ரீஸூக்திகளைக் கண்டபாடஞ் செய்திருந்த மாமுனிகள் சிக்குத்தலையனுக் கித்யாதி ஸூக்திகளைப் பாடத்திற் கொள்ளாது விட்டிட்டாரென்று யாரேனு மெழுதிற்றுண்டோ? அது இல்லையே.

ஸாத்விகர்—அப்படிகூட எழுதிவைத்திருக்கவேண்டுமென்றே நான் சொல்லுவேன். ஆசார்ய ஹ்ருதயத்தில் (69) "உதாத்தாதி பதக்ரம ஜடாவாக்ய பஞ்சாதி" இத்யாதி சூர்ணையின் மாமுனிகள் வியாக்கியானத்தை யெடுத்துப்பார். மூலத்தில் "பந்தம்" என்றும் "தளை" என்றும் இரண்டு சொற்கள் உள்ளன; மாமுனிகள் "பந்தமும் தளையுமொன்றாகையால் இங்கே பந்தமென்றும் மேலே தளையென்றும் சொல்லுமளவில் புநருக்தமாகையாலே இரண்டத்தொன்று வர்ஜிக்கவேணும்" என்றருளிச்செய்கிறார். நான்கு வரிகளுக்குமேலே "துறை என்கிற விதுவும் இனத்தின் வகையிலொன்றாகையாலே புநருக்தமாம்" என்கிறார். இவற்றால் மூலத்தில் இரண்டு சொற்களை வர்ஜித்துப் பாடஞ்செய்யவேணுமென்று மாமுனிகள் நியமிப்பதாகத் தேறுகின்றது. 'இப்படி யெழுதலாமா இவர்?' என்று ஒருவன் கேட்டுவிட்டால்' "வாய்திறக்கவுண்டோ வழி" என்ன வேண்டியதே. வையாகரண கோஷ்டியிலே சென்றால் "மஹா பாஷ்யே ப்ரத்யாக்யாதம்" என்று பல்லாயிரம் முறை காதிலும் கண்ணிலும் விழுகிறது. பதஞ்சலி மஹர்ஷிக்கு மிக முற்பட்டவர் பாணினிமஹர்ஷி. அப்படிப்பட்டவருடைய ஸூத்ரங்களைத் தள்ளி விடுவதற்குப் பதஞ்சலி யாரிடமிருந்து அதிகாரம் பெற்றாரென்று கேட்டறிய வேணும். நேற்றுவரை ஸம்ப்ரதாய வாஸனையே யறியாமற் கிடந்து "புதுத் தெய்வங்கொண்டாடுந் தொண்டர்" என்று திருமங்கையாழ்வாரழைக்க, நாயிந்தே யென்னத் தகுதியுடையார் வயிற்றெரிச்சல் தாங்கமாட்டாமல் எதையோ எழுதிவைத்தால்......போதும்.

ஸாது—க்ருபையுடன் க்ஷமித்தருளவேணும். இன்னுமொன்றேயொன்று கேட்டு நிற்கிறேன். அவகாசமளிக்கலாமோ?

ஸாத்விகர்—ஒன்றல்ல, ஒன்பதல்ல, ஒன்பதினாயிரமுங் கேள் என்று முன்னமே சொல்லியிருக்கிறேன். ஒன்று மாத்திரம் நினைப்பூட்டுகிறேன்; ஸர்வஜ்ஞரும் பரம ரஸிகருமான பெரிய வாச்சான் பிள்ளை சாஸ்த்ரார்த்தங்களை அத்புதமாக அருளிச்செய்வதுபோலே ஹாஸ்யரஸபுஞ்ஜமான வேடிக்கை வார்த்தைகளும் ஊடேயெழுதிவைப்பதுண்டு; அவருடைய வியாக்கியானங்களில் "ஸாமான்யனென்று இடுநீடெல்லாம் இடுங்கோளென்றிருந்தான்" என்றும் "ஸாமான்யனென்று இடுமிடெல்லாம் இடவமையும் என்பாரைப்போலே" என்றும் காண்கிறது. இதை விவரிக்கின்ற அரும்பதவுரைகாரர்கள் அழகர் திருமலையில் சோழியர்க்கும் ஸாமாந்யர்க்கும் நடந்த சண்டைக் கதையே இங்கு விஷயமென்று வேடிக்கையான கதையொன்றைக் காட்டுகிறார்கள். அப்படிப்பட்ட மல்லர்களோடே பொரகில்லோம் நாம். விஷயங்கள் எவ்வளவும் சொல்லவல்லோம்.

ஸாது—அடியேன், அது தெரிந்ததே. பரந்த ரஹஸ்ய ஸ்ரீஸூக்திகள் தேசிகக்ரந்தங்களுக்கு விடைகூறுகிறமுறையில் அமைந்திருக்கின்றன வென்பதைக்காட்டி, இதனாலும் பரந்த ரஹஸ்யம் பிள்ளை லோகாசார்யருடைய திவ்ய க்ரந்தங்களுக்குப் பிற்பட்டதே யென்று நன்கு நிஷ்கர்ஷிக்கப் படுமென்று பெரியார் கூறுகின்றனர். இதற்கு பதில் சொல்லப் புகுந்த பிறர் "தேசிகருடைய கொள்கைக்கு மாறுபட்ட அபிப்ராயங்கள் நம்பிள்ளை முதலியோரருளிய ஸ்ரீஸூக்திகளிலும் காணப்படுகின்றன. பரந்தரஹஸ்யத்தில் மட்டுமென்ன? பெரிய வாச்சான் பிள்ளையின் திவ்யப்ரபந்த வியாக்கியானங்களிலும் எவ்வளவோ பங்க்திகள் தேசிக க்ரந்தங்களுக்கு விடைகூறுகிற முறையில் அமைந்திருக்கின்றன; ரஹஸ்ய விவேக க்ரந்தமே இதற்குப்போதுமான சான்று" என்கிறார்கள். இவ்விஷயத்தில் தேவரீருடைய திருவுள்ளமறிய விரும்புகிறேன்.

ஸாத்விகர்—நம்மாழ்வார் திருவிருத்தத்தில் * வணங்குந்துறைகள் பலபலவாக்கி, மதிவிகற்பால் பிணங்குஞ்சமயம் பலபலவாக்கி * என்றருளிச் செய்திருக்கையாலே அனேகமதக் கோட்பாடுகள் அநாதிகாலமாகவேயுண்டென்பதை யாவருமறிவர். பிராட்டிக்குப் புருஷகாரத்வமேயொழிய உபாயத்வமில்லையென்கிற பகவச்சாஸ்த்ர ஸித்தாந்தத்திற்கு மாறாக அவளுக்கு உபாயத்வமுமுண்டென்கிற மதம

acharya.org

தேசிகர்க்கு முற்பட்டவர்களின் காலத்திலுமுண்டென்பதை நிராக்ஷேபமாக இசைந்து கொள்வோம். அந்த மதத்தை அவலம்பித்தவர்கள் யாவரும ஒரே விதமான யுக்தி ப்ரமாணங்களைப் பேசமாட்டார்கள். ஒவ்வொருகாலத்திலே ஒவ்வொரு புலவர் ஒவ்வொருவிதமான யுக்தியையும் ப்ரமாணத்தையுங்கொண்டு வாதம் நிகழ்த்துவர்கள். அப்படிப்பட்ட ப்ரமாண ப்ரதர்சக யுக்திவாத விசேஷங்களைக்கொண்டும் அவற்றுக்கு பதில் கூறியிருக்கிற ப்ரணாளிகளைக்கொண்டும் நிஷ்கர்ஷிக்கப்படு முண்மை அசைக்க முடியாதது. ப்ரக்ருதத்தில், * வேரிமாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே * என்கிற ஆழ்வார் பாசுரத்தை ப்ரபல ஆதாரமென்று கொண்டு, பிராட்டியின் உபாயத்வத்தை இதுகொண்டு ஸ்தாபிக்க வந்தவர் தேசிகரொருவரே. அவர்க்குமுன் யாரும் இந்த ப்ரமாணத்தைக்கொண்டு வாதிக்கப் புகுந்த தில்லை. இந்தவாதம் பெரியவாச்சான் பிள்ளை காலத்திலேயே தோன்றியிருந்தால்—அவர் பரந்த ரஹஸ்யமருளிய ஆசிரியராயுமிருந்தால் திருவாய்மொழியில் அந்தப்பாசுரத்திற்கு வியாக்கியான மருளிச் செய்யு மிடத்திலும் பரந்தரஹஸ்யத்திற்போல் மறுப்பு எழுதியிருப்பர். அவ்விடத்து ஸ்ரீஸூக்தியை ஸேவித்தால், இந்தப்பாசுரத்தை உபஷ்டம்பகமாகக் கொண்டு ஒரு வாதம் தோன்றியிருக்கிற தென் பதைப் பெரியவாச்சான் பிள்ளையறிந்திலர் என்று ஸ்புடமாகவுணரலாம். ஒரு வாதம் விளைந்தால் அதில் எது உயிரான விஷயமோ அதைச்சுருங்கக்ராஹிகயா கொள்ளவும் அதற்கு ஸமஞ்ஜஸமான விடையிறுக் கவும் பிறர்க்கு ஆற்றல் ஏது? சைலீவாதத்தில் அனேகமருமங்கள் உண்டு. "இவர்கள் சைலி சைலி யென்று கூச்சலிடுவதனால் என்னப்ரயோஜனம்?" என்பவர்கள் சைலியைப்பற்றி மத்யஸ்தர்கள் எவ் விதமாகக் கூறுகின்றார்கள் என்பதைச் சிறிதுமறியாதவர்கள்; அறியவும் ஆற்றலற்றவர்கள். ஸம்ப்ர தாய ப்ரவசநதுரந்தரரென்று உண்மைப்புகழ்பெற்ற (பம்பாய்மகாநகர.) வீ. வீ. ஐயங்கார் ஸ்வாமிகள் எவ்வளவு அழகாக விஷயத்தை க்ரஹித்திருக்கிறார்! "பெரியவாச்சான் பிள்ளையின் ஸூத்ரங்கள் போன்ற சிறுவாக்யங்களும் அஸாதாரணமான பங்க்திகளும் மனத்ஸதயுருக்குமே; அந்த பந்தா எங்கே, பரந்தரஹஸ்யத்தின் பந்தா எங்கே?" என்று நிஷ்பக்ஷபாதமாக வெளியிட்டவர் அந்தவொரு ஸ்வாமியே யன்றோ. அந்தமஹான் பரமக்ருபையுடன் நேரில்ஸேவை ஸாதிக்க நேற்றே ஸ்ரீரங்கமெழுந்தருளி னார். அவர்திருவடிகளிற்பணிந்து தினவடங்கக் கேட்டுத் தெளியட்டும்.

ஸாது—அப்படியா? அந்த மஹான் இப்போது இந்த ப்ராந்த மெழுந்தருளியிருக்கிறாரா? அநி யாயமாய் இந்த சிசுபாலவாக்குக்கு அந்தமஹானும் இரையானவரே. * மின்னிடை மடவாரில் ஏழாம் பாட்டின் ஈற்றடியின் காரியமும் நடந்துவிடுமோவென்று மிகவஞ்சுகிறேன். அந்த விலக்ஷணவ்யக்தி விசேஷத்திற்கு ஸ்ரீவைஷ்ணவவுலகமெல்லாங் கூடிப்பல்லாண்டு பாடவேண்டியது மிக அவசியம். இரா மாநுசநூற்றந்தாதியில் * பொருந்தியதேசும் பொறையும் திறலும் புகழும் நல்ல திருந்திய ஞானமும் செல்வமுஞ் சேரும் எங்களிராமானுசனையடைபவர்க்கே * என்று கூறப்பட்ட அரும்பெரும் பேறுக ளெல்லாம் அந்த மஹானிடத்தில் ப்ரத்யக்ஷமாகக் குடிகொண்டிருக்கக்காண்கிறோம். அடியேனும் அவர்க் கே பல்லாண்டு பாடவிடைகொள்ளுகிறேன். நியமித்தருளவேணும் அடியேனுக்கு ஸந்தேஹபரிஹா ரங்களை தேவரீர் அநுக்ரஹித்தருளினால் இந்தமஹோபகாரம் அடியேனளவில் சுவறிப் போகாது; உல குக்கெல்லாம் மஹோபகாரமாகத் தலைக்கட்டும். விடைகொள்ளுகிறேன்.

இருவரும் பிரிந்தனர்.

ஸ்ரீகாஞ்சீ, பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் அமைத்த
**ஸாது ஸாத்விக ஸம்வாதத்தில்**
முதல் ஆஹ்நிகம் முற்றிற்று.

acharya.org

ஸ்ரீ:
ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்,



# மாமுனிவன் மேற்கோள்விளக்கு.

(ஸ்ரீகாஞ்சி. அண்ணங்கராசாரியர் தொகுத்தது.)

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த நான்கு ரஹஸ்ய வியாக்கியானங்களில்
ஆளவந்தார்முதல் வாதிகேஸரி அழகியமணவாளச்சீயர்வரை
யிலுமுள்ள ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளை மேற்கோளாக
எடுத்துக்காட்டியிருக்குமிடங்களின் விவரணம்.

## 1. ஆளவந்தார்.

(ஸ்ரீவசநபூ.) 182. அநந்தரம் பரமாசார்யரான ஆளவந்தார்வசனத்தை யருளிச்செய்கிறார் * ந தேஹம் ந ப்ராணந்.......*

259. ஆகையிறே நாதமுனிகளுடைய திவ்ய வைபவத்தை யருளிச்செய்கிற ஆளவந்தார் * அசிந்த்யாத்புதாக்லிஷ்டஜ்ஞாந வைராக்யராசயே—அகாதபகவத்பக்தி ஸிந்தவே * என்றருளிச்செய்தது.

323. * மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி: * என்று ஐஹிகபோகங்களையும், ஸர்வம் என்று அநுக்த ஸகல கதநத்தாலே மந்த்ர தேவதாபலாதிகளையுமெடுத்து இத்தனையும் ஆழ்வார் திருவடிகளே யென்று......இவ்வர்த்தத்தைப் பரமாசார்யரான ஆளவந்தாருமருளிச்செய்தார்.

380. இப்படி ஆழ்வாருளிச்செய்த இவ்வர்த்தத்தை * நிராஸகஸ்யாபி ந தாவதுத்ஸஹே......என்று அளவந்தாரருளிச்செய்தாரிறே.

(தத்வத்ரய) 3. * சிதசிதீச்வரதத்ஸ்வபாவ * என்று ஆளவந்தாரும்......

45. * நிவாஸசய்யாஸந......சேஷ இதீரிதே ஜநை: * என்றிறே ஆளவந்தாருமருளிச்செய்தது. (மற்றுமுள்ள ததீயரைப்போலே அநியமமாயிராதே ஸர்வேச்வரன் அமுது செய்த சேஷமொழிய அமுது செய்யாத நியமத்தைப்பற்ற சேஷாசநரென்று ஸேனை

---

**குறிப்பு. 182. 259. என்றிப்படி குறிக்கும் லக்கங்களெல்லாம் அந்தந்த க்ரந்தங்களிலுள்ள சூர்ணைகளுக்கான லக்கங்கள். ஆங்காங்கு மணவாள மாமுனிகளின் வியாக்கியானத்தில் இவை காண்க.**

acharya.org

முதலியாரை நிரூபிக்கிறது.) * த்வதீயபுக்தோஜ்ஜித சேஷ போஜிநா * என்றாரிறே ஆளவந்தாரும்.

70. * ஆச்ரயாதந்யதோ வ்ருத்தே ராச்ரயேண ஸமந்வயாத், த்ரவ்யத்வஞ்ச குணத்வஞ்ச ஜ்ஞாநஸ்யைவோபபத்யதே * என்றிறே ஆளவந்தாரருளிச்செய்தது.

92. இந்த மதநிராகரணார்த்தமாகவிறே ஆளவந்தார் * குணஃ ப்ரதாநம் * என்று பிரித்தருளிச்செய்தது.

(ஆசார்யஹ்ரு.) 66. பாஷ்யகாரர் அப்படி செய்தருளுகைக்கடி *விதயச் ச வைதிகாஸ் த்வதீயகம்பீர மநோநுஸாரிணஃ * என்று......இவ்வாழ்வார் போல்வார் நினைவை சாஸ்த்ரங்கள்தான் பின்செல்லுமதாகப் பரமாசார்யரான ஆளவந்தார் அருளிச்செய்த வசனம்.

87. * தவ தாஸ்யஸுகைகஸங்கிநாம் பவநேஷ் வஸ்த்வபி கீடஜந்ம மே * என்று......பெரிய முதலியார் ப்ரார்த்தித்தார்.

151. ஸாம்ஸாரிக ஸகலஸங்கமுமற்று உத்தமாச்ரமிகளாய்ப் பரமஹம்ஸ சப்தவாச்யரான நாதமுனிகள் யாமுன முனிகள் போல்வாரையும்......அன்னமென்று சொல்லும்.

## 2. பெரியநம்பி.

(ஸ்ரீவசந பூ.) 234. அபிமாநஹேதுவான ஜன்மவ்ருத்தாதிகளின்றிக்கே ஆளவந்தார்ஸ்ரீபாதத்தையுடையராய் அத்யாத்மஜ்ஞாந பரிபூர்ணராயிருக்கிற மாறனேரி நம்பி தம்முடைய அந்திமதசையிலே 'ஆளவந்தார் அபிமானித்தருளின இத்தேஹத்தை ப்ராக்ருதி பந்துக்கள் ஸ்பர்சிக்கில் செய்வதென்?' என்று அதிசங்கைபண்ணி ஸப்ரஹ்மசாரியான பெரிய நம்பியைப்பார்த்து 'புரோடாசத்தை நாய்க்கிடாதே கிடீர்' என்றருளிச்செய்து திருநாட்டுக்கெழுந்தருள, பெரிய நம்பியும் அப்படியே பிறர் கையில் காட்டிக்கொடாதே தாமே பள்ளிபடுத்துவந்தெழுந்தருளியிருக்க, இத்தை உடையவர் கேட்டருளி பெரியநம்பி ஸ்ரீபாதத்திலே வந்து 'ஜீயா! மர்யாதை கிடக்கக் கார்யஞ்செய்ய வேண்டாவோ? தேவரீர் செய்தருள வேண்டிற்றோ?' என்ன, 'ஆளிட்டந்திதொழவோ? நான் பெருமாளிற் காட்டில் உத்க்ருஷ்டனோ? இவர் பெரியவுடையாரிற்காட்டில் அபக்ருஷ்டரோ? * பயிலுஞ் சுடரொளி, நெடுமாற்கடிமை கடலோசை யோபாதியோ? ஆழ்வாரருளிச் செய்த அர்த்தத்தைச் சிறிது குறையவாகிலும் ஆசரிக்க வேண்டாவோ?' என்று (பெரிய நம்பி) அருளிச்செய்த வார்த்தை.

(ஆசார்யஹ்ரு.) 85. ப்ரஸித்தரான நம்பிகள் மூவரிலும் ப்ரதாநரான பெரியநம்பி மாறனேரி நம்பிக்கு......செய்த புத்ரக்ருத்யமும்.

## 3. திருக்கோட்டியூர் நம்பி.

(முமுக்ஷுப்படி. சரமச்லோ. அவதாரிகை.) இதிலர்த்தம் கேட்கைக்காகவிறே எம்பெருமானார் பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் எழுந்தருளிற்று. நம்பிதாமும் இதில் அர்த்தத்தினுடைய கௌரவத்தையும் இதுக்கு அதிகாரிகளில்லாமையையும் பார்த்திறே இவருடைய ஆஸ்திக்யாதர பரீக்ஷார்த்தமாகவும் பலகால் நடந்து துவளப்பண்ணி சூளு(ழு)றவு கொண்டு மாஸோபவாஸங்கொண்டு அருமைப்படுத்தியருளிச் செய்தருளிற்று.

acharya.org

## 4. எம்பெருமானார்.

(ஸ்ரீவசந பூ.) 96 * க்ஷமா ஸத்யம் தமச் சமஃ * என்கிற விடத்தில் * தமோ பாஹ்யகரணநாம் அநர்த்த விஷயேப்யோ நியமநம் ; சமஃ அந்தஃகரணஸ்ய ததா நியமநம் * என்றிறே பாஷ்யகாரருமருளிச்செய்தது.

146. ஸர்வாபராதங்களுக்கும் ப்ராயச்சித்தமாயிறே ப்ரபத்திதானிருப்பது. இப்படியிருந்துள்ள ப்ரபத்தியை * த்வத்பாதாரவிந்தயுகளம் சரணமஹம் ப்ரபத்யே * என்று பண்ணியருளின பாஷ்யகாரர்க்கு ஸ்வபூர்வவ்ருத்தத்தை யநுஸந்தித்தவாறே அதுதானும் அபராத கோடியிலேயாய் * த்வமேவ மாதா ச * என்று தொடங்கி இத்தலையிலபராதத்தைப் பொறுக்கைக்குறுப்பான பந்த விசேஷங்களை யெல்லாம் விண்ணப்பம் செய்துகொண்டு * தஸ்மாத் ப்ரணம்ய * இத்யாதியாலே இப்படி திருமுன்பே கூசாமல் வந்து நின்று ப்ரபத்தி பண்ணின இவ்வபராதத்தைப் பொறுத்தருளவேணுமென்று க்ஷாமணம் பண்ண வேண்டும்படி நில்லா நின்றதிறே யென்கை.

160. ........பாஷ்யகாரர் கத்யத்தில் உத்தர கண்டார்த்தம் அநுஸந்தித்தருளின க்ரமத்திலே...

180. உத்தரவாக்யத்தில் நமஸ்ஸிலே புருஷார்த்தத்துக்கு இடைச்சுவரான விரோதிகளெல்லாம் தள்ளுண்ணுமென்னுமிடம் தோற்றவிறே *மநோவாக்காயைஃ* என்று தொடங்கி மூன்று சூர்ணையாலே ஸகலவிரோதி நிவ்ருத்தியையும் பாஷ்யகாரரருளிச்செய்தது.

234. காண்க. [முன்னே "2. பெரியநம்பி" என்றதன்கீழ்விவரணமுங் காண்க.]

274. பாஷ்யகாரர்க்குக் காலக்ஷேப ப்ரகாரமருளிச் செய்கிறவிடத்தில் * த்வயம் அர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதா ஏவம் வக்தா * என்றிறே பெரிய பெருமாளருளிச்செய்தது.

385. "பாஷ்யகாரர் காலத்திலே ஒருநாள் பெருமாள்" இத்யாதி.

(தத்வத்ரய.) 3. * அசேஷ சிதசித்வஸ்து சேஷிணே * என்று பாஷ்யகாரரும்...

10. இதுதன்னை பாஷ்யத்திலே * ஏவம் ஹி ஸூப்தோத்திதஸ்ய பராமர்சஃ ..... அதத்ரூபத்வாத் ப்ரதிபத்தேஃ * என்று பாஷ்யகாரரருளிச்செய்தார்.

15. (இதுதான் * குணத்வா லோகவத் * என்கிற ஸூத்ரார்த்தம்.) " வா சப்தோ மதாந்தரவ்யாவ்ருத்த்யர்த்தஃ........ப்ரதமஸூத்ரே ஸ்தாபிதம் " என்றிறே இதுக்கு பாஷ்யம்.

18. " ச்சேதநாதியோக்யாநி கடபடாதீநி வஸ்தூநி........இதி அவ்யக்தஃ " என்றிறே பாஷ்யகாரருமருளிச்செய்தது.

34 இதெல்லாம் * கர்த்தா சாஸ்த்ரார்த்த வத்த்வாத் * என்கிற ஸூத்ரத்திலே பூர்வபக்ஷ ஸித்தாந்த ரூபேண பாஷ்யகாரர் தாமே விஸ்தரேண வருளிச்செய்தார்.

35. * க்ருதப்ரயத்நாபேக்ஷஸ் து * என்கிற ஸூத்ரத்திலே இதெல்லாம் பாஷ்யகாரர்தாமே யருளிச்செய்தார்.

37. " ஜ்ஞாநமாத்ரவ்யபதேசஸ்து........உபபத்யதே * என்றிறே தீபத்திலே பாஷ்யகாரருமருளிச்செய்தது.

40. * பரகதாதிசயாதாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ சேஷஃ பரச் சேஷீ * என்று சேஷ சேஷி லக்ஷணம் பாஷ்யகாரராலே அருளிச்செய்யப்பட்டது.

41. * அயமேவாத்மசரீரபாவஃ........என்றும் ; யஸ்ய சேதநஸ்ய யத் த்ரவ்யம்........ என்றும் வேதார்த்த ஸங்க்ரஹத்திலும் ஸ்ரீபாஷ்யத்திலும் ஆத்ம சரீரபாவலக்ஷணமாக

acharya.org

பாஷ்யகாரரருளிச்செய்த நியந்த்ரு நியாம்யபாவம் ஆதாராதேயபாவம் சேஷசேஷிபாவமாகிற மூன்றும்........

45. பாஷ்யகாரரும் இவர்களுடைய வைபவத்தை * ஸ்வச்சந்தாநுவர்த்தி * இத்யாதியாலே ஸ்ரீகத்யத்திலே பரக்கவருளிச்செய்தார்.

79. இதுதன்னை பாஷ்யகாரர் ஸ்ரீவைகுண்ட கத்யத்திலே * திவ்யாவரண சதஸஹஸ்ராவ்ருதே....என்று தொடங்கி விஸ்தரேண அருளிச்செய்தாரிறே.

(அங்கேயே, மேல்) * தேஷாமபி இயத்பரிமாணம் இயதைச்வர்யம் ஈத்ருசஸ்வபாவமிதி பரிச்சேத்துமயோக்யே * என்று நித்யரால் பரிச்சேதிக்க வொண்ணாதென்று ஸ்ரீவைகுண்ட கத்யத்திலே பாஷ்யகாரர் அருளிச்செய்த விது...........

(அங்கேயே, மேல்) * அநந்தாச்சர்யாநந்த மஹாவிபவ * என்றாரிறே பாஷ்யகாரர்.

85. * பகவத் ஸ்வரூப திரோதாநகரீம் விபரீதஜ்ஞாநஜநநீம் * என்று இதுதன்னை பாஷ்யகாரர் அருளிச்செய்தாரிறே.

92. * ஸத்வரஜஸ்தமாம்ஸி த்ரயோ குணா:........* என்றிறே பாஷ்யகாரரும்.......

117. இப்படி ஸ்ரீபாஷ்யத்திலே * யதக்நே ரோஹிதம் ரூபம்........என்று பாஷ்யகாரருமருளிச்செய்தார்.

129. * நச ப்ருதிவ்யாத்யபாவமாத்ரம் ஆகாச இதி வக்தும் சக்யம் * என்றிறே பாஷ்யகாரரருளிச்செய்தது.

130. இதுதன்னை * ஆகாசே சாவிசேஷாத் * என்கிற ஸூத்ரத்திலே " ஆகாசே ச நிருபாக்க்யதா ந யுக்தா.......ச்யேநாதிபதந தேசத்வேந " என்று தொடங்கி பாஷ்யகாரர் விஸ்தரேண அருளிச்செய்தார்.

132. இதுதன்னை * அண்டாந்தர்வர்த்திநச்ச ஆகாசஸ்ய......என்று பாஷ்யகாரருமருளிச்செய்தார்.

141. * அகில ஹேய ப்ரத்யநீக........ஸ்வரூப ! * என்றிறே எம்பெருமானாருளிச்செய்தது.

(அங்கேயே, மேலே) ஆதிசப்தத்தாலே குண சூர்ணையில் எம்பெருமானாருளிச்செய்த குணங்களையெல்லாம் சொல்லுகிறது.

(அங்கேயே, மேலே) * ஆர்த்த :—ப்ரதிஷ்ட்டாஹீந: ப்ரஷ்டைச்வர்ய: புநஸ் தத் ப்ராப்திகாம:.............என்று சதுர்விதாதிகாரி வேஷத்தையும் ஸ்ரீகீதாபாஷ்யத்திலே அருளிச்செய்தாரிறே.

(அங்கேயே, மேலே) * ஸ்வாபிமதாநுரூபைகரூபாசிந்த்ய......என்று திவ்ய மங்கள விக்ரஹ வைலக்ஷண்யத்தை அருளிச்செய்தாரிறே எம்பெருமானார்.

(அங்கேயே, மேலே) * ஸ்வாபிமதநித்ய நிரவத்யாநுரூப......பூமி நீளாநாயக ! * என்றிறே எம்பெருமானாருளிச்செய்தது.

195. " ஸாதவ :—உக்த லக்ஷண தர்மசீலா வைஷ்ணவாக்ரேஸரா:......" என்றிறே இந்த ச்லோகத்துக் கர்த்தம் பாஷ்யகாரரருளிச்செய்தது.

(முமுக்ஷுப்படி.) 97. திவ்யபூஷணங்களாவன—ஆபரண சூர்ணையிலே பாஷ்யகாரர் அருளிச்செய்தபடியே.......

183. ஆகையிறே த்வய விவரணமான கத்யத்திலே........இத்யாதி சூர்ணையாலே ப்ரக்ருதிஸம்பந்த நிவ்ருத்தியையும் பாஷ்யகாரர் ப்ரார்த்தித்தருளிற்று.

(சமரச்லோ. அவதாரிகை.) இதிலர்த்தம் கேட்கைக்காகவிறே எம்பெருமானார் பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர்நம்பிபக்கல் எழுந்தருளிற்று.

acharya.org

(அங்கேயே, மேலே) அதிகாரி துர்லபத்வத்தாலும் அர்த்த கௌரவத்தாலும் இத்தை வெளியிடாதே மறைத்துக்கொண்டு போந்தார்கள் எம்பெருமானார்க்கு முன்புள்ளார்; ஸம்ஸாரிகள் துர்க்கதி கண்டு பொறுக்கமாட்டாதபடி க்ருபை கரைபுரண்டிருக்கையாலே அர்த்தத்தின் சீர்மை பாராதே அநர்த்தத்தையே பார்த்து வெளியிட்டருளினார் எம்பெருமானார்.

243. * ஆக்ஷேபதஃ ப்ராப்தாத்......என்றிறே பாஷ்யகாரருமருளிச்செய்தது.

274. தத்வ நிர்ணயம் பண்ணின உய்யக்கொண்டார் பக்தி நிஷ்டராயிருக்கையாலே அவரை ப்ரபத்திநிஷ்டராம்படி பண்ணவேணுமென்று அவருக்கு இந்த (சரம) ச்லோகார்த்தத்தை யருளிச்செய்தவளவிலே 'அர்த்தஸ்'திதி அழகியதாயிருந்தது, ஆகிலும் அத்தை விட்டு இத்தைப்பற்றத்தக்க ருசி எனக்கில்லை என்ன, "வித்வானுகையாலே அர்த்தத்துக்கிசைந்தாய், பகவத் ப்ரஸாத மில்லாமையாலே ருசி பிறந்ததில்லை" என்று அவர் விஷயமாக உடையவர் அருளிச்செய்தவார்த்தை......

(ஆசார்யஹ்ரு.) 36. அடியார் தொண்டரென்கிற ப்ரபந்நஜநங்களுக்குக் கூடஸ்தர்... எம்பெருமானார் முதலான ஆசார்யர்களும்.

65. பாஷ்யகாரர் ஸ்ரீபாஷ்யம் பண்ணியருளும்போது ஸூத்ரவாக்யங்களில் ஸந்திக்தங்களான அர்த்தங்களெல்லாம் இப்ப்ரபந்தத்தில் ஸூக்திகளைக்கொண்டு நிர்ணயித்து ஒருங்கவிட்டருளுவர்.

66. பாஷ்யகாரர் அப்படிசெய்தருளுகைக்கடி * விதயச் ச வைதிகாஸ் த்வதீய கம்பீரமநோநுஸாரிணஃ * என்று.......இவ்வாழ்வார் போல்வார் நினைவை சாஸ்த்ரங்கள்தான் பின்செல்லுமதாகப் பரமாசார்யரான ஆளவந்தாருளிச் செய்த வசனம்.

85. த்யாகமண்டபமான பெருமாள் கோயிலில் திருவாலவட்டமும் கையுமாய்ப் பெருமாளுக்கு அந்தரங்கராய் நின்ற திருக்கச்சிநம்பியை வைதிகோத்தமரான உடையவர் அநுவர்த்தித்த க்ரமமும்.

(அங்கேயே, மேலே) யாகசப்தவாச்யமான திருவாராதனத்தில் பிள்ளையுறங்கா வில்லிதாஸர் ஸ்பர்சத்தாலே காயசுத்திபண்ணின உடையவரும்.

91. [கலியுங் கெடும்போலே ஸூசிதம்.] இவர்தாம் மயர்வற மதிநலம் பெற்றவராகையாலே "கலியுங்கெடும்" என்று திருமங்கையாழ்வார் உடையவர் போல்வார் அவதரித்து கலியுகஸ்வபாவமும் கழியு மென்று மேல்வருமம்சத்தை தர்சித்தருளிச் செய்தாப்போலே.

99. * அபயம் ஸத்வஸம்சுத்திஃ * என்றும் *ஸத்வாநுருபா ஸர்வஸ்ய ச்ரத்தா பவதி* என்றும் சொல்லுகிற விடங்களில் "ஸத்வம் அந்தஃகரணம்" என்று ஸத்வசப்தம் அந்தஃகரணவாசியாக பாஷ்யகாரர் அருளிச் செய்தாரிறே.

153. இராமானுசனுடையா ரென்றே நிரூபகமாம்படி உடையவர்க்குப் பாதந்த்ரரான ஆழ்வான் ஆண்டான் எம்பார் அருளாளப் பெருமாளெம்பெருமானார் முதலானவர்கள் போல்வாரைக் கிளியென்றும் பூவையென்றும் குயிலென்றும் மயிலென்றும் சொல்லும்.

155. எம்பெருமானார் போல்வாரை மேகமென்று சொல்லும்.

162. பாஷ்யகாரர் பக்கலிலே வேதாந்தார்த்தம் கேட்டு சிஷ்யனுய் 'நாமும் நம்பி ராமானுசனை யுடையோம்' என்கையாலே ஸ்ரீவைஷ்ணவநம்பியென்று திருநாமமாய்.........

204. இப்படி அதிகாரம் பாராமல் அவர்கள்துர்க்கதியைப்பார்த்து உபதேசித்தருளும் ஸ்வபாவராய் * பாமன்னுமாறனடிபணிந்துய்ந்தவன் * என்று நிரூபகமாயிருக்குமெம்பெருமானார்க்குமே........

224. புராணவித்தமராகையாலே பௌராணிகரான பாஷ்யகாரர் கத்யத்திலே இவ்வசநப்க்ரியையாலே த்யாஜ்யங்களினுடைய த்யாகபூர்வகமான சரணவரணத்தைப் பண்ணுகையாலும்.

acharya.org

228. இது, வீடுமின்முற்றத்தையும் பக்திபரமாக்கி யோஜித்தருளின எம்பெருமானார் நிர்வாஹக் கட்டளையைப் பிடித்தருளிச் செய்தார் ......இது எம்பெருமானார் யோஜனையாய் பின்புள்ளா ரெல்லாருமருளிச் செய்துகொண்டு போந்த மர்யாதையைப் பற்ற......

233. * பரபக்திபரஜ்ஞாந பரமபக்த்யேக ஸ்வபாவம் மாம் குருஷ்வ * என்று ப்ரார்த்தித்த பாஷ்யகாரரைக் குறித்து *மத் ஜ்ஞாநதர்சந ப்ராப்திஷு நிஸ்ஸம்சயஸ் ஸுகமாஸ்வ* என்று சேரபாண்டியனிலுமவனருளிச் செய்த ஜ்ஞாநதர்சந ப்ராப்த்யவஸ்தைகள்.

## 5. எம்பார்.

(முமுக்ஷுப்படி.) 286. "ஆஸ்திகனைய் இவ்வர்த்தத்தில் ருசி விச்வாஸங்களுடையனைய் உஜ்ஜீவித்தல், நாஸ்திகனைய் நசித்தலொழிய நடுவில் நிலையில்லையென்று பட்டருக்கு எம்பார் அருளிச்செய்த வார்த்தை."—இவ்வர்த்தத்தில் [சரமச்லோகார்த்தத்தில்] அங்கிதனைவன் பகவத்ப்ரபாவத்தால் இது ஸத்யமென்று ஆஸ்திகனைய் இவ்வர்த்தத்தில் ருசியும், இதுதப்பாதென்கிற விச்வாஸமுமுடையனைய் உஜ்ஜீவித்தல், சாஸ்த்ரங்களெல்லா மொரு தலையும் இது ஒரு தலையுமாய் இப்படியிருப்பதொன்றுண்டோ வென்று நாஸ்திகனைய் இத்தை அநாதரித்து நசித்தலித்தனையொழிய நடுவொருநிலையில்லை யென்று ஸகலசாஸ்த்ர வித்தமரான பட்டருக்கு ஆப்ததமரான எம்பார் அருளிச்செய்த வார்த்தை.

## 6. வங்கிப்புரத்து நம்பி.

(முமுக்ஷுப்படி.) 276 இந்த சரமச்லோகம் அநுவாதத்தினுடைய கோடியிலே யென்று ஆப்ததமரான வங்கிப்புரத்து நம்பியருளிச் செய்யும் வார்த்தை.

## 7. ஆழ்வான்.

(ஸ்ரீவசந பூ) 73. திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலே ஆழ்வான் ஆறுமாஸம் ஸேவித்து நின்று மஹாநிதியாகப் பெற்ற அர்த்தமிறே இது.

203. பிள்ளைப் பிள்ளையாழ்வானை (ஆழ்வான்) அங்கீகரித்தநாளிலே இவர் ஆபிஜாத்யாதிகளாலே உத்க்ருஷ்டராகையாலே பாகவத விஷயங்களில் அவிநயமாக வர்த்தித்துக் கொண்டு போருகிறபடியைக்கண்டு "இவர்க்கு இப்பாகவதாபசாரம் இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்களெல்லாவற்றையும் கீழ்ப்படுத்தி தானே மேலாய் விநாசபர்யந்தமாக்கிவிடும், அதுக்கு வேலி இட்டுவைக்கவேணும்" என்று திருவுள்ளம்பற்றி ஓரயனத்தினன்று நீராடி யேறினவளவிலே இவரைப் பார்த்து "எல்லாரும் தானம் பண்ணுகிற காலத்திலே நீரும் நமக்கொருதானம் பண்ணமாட்டீரோ" என்ன, அடியேன் எத்தை தானம்பண்ணுவது, எல்லாம் அங்குத்தையதாயிருந்ததே. என்ன, 'அர்த்தஸ்திதியன்றோ அது, அவ்வளவு போராது, கரணத்ரயத்தாலும் பாகவதாபசாரம் பண்ணுமல் வர்த்திக்கக்கடவேன் என்று நம் கையிலே உதகம் பண்ணித்தரவேணும்' என்ன; அப்படி இவருமுதகம் பண்ணிக் கொடுத்த வனந்தரம் ஒருநாள் பாகவத தோஷத்தைப் பூர்வ வாஸனையாலே நினைத்து 'நாமினி

acharya.org

முடிந்தோம்' என்று பயப்பட்டு மூடிக்கொண்டு தம்திருமாளிகையிலே கண்வளர, இவர் முன்பு வருகிற காலத்தில் வரக்காணாமையாலே ஆழ்வான், இவர் திருமாளிகையிலே எழுந்தருளி 'என்தான்? முசிப்பென்? என்று வினவியருள, தாம் மனஸ்ஸால் நினைத்ததை விண்ணப்பம் செய்து 'கரணத்ரயத்தாலும் அபசாரம் புகுராதபடி இத்தேஹத்தோடு வர்த்திக்கை அரிதாயிராநின்றது, என் செய்யக்கடவேன்?' என்று திருவடிகளைக் கட்டிக்கொண்டு கிடந்து க்லேசிக்க, இத்தனை அநுதாபமிவர்க்குண்டாகப்பெற்றோமே என்று உகந்தருளி 'மனஸ்ஸாலே நினைத்ததுக்கு அநுதாபமுண்டாகவே ஈச்வரன் க்ஷமித்தருளும்; ப்ரத்யக்ஷதண்ட பயத்தாலே காயிகமாக ஒருவரையும் நலியக்கூடாது, ஆன பின்பு அவையிரண்டுமுமக்குக் கழித்துத்தந்தோம்; இனி வாக்கொன்றையும் நன்றாகக் குறிக்கொண்டு வர்த்தித்துப்போரும்' என்றருளிச்செய்தது.

411. காண்க.

(தத்வத்ரய.) 45. * வநாத்ரிநாதஸ்ய ஸௌஸௌந்தரஸ்ய வை ப்ரபுக்தசிஷ்டாச்யத ஸைங்யஸத்பதிः * என்று ஆழ்வானுமருளிச்செய்தார்.

79. ஸீமையில்லாததொன்றுக்கு ஸீமையறியாமை ஸர்வஜ்ஞதைக்கு அநுகுணமென்னுமிடம் * தேவி! த்வந்மஹிமாவதிர் ந ஹரிஞ......என்று ஸ்ரீஸ்தவத்திலே ஆழ்வானருளிச்செய்தார்.

148. * யேஷ்வேகஸ்ய குணஸ்ய விப்ருடபி வை.....வநாத்ரீச்வரம் * என்கிற ச்லோகத்திலே குணங்களினுடைய நித்ய நிஸ்ஸீம நிஸ்ஸங்க்யத்வங்களை அருளிச்செய்தாரிறே ஆழ்வான்.

185. * குணைஷ் ஷட்பிஸ்த்வேதைः....அகணித மஹாமங்கள குணः * என்று இதுதன்னை ஆழ்வானருளிச்செய்தாரிறே.

194. * இயம் வையூஹீ வை......என்றும் * ஏவம் ஸ்திதே...என்றும் அவதாரஹேது இச்சையென்னுமிடத்தை ஆழ்வான் விசதமாகவருளிச்செய்தாரிறே.

195. * யே பக்தா பவதேகபோகமநஸः............என்றிறே ஆழ்வானுமருளிச்செய்தது.

## 8. அமுதனார்.

(ஸ்ரீவசந பூ.) 426. ஆகையிறே பிள்ளை யமுதனார் * பேறொன்று மற்றில்லை நின் சரணன்றி அப்பேறளித்தற்கு ஆறொன்று மில்லை மற்றச்சரணன்றி * என்று ப்ராப்யப்ராபகங்களிரண்டும் ஏகவிஷயமேயாக அருளிச்செய்தது.

## 9. உய்யக்கொண்டார்

(உடையவர் காலத்தவர்.)

(ஸ்ரீவசந பூ.) 3. * அத இதிஹாஸ புராணயோः இதிஹாஸாः பலீயாம்ஸः... என்று தொடங்கி தத்வநிர்ணயத்திலே உய்யக்கொண்டாராலும் ப்ரதிபாதிக்கப்பட்டது.

(முமுக்ஷுப்படி.) 274 காண்க.

acharya.org

## 10. பட்டர்.

(ஸ்ரீவசந பூ.) 3. * மஹாபாரதம் ஹி பரிக்ரஹ விசேஷாவஸிதம் * என்று தொடங்கி.. ....என்னுமளவாக பரிக்ரஹாதிசயத்தாலும் மத்யஸ்தையாலும் புராணங்களிற்காட்டில் இதிஹாஸ விசேஷமான மஹாபாரதத்துக்குண்டான ப்ராபல்யம் ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்யத்திலே பட்டராலும் ப்ரதிபாதிக்கப்பட்டதிறே.

5. பெரிய பட்டரும் ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்ய உபோத்காதத்திலே "ஸ்ரீராமாயணவத் மஹாபாரதம் சரணம்" என்றருளிச்செய்தாரிறே.

8. ஆகையிறே * யதுதாங்யதுதாஹரந்தி ஸீதாவதாரமுகமேததமுஷ்ய யோக்யா * என்று பட்டருமருளிச்செய்தது.

38. * அர்ச்சகபராதீநாகிலாத்மஸ்திதி:* என்றருளிச்செய்தாரிறே பட்டர்.

306. * பவதஸஹரீயாகஸி ரத: * என்றிறே பட்டருளிச்செய்தது.

(தத்வத்ரய.) 28. அஹமிதமபிவேத்மீதி...என்று பட்டரும் இப்படியிறே பௌத்தமத நிராகரணம் பண்ணுகிற விடத்தில் அருளிச்செய்தது.

45. * அஹ்ருதஸஹஜதாஸ்யாஸ் ஸூரயஸ் ஸ்ரஸ்தபந்தா: * என்றாரிறே பட்டர்.

148. * தோஷோபதாவதி.......அநர்க்கயந்தி * என்கிற ச்லோகத்திலே இவையித்தனையும் பட்டருளிச்செய்தாரிறே.

150: * க்ஷமா ஸாபராதே....என்றிறே பட்டருளிச்செய்தது.

160. * ப்ரளயஸமயஸூப்தம்......ஸ்ரீஸமக்ஷம் * என்றிறே பட்டருளிச் செய்தது.

179. * நிம்நோந்நதஞ்ச...ச்ருதயோ க்ருணந்தி * என்று இதுதன்னை பட்டருளிச்செய்தாரிறே.

202. * ஆஸ்தாம் தே குணராசிவத்......சீலாத் ஜுட்பூயதே * என்று அவதாரங்களை யருளிச்செய்தவனந்தரத்திலே அர்ச்சாவதாரவைபவத்தை ஸங்க்ரஹேண ஒரு ச்லோகத்தாலே அருளிச்செய்தாரிறே பட்டர்.

(முமுக்ஷுப்படி.) 2. * தேஹாஸக்தாத்மபுத்திர் யதி பவதி...சதுர்த்தீம் ப்ரபந்ந: * என்று பட்டருளிச்செய்தபடியே...

46. ப்ரஸூநம் புஷ்யந்தீமபி...என்கிறவிடத்திலே ஈச்வரனை புஷ்பஸ்தாநேயாகவும் பிராட்டியைப் பரிமள ஸ்தாநேயாகவும் பட்டருளிச்செய்கையாலே...

(ஆசார்யஹ்ரு) * காருணிகோ ததாதி * என்று பட்டருளிச்செய்ததுக்கும் சேரும்

## 11. ஸ்ரீஸேநாபதி ஜீயர்.

(முமுக்ஷுப்படி.) 41. ஜ்ஞாநாதிகரான ஸ்ரீஸேநாபதி ஜீயர் அருளிச் செய்யும் வார்த்தை—* அகல கில்லேனிறையும் * என்று அவன் திருமார்விலே நித்யவாஸம் பண்ணு

acharya.org

மிவள் அம்மார்பை விட்டுப் பிரியிலாயிற்று அவனுக்கு ப்ரதிபாதகமான இவ்வக்ஷரத்தை விட்டுப் பிரிவதென்று.

## 12. கிடாம்பிப் பெருமாள்.

(ஸ்ரீவசந பூ.) 385. ஸகல வேதாந்த தாத்பர்யார்த்தங்களெல்லாம் ஸம்சய விபர்யயமற நடந்துசெல்லுகிற நல்லடிக்காலமான பாஷ்யகாரர் காலத்திலே, ஒரு நாள் பெருமாள் புறப்பட்டருளுந்தனையும் பார்த்துப் பெரிய திருமண்டபத்துக்குக் கீழாக ஜ்ஞாநாதிகரான முதலிகளெல்லாரும் திரள விருந்தவளவிலே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் 'இதுநெடுங்காலம் ஆர்வாசலிலே அவர்கள் புறப்பாடு பார்த்திருந்தோமோ! என்று தெரியாது; இன்று வகுத்த சேஷியான பெருமாள் புறப்பாடு பார்த்து வந்திருக்க என்ன ஸுக்ருதம் பண்ணினோம்!' என்ன, தத் ப்ரஸங்கத்திலே நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்தவனுக்கு பகவத்விஷயத்திலே ருசி பிறக்கைக்கு அடியென்? என்று விசாரிக்கச் செய்தே, யாத்ருச்சிகஸுக்ருதமென்ன அஜ்ஞாதஸுக்ருதமென்னப்பிறந்ததாய், அவ்வளவிலே கிடாம்பிப் பெருமாளிருந்தவர் 'நமக்கு பகவத் விஷயம்போலே ஸுக்ருத தேவரென்றும் ஒருவருண்டோ ஆச்ரயணீர்?' என்ன, பிள்ளை திருநறையூரரையர் 'ஸுக்ருதமென்று சொல்லுகிறதும் நினைக்கிற விஷயந்தன்னைக்காண்' என்றருளிச்செய்ய, ஆக இப்படி பின்பு பிறந்தவார்த்தைகளை இவ்விடத்திலே நினைப்பது.

## 13. முதலியாண்டான்.

(ஸ்ரீவசந பூ.) 411. "வடுக நம்பி ஆழ்வானையும் ஆண்டானையும் இருகரையரென்பர்" என்றவிடத்து ஐதிஹ்யம். அதாவது—ஆழ்வார் திருவடிகளில் ஸ்ரீமதுரகவிகளிருந்தாப்போலே ப்ராப்யப்ராபகங்களிரண்டு மெம்பெருமானார் திருவடிகளே யென்று ப்ரதிபத்திபண்ணி *தேவுமற்றறியேனென்றிருக்கும் வடுகநம்பி, எம்பெருமானார்க்கு நிழலுமடிதாறும்போலே அவிநாபூதராய்......உபாயோபேயங்கள் அவர் திருவடிகளும் அத்திருவடிகளில் பண்ணும் கைங்கர்யமுமென்றிருக்கும் கூரத்தாழ்வானையும் தாத்ருசரான முதலியாண்டானையும் ஸம்ஸாரத்திலிருப்பில் அடிக்கொதிப்பால் வந்த ஆர்த்தியின் மிகுதியாலே கலங்கி காதாசித்கமாகப் பெருமாள்பக்கலிலுஞ் சென்று பல்காட்டுவது, தத்வைலக்ஷண்யங் கண்டவாறே ப்ரவணராய்ப் போருவதாமிவ்வளவைக் கொண்டு "எம்பெருமானார் திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமானால் *தேவுமற்றறியேனென்றிருக்க வேண்டாவோ? அங்ஙனன்றிக்கே சரமாவதியிலும் ப்ரதமாவதியிலும் கைவைத்து நிற்கிறவிவர்கள் இருகரையர்—என்றருளிச் செய்வர்.

## 14. பிள்ளை திருநறையூரரையர்.

இவர் விஷயமான ஐதிஹ்யம் (ஸ்ரீவசந பூ.) 84, 385. சூர்ணைகளிற் காண்க.



acharya.org

## 15. வடுக நம்பி.

(ஸ்ரீவசந பூ.) 411. ஆழ்வார் திருவடிகளில் ஸ்ரீமதுரகவிகளிருந்தாப்போலே ப்ராப்ய ப்ராபகங்களிரண்டும்......இத்யாதியை முன்னே "முதலியாண்டான்" என்றபகுதியிற்காண்க.

## 16. எங்களாழ்வான்.

(தத்வத்ரய.) 103. "...... பூர்வ பூர்வதந்மாத்ரம் உத்தரோத்தரதந்மாத்ரம் தத் விசேஷஞ்ச ஆவ்ருணோதீதி தர்சிதம்" என்று பிள்ளை யெங்களாழ்வான் வ்யாக்யானம் பண்ணுகையாலும்.

106. இதுதன்னை ஸ்ரீவிஷ்ணுபுராண வ்யாக்யானத்திலே * அயமத்ர இந்த்ரிய ஸ்ருஷ்டிக்ரமஃ......மநஸஃ ஸ்ருஸ்டிரிதி * என்று பிள்ளையெங்களாழ்வானு மருளிச்செய்தார்.

109. * அஹங்காரஸ்ய இந்த்ரியாணி ப்ரதி நிமித்தத்வமேவ......ததா நிர்தேசோப பத்தேஃ * என்று பிள்ளையெங்களாழ்வா னெடுத்துக் கழித்தது.

## 17. நஞ்சீயர்.

(ஸ்ரீவசநபூ.) 69. நஞ்சீயர் தம்முடைய ஸ்ரீபாதத்திலே யுள்ளாரொரு ஸ்ரீவைஷ்ண வரை நோவறிகைக்காகச் சென்று எழுந்தருளியிருக்கிறவளவிலே அந்த ஸ்ரீவைஷ்ணவர் 'அடியேனுக்கு அந்திமகாலத்துக்குத் தஞ்சமாயிருப்பதொன்று அருளிச் செய்யவேணும்' என்ன, "அந்திமகாலத்துக்குத் தஞ்சம் நமக்கிப்போது தஞ்சமென்? என்கிற தன்னுடைய ஸ்வரக்ஷண சிந்தை குலைகைகாணும்" என்று (நஞ்சீயர்) அருளிச்செய்த வார்த்தை.

192. "ஸங்கல்பமாத்ரத்தாலே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வசக்தியான ஸர்வேச்வரன் தன்னையழிய மாறி இதர ஸஜாதீயனாய் அவதரித்துக் கைதொட்டனாய் நின்று செய்த ஹிரண்ய ராவணாதி நிரஸநரூப அத்யதிமாநுஷ சேஷ்டிதங்களெல்லாம் ப்ரஹ்லா தன் மஹர்ஷிகள் தொடக்கமான அவ்வோ பாகவதவிஷயங்களில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலே யென்று ஆப்ததமரான நஞ்சீயர் அருளிச் செய்வரென்கை.

(தத்வத்ரய.) 142. ...... ஒரு யோஜனையுமுண்டிறே கத்யவ்யாக்யானங்களிலே நஞ்சீ யர் ஆச்சான்பிள்ளை முதலான ஆசார்யர்கள் அருளிச்செய்தது.

## 18. நம்பிள்ளை.

(ஸ்ரீவசநபூ.) 31. வேல்வெட்டிப்பிள்ளை (யென்பவர்), பெருமாள் கடலை சரணம் புகுகிறவிடத்தில் ப்ராங்முகத்வாதி நியமோபேதராய் சரணம் புகுருகையாலே இதரோ பாயங்களோபாதி ப்ரபத்திக்கும் சில நியமங்கள் வேண்டியிருக்கிறதோ' வென்று நம் பிள்ளையைக் கேட்க, "பெருமாள் பக்கல் கண்ட நியமம் இவ்வுபாயத்துக்கு உடன் வந் தியாயிருப்பதொன்றன்று; உபாய பரிக்ரஹம் பண்ணினவனுடைய ஸ்வபாவத்தாலே வந்ததித்தனை. பெருமாள்தமக்கு * ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி *

acharya.org

என்று உபதேசித்தான் ஸ்ரீவிபீஷணாழ்வானிறே; அவன்தான் பெருமாளை சரணம் புகுகிற விடத்தில் கடலிலேயொரு முழுக்கிட்டுவந்தானென்றில்லையே; இத்தால் சொல்லிற்றாயிற்றது—பெருமாள் இக்ஷ்வாகு வம்ச்யராய் ஆசாரப்ரதாநராயிருக்கையாலே தம்முடைய நியமங்களோடே சரணம்புக்கார்; இவன் ராக்ஷஸஜாதீயனாகையாலே நின்ற நிலையிலே சரணம் புக்கான்; ஆகையால் யோக்யனுக்கு அயோக்யதை ஸம்பாதிக்கவேண்டா; அயோக்யனுக்கு யோக்யதை ஸம்பாதிக்கவேண்டா; நின்ற நின்ற நிலைகளிலே அதிகாரிகளாமித்தனை" என்று நம்பிள்ளை யருளிச்செய்த வார்த்தை.

347. * மண்ணும் விண்ணுமெல்லா முடனுண்ட * என்கிறவிடத்தில் "ரக்ஷணம் அவனுக்கு தாரகமாயிருக்கையாலே உண்ட என்கிறது; இல்லையாகில் காக்கும் என்னவமையும்" என்றிறே நம்பிள்ளையருளிச் செய்தது.

(ஆசார்யஹ்ரு.) 85. அநுயாகசப்த வாச்யமான 'ப்ரஸாதஸ்வீகாரத்தில் பிள்ளை யேற திருவுடையார் தாஸர் கரஸ்பர்சத்தாலே அங்கசுத்தி பண்ணின நம்பிள்ளையும்.

## 19. ச்ருதப்ரகாசிகா பட்டர்.

(ஸ்ரீவசநபூ.) 381. "திவி இதி அப்ராக்ருதம் ஸ்தாநமுச்யதே. த்ரிபாத்த்வஞ்ச........ ஸம்பவதி" என்று ச்ருதப்ராகாசிகையிலே பட்டாருளிச் செய்தபடியே.

(தத்வத்ரய.) 49. இதுதான் ச்ருதப்ரகாசிகையிலே ஆதிபாத சதுச் ச்லோகீ வ்யாக்யாநோப க்ரமத்திலே * ப்ரஹ்மாத்வைதம் ஜீவாத்வைதஞ்சேதி அத்வைதம் த்விவிதம் சாஸ்த்ரப்ரதிபாத்யம் * என்று தொடங்கி ஸ்ரீவேதவ்யாஸபட்டராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது.

89. * குணத்ரய வைஷம்யஸ்ய அநந்தர பூர்வாவஸ்தா குணஸாம்யம்.........அங்குர ஸ்தாநீயோ மஹாந் இதி விவேகஃ * என்று ஸுபாலோபநிஷத் வ்யாக்யானத்திலே ச்ருதப்ரகாசிகாகாரர் இதினுடைய அவஸ்தா விசேஷங்களை ஸுஸ்பஷ்டமாக வருளிச்செய்தார்.

103. .. ..ஸங்கல்ப சப்தத்தாலே தத்காரணமான மநஸ்ஸு லக்ஷிக்கப்படுகிறதென்று ஸுபாலோபநிஷத் வ்யாக்யானத்திலே ச்ருதப்ரகாசிகாகாரராலே வ்யாக்யாதமாயிற்று.

109. இதுதான் ஸுபாலோபநிஷத் வ்யாக்யானத்திலே * க்ராணாதீநாம் இந்த்ரியாணாம் ஹி இத்யாதிஷு * என்று ச்ருதப்ரகாசிகாகாரராலே அபிஹிதமாயிற்று.

116. ச்ருதப்ரகாசிகாகாரர் சுகபக்ஷீயத்திலே * தேஜோவாரிம்ருதாம் யதா விநிமயஃ* என்கிறவிதுக்கு [விநிமயஃ—பரஸ்பரஸம்மிச்ரீகரணம்] என்றாரிறே.

148. ஸ்ரீபாஷ்யத்தில் * ஸ்வபாவதோநிரஸ்த.......புருஷோத்தமஃ அபிதீயதே * என்கிறவிடத்துக்கு வ்யாக்யானம்-பண்ணுகிற ச்ருதப்ரகாசிகாகாரர் அநவதிகாதிசயபதத்தாலே நித்யஸித்தரை வ்யாவர்த்திக்கிறதென்று முந்துறவொரு யோஜனைபண்ணி.......... இத்யாதி........க்ரியா—நியமநம் என்றிறே இதுக்கும் ச்ருதப்ரகாசிகாகாரர் வ்யாக்யானம் பண்ணிற்று

## 20. வடக்குத் திருவீதிப் பிள்ளை.

(ஸ்ரீவசநபூ) 443. "பரமதயாளுவான ஆசார்யன் இவன் நம்முடையவனென்று அபிமாநித்திருக்குமந்த அபிமாநமொழிய வேறு உஜ்ஜீவநோபாயமில்லை யென்று ஸகல

acharya.org

சாஸ்த்ரஸாரவித்க்ரேஸரரான நம்பிள்ளை திருவடிகளிலே பழுக்க ஸேவித்து ததேகபாரதந்த்ர ராய் ஸகல சாஸ்த்ர தாத்பர்யங்களையும் அவரருளிச் செய்யக் கேட்டு தந்நிஷ்டராயிருக்கும் நம்முடைய ஆசார்யரான பிள்ளை தஞ்சமாகப் பலகாலுமருளிச்செய்யக் கேட்டிருக்கையா யிருக்குமென்றபடி.

(ஆசார்யஹ்ரு.) 228.........ஈட்டிலும் ப்ரதாநயோஜநையாயிருக்குமது......* வணக் குடைத்தவநெறி யென்கிறவிது ப்ரபத்திபரமாகவும் ஒரு யோஜநை ஈட்டிலே தோன்றி யிருக்கையாலே.

## 21. பெரியவாச்சான் பிள்ளையும், ஸ்பஷ்டமாகத் திருநாமம் தெரியாத ஆசார்யர்களும்.

(ஸ்ரீவசநபூ.) 53. ராமவிஜயம் தமக்கு இஷ்டமாகையாலே அந்த விஜயத்துக்கு இலக்காய்த் தோற்ற ராக்ஷஸர்தசை பிறந்து, பிராட்டிமார்தசை பிறந்து பேசுமாபோலே தாமானதன்மை தோற்றாதே, தோற்ற ராக்ஷஸர் பாசுரத்தாலே விஜயத்தைப் பேசியநுபவிக் கிறார்' என்றிறே அத்திருமொழிக்கு வியாக்யானம் பண்ணியருளுகிற ஆசார்யர்கள் அருளிச் செய்வது.

321. அஸூயாப்ரஸவபூ: * என்கிறவிதுக்கு 'ஹிதம் சொன்னவனுடைய உத்கர்ஷ மேயாயிற்றுப் பொறாதது' என்றிறே பூர்வர்கள் அருளிச்செய்தது.

385. இக்கதைதான் * தருதுயரந்தடாயேல் * என்கிற பாட்டின் வியாக்யானத் திலே ஸங்க்ரஹேண பூர்வர்கள் அருளிச்செய்து வைத்தார்களிறே.

$ (தத்வத்ரய.) 103. பெரியவாச்சான் பிள்ளையும் இப்படியிறே [ஸங்கோசோந உத் பத்தி க்ரமம்] அருளிச் செய்தது.

(ஆசார்யஹ்ரு.) 1. பூர்வர்களிட்ட வ்யாக்யானத்துக்குச் சேரும்.

99. பூர்வர்கள் வ்யாக்யானம் பண்ணிவைத்தார்களாகிலும்.

228. முன்புள்ளார், பின்புள்ளார், ஸகல வ்யாக்யானங்கள்.......

(ஸ்ரீவசந பூ.) 307. "இரக்கமுபாயம், இனிமை உபேயம்" என்னக்கடவதிறே.

399. * எதிர்சூழல்புக்கு * என்கிறது அவதாரபரமாக மற்றுள்ளாராலே வ்யாக் க்யாதமாயிற்றாகிலும் இப்போதிவர் இவ்விடத்தில் வ்யாப்திபரமாக வருளிச் செய்கிறார். அநேக யோஜநைகளுண்டாயிறே யிருப்பது.

(தத்வத்ரய.) * இச்சயா யதுபாதேயம் யஸ்யாதிசயஸித்தயே, உபயாநுபயைகைக ஜுஷா தௌ சேஷசேஷிணௌ. * என்று சேஷ சேஷிலக்ஷணத்தை அபியுக்தரானவர்களும் சொல்லிவைத்தார்கள்.

(ஆசார்யஹ்ரு) 21. "கட்டிப்பொன்போலே சேஷத்வம்; பணிப்பொன்போலே பாரதந்த்ர்யம்." என்னக் கடவதிறே.

25. "ஆனந்தம் அவன் ப்ரீதியைத் துளிரெழுப்ப" என்கிறபடியே.

50. வ்யாக்யானங்களில் 'பண்புடை வேதம்' என்றொழிய 'பண்புரை வேதம்' என்று பாடமும் இசை கோள் வேதம் என்கிறதுக்கு ஸாமவேத பரத்வமும் கண்டதில்லை யேயாகிலும் ஆப்ததமரான இவர் இப்ப்ரபந்தத்திலே இப்படியருளிச் செய்கையாலே இப்படியும் கொள்ளவேணும்.

104. "கர்ம ஸம்பந்தமறுகையாலே ஸூக்ஷ்ம சரீரமிருக்கைக்கு ஹேதுவில்லாமை யால் இங்கே கழித்துவிடலாயிருக்கச் செய்தே விரஜாபர்யந்தம் இவனுக்கு கமநஸாதந

$ பெரியவாச்சான் பிள்ளை யென்கிற ஸ்பஷ்டநிர்தேசமுள்ளது இவ்விடமொன்றே.

acharya.org

மாக ஈச்வரன் தன்னிச்சையாலே வைத்து விரஜையிலே உள்புக்கவாறே கழித்துவிடும்" என்றிறே நம் ஆசார்யர்கள் அருளிச்செய்வது.

## 22. நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர்.

(ஸ்ரீவசநபூ.) 5. * இதுதன்னை நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் தத்வத்ரய ப்ரபந்தத்தில் ப்ரமாணாதிகாரத்திலே அருளிச் செய்தாரிறே ("இதுதன்னை" என்றது—மற்ற இதிஹாஸங்களிற் காட்டில் ஸ்ரீராமாயணத்திற்குண்டான ப்ராபல்யத்தை என்றபடி.)

(அவ்விடத்திலேயே மேலே) (அநேக புராண ப்ரசஸ்தமாயிருந்துள்ள மஹாபாரதமும் ஸ்ரீராமாயணத்தோபாதி ப்ரபல ப்ரமாணம்.) இதுவும் நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் தாமேயருளிச் செய்தார்.

(தத்வத்ரய) அவதாரிகை—நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர் ஆச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களுடைய ப்ரபந்த நிர்மாணத்துக்கும் கருத்து இதுவிறே.

120. இதுதன்னை நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர் "நிமேஷம் பதினைந்துகொண்டது காஷ்டை..........ப்ரஹ்மாயுஸ்ஸுக்குப் பரமென்று பேராம்" என்று ஸுவ்யக்தமாக வருளிச்செய்தார்.

151. ஸத்யகாமனாகையாவது—ஸாந்தீபநிபுத்ரனைக் கொண்டுவந்தாப்போலே ஸகலாபேக்ஷிதங்களும் முடிக்கவல்லனாகை. என்றிறே நடுவில் திருவீதிப்பிள்ளைபட்டர் தத்வத்ரயத்திலே அருளிச் செய்தது.

(அங்கேயே, மேலே) க்ருதியாகையாவது—ஆச்ரிதருடைய அபேக்ஷிதம் பூர்ணமானால் தான் க்ருதக்ருத்யனாகை. என்றிறே (நடுவில் திருவீதிப்பிள்ளை) பட்டருமருளிச் செய்தது.

(அங்கேயே, மேலே) க்ருதஜ்ஞனாகையாவது—ஆச்ரிதருடைய ஸுக்ருதலவமொன்றையுமே நினைத்து தான் செய்த நன்மைகளொன்றும் பாராதேயிருக்கை என்று இதுவும் (நடுவில் திரு—.) பட்டர் அருளிச்செய்தார்.

160. "அவர்ஜநீயமான ராகமோ" என்று நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டரருளிச் செய்ததாமித்தனை.

(ஆசார்யஹ்ரு.) உத்தரவீதி குடிபுகுருகிறபோது பிள்ளை வானமாமலைதாஸர் ஸஞ்சரணத்தாலே ஸ்தலசுத்தி பண்ணின நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டரும்.

## 23. ஆச்சான் பிள்ளை.

(ஸ்ரீவசநபூ.) 11. இவ்வுபதேசக்ரமம் இவர்தாமருளிச்செய்த பரந்தபடியிலும் ஆச்சான் பிள்ளையருளிச்செய்த பரந்தரஹஸ்யத்திலும் விஸ்தரேண காணலாம்.

49. ஜிதந்தாவ்யாக்யாநோபோத்காதத்திலே 'ப்ரபத்திக்கு அதிகாரிகள் அஜ்ஞரும் ஸர்வஜ்ஞரும் பக்திபரவசருமென்று த்ரிவிதராக பட்டரருளிச் செய்தாரிறே' என்று தொடங்கி........என்று ஆச்சான் பிள்ளையருளிச் செய்தார்.

332. "ஆசார்யன் அர்த்தகாமங்களிலே நசையற்றவனாகையாலே அவை ஹேதுவாகப் பொறுக்கவும் வெறுக்கவும் ப்ராப்தியில்லை; இனி இவனுடைய ஹித ரூபமாக வெறுத்தானாகில் அதுவும் ப்ராப்யாந்தர்க்கதமாகக் கடவது" என்று இதுதன்னை மாணிக்கமாலையிலே ஆச்சான்பிள்ளையருளிச் செய்தாரிறே.

acharya.org

(தத்வத்ரய) அவதாரிகை—நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர் ஆச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களுடைய ப்ரபந்த நிர்மாணத்துக்கும் கருத்து இதுவிறே.

3. நடுவில்திருவீதிப்பிள்ளை பட்டரும் ஆச்சான்பிள்ளையும் முதலான ஆசார்யர்கள் தத்வத்ரயமருளிச் செய்கிறவிடத்தில் அசித்துபக்ரமமாக அருளிச்செய்தார்கள்.

35. "இவனுடைய புத்திமூலமான ப்ரயத்நத்தையபேக்ஷித்து ஈச்வரன் அநுமதிதானம் பண்ணுகையாலே அந்த க்ரியாநிபந்தநமான புண்யபாபங்களும் சேதநனுக்கேயாகிறது" என்று விவரணத்தில் ஆச்சான் பிள்ளையும்....

103. "கார்யோத்பாதகங்களான தத்வங்கள் ஸ்வஸ்வகாரணவ்ருதங்களாய்க் கொண்டே உத்பாதிக்கிறதென்று கொள்ளவேணும்" என்று தத்வத்ரய விவரணத்திலே ஆச்சான் பிள்ளை......

(அங்கேயே, மேலே) "இது தத்வத்ரய விவரணத்தில் ஆச்சான் பிள்ளையருளிச் செய்த க்ரமம்.

(அங்கேயே, மேலே) தத்வத்ரய விவரணத்தில் தந்மாத்ரத்துக்கு ஆவரணம் சொன்னவோபாதி......

124. இதுவிறே தத்வத்ரயவிவரணத்தில் ஆச்சான் பிள்ளை ப்ராதாந்யேந அருளிச் செய்தது.

142. ......ஒரு யோஜனையுமுண்டிறே கத்யவ்யாக்யானங்களிலே நஞ்சீயர் ஆச்சான் பிள்ளை முதலான ஆசார்யர்களருளிச் செய்தது.

149. "எம்பெருமானுடைய திவ்யாத்ம குணங்களாவன—ஜ்ஞாந சக்த்யாதி ஷட்குணங்களும் அகிலேபிறந்த ஸௌசீல்யாதிகளும்" என்கிற இவ்வாக்யத்துக்கு அர்த்தமெழுதுகிற வளவில் "அகிலேபிறக்கையாவது—வஸ்தூத்கர்ஷாபாதக ஷாட்குண்யாயத்த குணபாவமாகை" என்றிறே விவரணத்தில் ஆச்சான் பிள்ளையருளிச் செய்தது.

181. ......இது காசரணத்யவயவயோகியாகாநிற்கச் செய்தேயும் நித்யமாயேயிருக்கும் என்றிப்படி விவரணத்திலே ஆச்சான் பிள்ளையருளிச் செய்தாரிறே.

(முமுக்ஷுப்படி) 12. "ஷடக்ஷரி வ்யாப்ய பதார்த்தங்களையும் வ்யாபகப்ரகாரத்தையும்..........அவற்றிற்காட்டில் இதுக்கு அர்த்தபௌஷ்கல்ய நிபந்தநமான ஆதிக்யமுண்டு" என்று.........ஸுஸ்பஷ்டமாக ஆச்சான் பிள்ளையருளிச் செய்தாரிறே.

97. இதுதான் நடுவில்திருவீதிப் பிள்ளைபட்டர் ஆச்சான் பிள்ளை இவர்களருளிச் செய்தப்ரபந்தங்களிலே ஸுஸ்பஷ்டம்.

(அங்கேயே, மேலே) "லக்ஷ்மீப்ராப்ருதி மஹிஷீவர்க்கங்களும்" என்றிறே ஆச்சான் பிள்ளையருளிச் செய்தது.

(அங்கேயே, மேலே) "பஞ்சோப நிஷந்மயமாகையாலே பரமபதமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்" என்றிறே ஆச்சான்பிள்ளையருளிச் செய்தது.

(அங்கேயே, மேலே) "குணத்ரயாத்மிகை யாகையாலே மூலப்ரக்ருதியும் ஸமூஹாத்மிகையாயிருக்கும்" என்றிறே இதுக்கும் ஆச்சான் பிள்ளையருளிச் செய்தது.

(அங்கேயே, மேலே) "அஹோராத்ராதி விபாகங்கள் அநேக மாகையாலே காலமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்" என்றிறே இதுக்கும் ஆச்சான் பிள்ளையருளிச் செய்தது.

99. "தன்குணங்களிலே ஈச்வரன் வ்யாபிக்கும் போது......வ்யாபிக்கவேணும்; ஆகையாலே அநவஸ்தாதுஸ்ஸ்தமாம்" என்று இதுதன்னை ஸுஸ்பஷ்டமாக ஆச்சான் பிள்ளை அருளிச் செய்தாரிறே.

(த்வயப்ரகரணவதாரிகை.) ஆச்சான் பிள்ளை ஜீயர் முதலானரும் இந்த ப்ரகாரமிறே அருளிச்செய்தது.

acharya.org

(ஆசார்யஹ்ரு.) 99. (விவேகவிவரணத்தில்) ஆகையிறே "விவேகமாவது *ஆஹார சுத்தௌ ஸத்வசுத்தி:* என்கிறபடியே அந்தஃகரணசுத்திக்கடியான அந்ந சுத்தியென்று ஆச்சான்பிள்ளையருளிச் செய்தது.

## 24. அழகிய மணவாளப் பெருமாள் நாயனர்.

(ஸ்ரீவசந பூ.) 159. ("உத்தரவாக்யத்தாலே ப்ராப்யஞ் சொல்லுகிறது, ப்ராப்யாந் தரத்துக்கு அன்றென்கை" இத்யாதியாலே முமுக்ஷுப்படியிலும் இவர்தாமேயருளிச் செய்தாரிறே.) "* திருமாலைக் கைதொழுவர் * அடியாரைச் சேர்தல்தீர்க்குந் திருமாலை * என்கிறபடியே புருஷகாரம் முன்னாகப் பற்றி ப்ரயோஜனங்களைக் கொண்டகலாதே அவற்றை யொழிந்து ஒண்டொடியாள் திருமகளுமவனுமான சேர்த்தியிலடிமையைப் பேறென்று கீழ்ச் சொன்ன உபாயபலத்தைக் காட்டுகிறது பிற் கூறு" என்றிறே இவர்திருத்தம்பியாரும் அருளிச்செயல் ரஹஸ்யத்திலருளிச்செய்தது.

(தத்வத்ரய.) 46. இவருடைய திருத்தம்பியாரும் ஆசார்ய ஹ்ருதயத்திலே அவித் யாகாரணம் அநாத்யசித்ஸம்பந்த மென்று அருளிச் செய்தாரிறே.

(முமுக்ஷுப்படி) 129. "........விளைவதறியாதே முறுவலுக்குத் தோற்றுச் சொல் வழிபோமவனைப் பொறுப்பிக்கு மென்னுமிடம் சொல்லவேண்டா விறே" என்று இது தன்னை இவர் திருத்தம்பியாருமருளிச்செய்தாரிறே.

(ஆசார்யஹ்ரு.) 103. இந்த யோஜனையைப் பற்றவும் பூர்வயோஜனையே இதி னுடைய பட்டோலையான பெரியபடிக்குச் சேருவது.

113. இந்த யோஜனை இதன்பட்டோலையான க்ரந்தத்தில் இவரருளிச் செய்த மர்யாதைக்குச் சேரும்.

127. விசிந்தன மென்கிறவிதுக்கு இப்படி வ்யாக்யானம் பண்ணிற்று இதின்பட் டோலையானதிலே "உறுமோவென்று நித்யசத்ருவை வென்று புலன் கொள்வடிவை விசிந் தயனாயிருக்கும்" என்று விசிந்தயந் என்றொருவசன முண்டாகவுமெடுத்து இப்படி இவர் தாமே அருளிச் செய்துவைக்கையாலே.

## 25. வேதாந்ததேசிகர்.

(தத்வத்ரய.) 39. (இப்படி தார்ய வஸ்துக்களை ஸ்வரூபஸங்கல்பங்களிரண்டாலும் தரிக்கு மென்னுமிடம் அபியுக்தராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது. எங்ஙனேயென் னில்;) "ஈச்வரன் தன்ஸ்வரூப நிரூபகதர்மங்களுக்கும்........ஸங்கல்பாச்ரித மென்னக் கடவது" என்றிப்படி ரஹஸ்யத்ரயஸாரத்திலே ப்ரதிபாதிக்கையாலே.

80. *இஹ ஜடாம் ஆதிமாம் கேசிதாஹு:* என்றிறே அபியுக்தரும் சொல்லிற்று.

82. இதுதான் அபியுக்தராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது. எங்ஙனே யென்னில், த்ரிவிதாசேதநங்களென் றெடுத்து......ப்ரமாண ப்ரதிபந்நார்த்தத்துக்கு யுக்தி விரோதம் சொல்லவழியில்லை" என்றிப்படி ரஹஸ்யத்ரயஸாரத்திலே ப்ரதிபாதிக்கையாலே.

acharya.org

## 26. வில்லிபுத்தூர்ப்பகவர்.

(ஆசார்யஹ்ரு.) 32. திருவயிந்திர புரத்திலே வில்லிபுத்தூர்ப்பகவரென்பா ரொரு
வர்...எல்லாருமொருதுறையிலே அநுஷ்டானம் பண்ண, தாம் தனியே ஒரு துறையிலே
அநுஷ்டானம் பண்ணுவாராய், ஒருநாள் அநுஷ்டானம்பண்ணி மீளாநிற்கச்செய்தே
இருந்த ப்ராஹ்மணர் 'ஜீயரே! எங்கள் துறையிலே அநுஷ்டானம்பண்ண வாராதொழி
கிற தென் ?' என்ன ; * விஷ்ணுதாஸா வயம் யூயம் ப்ராஹ்மணா வர்ணதர்மிண:, அஸ்மாகம்
தாஸவ்ருத்தீநாம் யுஷ்மாகம் நாஸ்தி ஸங்கதி:* என்று துறை வேறிட்டுப் போனாராயிற்று.

## 27. வேதாசார்யபட்டர்.

(ஆசார்யஹ்ரு.) 53. காண்க. [" வேதகுருபதேசம் " என்று மூலம்.

## 28. வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயர்.

(ஸ்ரீவசந பூ.) 6. மற்றைப் பிராட்டிமார்க்கும் ஸூரிகள் முதலான ததீயர்க்கும்
இவள் ஸம்பந்தமடியாக வருகிற புருஷாகாரத்வமிறேயுள்ளது ; இவளைப்போலே ஸ்வதஸ்
ஸித்தமன்றே. ஆகையிறே * ஏதத்ஸாபேக்ஷஸம்பந்தாத் அந்யேஷாமமலாத்மநாம், தேவீ
ஸூரிகுரூணாஞ்ச கடகத்வம் நது ஸ்வத:* என்று தீபஸங்க்ரஹத்திலே ஜீயரருளிச் செய்தது.

381. " இந்த விபூதித்வய விஷயமான பாத சப்தமும் த்ரிபாச்சப்தமும் அல்பத்வ
மஹத்த்வங்களுக்கு உபலக்ஷண மித்தனையொழிய பரிச்சேதபரமன்று ; லீலாவிபூதி
யிலண்டங்கள்தானே அஸங்க்யாதங்களாயிறே யிருப்பது " என்று தீபப்ராகாசத்திலே
ஜீயரருளிச் செய்கையாலே......

(தத்வத்ரய.) 35. " இப்படி கர்த்ருத்வம் பரமாத்மாயத்தமானாலும்.......ஸர்வப்ரவ்
ருத்திகளிலும் சேதநனுடைய ப்ரதமப்ரயத்நத்தை அபேக்ஷித்துக் கொண்டு பரமாத்மா ப்ர
வர்த்திப்பியா நிற்குமென்றதாய்த்து " என்று தீபப்ராகாசத்திலே ஜீயருமருளிச் செய்த அர்த்
தங்கள் இவ்விடத்திலே அநுஸந்தேயங்கள்

103. தத்வநிரூபணத்திலே ஜீயரருளிச் செய்தது மொருக்ரமமுண்டு ; அதாவது—
பூதாதியில் நின்றும் சப்ததந்மாத்ரை பிறக்கும்.......

(அங்கேயே, மேலே) * பூர்வபூர்வதந்மாத்ரம் உத்தரோத்தர தந்மாத்ரத்தையும் தத்
விசேஷத்தையும் ஆவரிக்கும் " என்று ஜீயரருளிச் செய்கையாலும்....

(அங்கேயே, மேலே) தத்வநிரூபணத்தில் தந்மாத்ர தத்விசேஷங்களிரண்டுக்கும்
ஆவரணம் சொல்லுகிறவளவில்.......

(முமுக்ஷுப்படி) 75.......என்று தீபப்ராகாசத்திலும்......என்று ரஹஸ்யத்ரயார்த்த
விவரணக்ரமமருளிச் செய்த ப்ரபந்தத்திலும் விவரண லக்ஷணத்தை ஜீயரருளிச் செய்தாரிறே

(த்வயப்ரகரணவதாரிகை.) ஆச்சான் பிள்ளை ஜீயர் முதலானாரும் இந்த ப்ரகாரமிறே
அருளிச் செய்தது.

ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசாரியர் தொகுத்த
**மாமுனிவன் மேற்கோள்விளங்கு முற்றிற்று.**

ஜீயர் திருவடிகளே சரணம்.

ரத்னம் அச்சகம், 11, பத்திரையன் வீதி, மதராஸ்-1.

acharya.org